இரட்டையர் பிரபந்தங்கள்.

ஆராய்ச்சிகளுடன்

திருவாவடுதுறை ஆதீனம்

உ

ஸ்ரீ ஆனந்தமா நடராஜர்

அபிடேகநாள் வெளியீடு

விசய - ஆவணி - 7உ

திருவாவடுதுறையாதீன வெளியீடு – 67.

உ

சிவமயம்.


இரட்டையர் பிரபந்தங்கள்.

1. தில்லைக்கலம்பகம்
2. திருவாமாத்தூர்க்கலம்பகம்
3. ஏகாம்பரநாதருலா

திருவாவடுதுறை ஆதீனம்.

ஸ்ரீ வெங்கடேஸ்வர் பிரஸ், கும்பகோணம்.

இப்பிரதி வேண்டுவோர் தனித்தனி எட்டணுத் தபால் தலைச்சீட்டு **ஆதீன லைபரேரியனுக்கு** அனுப்பிப் பெற்றுக்கொள்க. ஒரு புத்தகத்துக்குமேல் ஒருவர் பெற இயலாது.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரட்டையர் பிரபந்தங்கள்.

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து
இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிகமூர்த்திகள்
கட்டளையிட்டருளியபடி

அவ்வாதீன வித்துவான்
த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையால்
பல பிரதிகளைக்கொண்டு பரிசோதித்து
நூதனமாக எழுதிய ஆராய்ச்சி முதலியவற்றுடன்
பதிப்பிக்கப்பெற்றது.

விசய – ஆவணி.
1953.

உ


சிவமயம்.

திருச்சிற்றம்பலம்,

" கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி
 காட்டும் வெண்ணெ
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான
 பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி
 வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி
 தழைக மாதோ."

திருச்சிற்றம்பலம்.

— ஸ்ரீ மாதவச்சிவஞானயோகிகள்,



இருபத்தொன்றாவது குருமஹாசந்நிதானம்

ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள்

சிவமயம்.

முகவுரை.

தேவாரம்.

திருச்சிற்றம்பலம்.

"அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையி னகத்தானை யணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கடங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே."

திருச்சிற்றம்பலம்.

— திருநாவுக்கரசுசுவாமிகள்.

தெய்வச் செந்தண்டமிழ் மொழிக்கு உரியனவாகக் கொள்ளப்படும் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்பர் பெரியோர். கலம்பகம் என்னும் பிரபந்தமும் அவற்றுள் ஒன்றாகும். கலம்பகத்துக்குரிய இலக்கணம் பன்னிருபாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கணவிளக்கப் பாட்டியல் முதலிய நூல்களால் அறியப்படும். இதன் இலக்கணம் வருமாறு:—

"ஒருபோகும், வெண்பாவும், கட்டளைக்கலித்துறையும் முதற்கவியுறுப்பாக முதலிற்கூறிப் புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் இப்பதினெட்டுறுப்புக்களும் இயையுமாறு மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, கலிநிலைத்துறை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, ஆசிரியத்துறை, வெண்டுறை முதலியவற்றால் இடையிடையே வெண்பாவும் கலித்துறையும் விரவிவர மடக்குடைச் செய்யுளும், வண்ணம், சந்தம் முதலியனவும் பொருந்த அந்தாதித் தொடையால் முற்றற இறுதியும் முதலும் மண்டலித்துப்பாடுங்கால் நூறும், தொண்ணூற்றைந்தும், தொண்ணூறும், எழுபதும், ஐம்பதும், முப்பதுமாகப்பாடுவதொரு பிரபந்தமாம்."

"சொல்லிய கலம்பகஞ் சொல்லி லொருபோகு
முதற்கண் வெண்பாக் கலித்துறை புயமே
அம்மனை யூசல் யமகங் களிமறஞ்
சித்துக் கால மதங்கி வண்டே
கொண்டன் மருள்சம் பிரதம் வெண்டுறை
தவசு வஞ்சித் துறையே யின்னிசை
புறமே யகவல் விருத்த மெனவருஞ்
செய்யுட் கலந்துட னெய்திய வந்தம்
ஆதி யாக வருமென மொழிப."

—பன்னிருபாட்டியல்.

'கலம்பகத்துக் கிரட்டையர்கள்' என ஆன்றோர்களால் சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்ட அவருடைய பிரபந்தங்களில் இரண்டு கலம்பகங்கள் உள. ஒன்று தில்லைக்

கலம்பகம், மற்றொன்று திருவாமாத்தூர்க்கலம்பகம். இக் கலம்பகங்கள் இரண்டும் சொல்லாலும் பொருளாலும் தமக்குத் தாமே ஒப்புடையன. இரட்டைப்புலவர்களாகிய இவர்கள் வாக்கில் சிவபரத்துவம் கொழிக்கும். " சிதம்பர தரிசனத்திற்கு வந்த இரட்டையர்களைநோக்கி 'திருப்பாதிரிப் புலியூருக்குத் தொல்காப்பியத்தேவர் இயற்றியது போல நீங் கள் இத்தலத்திற்கு ஒருகலம்பகம் இயற்றியருள வேண்டும்' என்று அக்காலத்திலே சிதம்பரதலத்திலேயுள்ள அடியார் குழாங்கள் வேண்டினர். இரட்டையர்கள்" சிவபெருமான் மீது கலம்பகம்பாடுதற்குயாம் வல்லேமல்லேம்" என்றார்கள். கேட்டவர்கள் அதனால் தடைப்படலின்றிப்பின்னும்வற் புறுத்த, அவர்கள் அப்பொழுதும் துணிவின்றித் திருப் பாதிரிப்புலியூர்க்கலம்பகச் சுவடியிற் கயிறுசாத்திப்பார்த்த னர். அப்பொழுது அக்கலம்பகத்தில் உள்ள " பாடுவார் பாடும் பரிசில் வரிசை யெல்லாம்—ஆடுவாரன்றி அயலா ரறிவாரோ—தோடுவார் காதன்றே தோன்றாத் துணையையர் —பாடுவார் ஓரிருவர்க் கிட்ட படைவீடே" என்னும் பதின் மூம் பாடல் அகப்பட்டது. அதனைக்கண்ணுற்று இப்புலவர் கள் இப்பாடலின் பின்னிரண்டடியின் பொருளையறிந்து மனமுருகித் தம்மைப்பாடும்படி **ஸ்ரீ ஆனந்தநடராஜரே** கட்டளையிட்டருளியதாக நினைந்து '**தில்லைக்கலம் பகத்தை**' இயற்றி முடித்தார்கள்" என்பர் பெரியோர். இவ்வரலாறு தமிழ் நாவலர் சரிதையிலிருந்து ஊகித்தறிந்து எழுதப் பெற்றதென்பர் மகா மகோபாத்தியாய-டாக்டர்-ஸ்ரீமத் ஐயரவர்கள்.

தில்லைக்கலம்பகம் தில்லையினது கலம்பகம் என விரி யும். ஆறாம் வேற்றுமைத்தொகை. இரண்டனுருபும் பொரு

ளும் உடன் தொக்க தொகையாகக்கொண்டு, தில்லையைப் பற்றிய கலம்பகம் எனவும் பொருள் கொள்ளலாம். எனவே, தில்லையில் கோயில் கொண்டருளும் ஸ்ரீ நடராசப்பெருமானைப்பற்றிப்பாடியபிரபந்தம் என்பது கருத்து. இப்பிரபந்தத்திலே 'பலவகைப் பொருள்களும் அகப்புறத்துறைகளிற் பலவும் பலவகையாப்புக்களும் விரவிக்கலந்தமையின் இப்பெயர்வந்தது' என்பர் பெரியோர்.

தேவாரம் பெற்ற சிவதலமாகிய கோயில் தில்லை, சிதம்பரம் எனவும் பெயர்பெறும். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்—2, திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்-8, சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்-1. (ஆக -11.) தில்லைச்சிற்றம்பலம், பெரும்பற்றப்புலியூர் என்பன தேவாரத்தில் பயின்று வந்துள. 'தில்லைபாதி திருவாசகம் பாதி' என்னும் பழமொழி மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த திருவாசகத்திலே பெரும்பகுதியும் தில்லைச் சிற்றம்பலவரைப் போற்றியதென்பதை விளக்கும். திருக்கோவையார் முழுவதும் தில்லைக்கூத்தனையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டுள்ளதாகலின் திருச்சிற்றம்பலக்கோவையார் எனவே அது வழங்கப்படும். ஆன்றோர் திருக்கோவையாரைக் கோவைத்திருவாசகம் எனவே வழங்குவதுங் காண்க. இதனல், திருக்கோவையார் திருவாசகத்தின் பகுதியே ஆம் என்பது பெறப்படுகின்றது. இனி, திருவிசைப்பா ஆசிரியர்கள் பெரிதும் சிதம்பரத்தையே போற்றியிருக்கின்றனர். திருவிசைப்பாவிலே பதினைந்து திருப்பதிகங்கள் தில்லையைப் பற்றியனவே. சேந்தனர் அருளிச்செய்த திருப்பல்லாண்டு கோயிலைப்பற்றியதாக ஒரு திருப்பதிகமே உள்ளது. பதின்மூன்று திருப்பாட்டுக்கள் உள்ள அப்பதிகத்து முதற்றிருப்

பாட்டிலே 'மன்னுக தில்லை வளர்க நம்பத்தர்கள்' என்று அருளியிருப்பது காண்க. பத்தாந்திருமுறையாகிய திருமந்திரமாலையில் பல பகுதிகள் தில்லைக்கூத்தப்பிரானாருடைய கூத்துக்களின் சிறப்புக்களையே பேசுகின்றன. திருவம்பலச் சக்கரம் என்னும் பகுதி யந்திர மந்திர முறைகளை அறிவிக்கின்றன. பதினோராந்திருமுறையில் சேரமான்பெருமாள் நாயனார் அருளிச்செய்த பொன்வண்ணத்தந்தாதியும், பட்டினத்துப்பிள்ளையார் அருளிச்செய்த கோயில்நான்மணிமாலையும், நம்பியாண்டார்நம்பிகோயிற்றிருப்பண்ணியர்விருத்தமும் இத்தலத்தைப் பற்றியனவே. திருத்தொண்டர் பெரிய புராணமாகிய பன்னிரண்டாந்திருமுறையிலே தில்லை வாழந்தணர் புராணம், திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம், திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் புராணம், திருநாளைப் போவார்நாயனார் புராணம் முதலிய புராணங்களிலும் இத்தல சம்பந்தமான செய்திகளும் ஸ்ரீநடராச மூர்த்தியின் பெருமையும் பேசப்பட்டுள்ளன. சந்தானகுரவருள் ஸ்ரீ உமாபதி சிவம் செய்தருளிய கோயிற்புராணம், கொடிக்கவிகளும் இத்தலச்செய்திகளேயாம்.

இனி, பிற்காலத்து ஆன்றோர்களில் பெரும்பற்றப்புலியூரானைப் பேசாதோர் யாவர்? இத்தில்லைக்கலம்பகத்தையன்றி, புராணத்திருமலைநாதர் செய்த சிதம்பர புராணமும், யாழ்ப்பாணத்துத்தெல்லிப்பிழை சிவாநந்தையர் இயற்றிய புலியூர்ப்புராணமும், இயற்றினார்பெயர் அறியப்படாத தில்லையுலாவும், ஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் அருளிச் செய்த சிதம்பரமும்மணிக்கோவை, சிதம்பரச்செய்யுட் கோவைகளும், தருமபுர ஆதீனத்து ஸ்ரீசிதம்பரநாத முனிவர் அருளிய நடராசசதகமும், தில்லைவிடங்கன் மாரிமுத்துப்

பிள்ளையால் இயற்றப்பெற்ற புலியூர்வெண்பாவும், இவ் வாதீனத்து மஹாவித்துவான்—திரிசிரபுரம் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய தில்லைபகமவந்தாதியும், இவ் வாதீன வித்துவ சிரோமணி சபாபதிநாவலரவர்கள் இயற்றிய சிதம்பரசபாநாத புராணமும்—திருச்சிற்றம்பல யமகவந்தாதி யும் இத்தல சம்பந்தமானவையே. தனிச்செய்யுட்கள் எத்தனையோ பல. காளமேகப்புலவர் பாட்டுக்களும் உள. 'சிற்சபையிலானந்தநிர்த்தமிடு கருணைகரக்கடவுளே' எனத் தாயுமானவ சுவாமிகள் பத்துப்பாடல்களால் தனியே துதித் திருக்கின்றனர். கல்லாடனுர் இயற்றிய கல்லாடமும் தில்லையையே கூறுவது.

இனி, இப்புலவர்கள் தில்லைக்கலம்பகம் பாடத் தொடங்கி ஆன்றோர் ஆசாரப்படியே இந்நூலுக்கு விநாயகர் காப்பாக 'கற்பக விநாயகக்' கடவுளை அமைக்கின்றனர். அவ் விநாயகரைப்பாடவந்தவர் 'கந்தனுக்கு முன்பிறந்த கற்பக மால் யானை' என முருகவேளையும் கூடவைத்துப்பாடினர். இதனுல், செங்குந்தர் மரபில் தோன்றிய அவர்கள் இயல் பாகவே தம்மரபினருக்குள்ள சிவபத்திச் செல்வத்துடன் சிறப்பாக அமைந்த முருகபத்தியையும் வெளிப்படுத்தியமை காணலாம். முதற்பாடலிலே தில்லையாகிய பெரும்பற்றப்புலி யூரிலேயுள்ள மன்றங்கள் திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம் பேரம்பலம் எனக்குறிக்கப்பட்டுள. இறைவர் திருவடி சாலோக, சாமீப, சாரூபந்தருவன என்றும், அதனுல் சிவ கங்கையில்நீராடித்திருவைந்தெழுத்தை விதிப்படிகணித்துப் பூமாலை புனைந்தேத்திச் செனனம் நீங்குதற் பொருட்டு மலர் சிலம்படியைப் போற்றுவோம் என்றும் அம்முதற்பாடலி லேயே வைத்துக் கூறியதிறம் போற்றுதற்குரியது. இதனுல்,

பெரும்பற்றப்புலியூரானைப் போற்றுவதாற் பெறும்பயன் செனனம் நீங்குவதென்பதும், அதற்குரிய சாதனங்கள் சிவ கங்கையில் ஆடுதலும், திருவைந்தெழுத்து நவிறலும், பூமாலை புனைதலும், அப்பெருமான் மலர்சிலம்படி பரவுதலுமே ஆம்; பிறிதன்று என்பதும் தெளிவாக உணர்த்தப்பட்டமை காண்க. இனி, பொருள் வடிவாய் நின்ற புனிதராகிய தில்லை வானவர் கயவர்க்கு இருள்வடிவாய் நின்ற இறைவர்' எனக் குறிப்பிடுகின்றனர். இத்தொடர்மொழி எத்துணைச்சிறந்த ஆழமான பொருண்மொழி என்பதை உய்த்துணர்க.
இதனை—

“ மெய்கலந்தாரோடுமெய்கலந்தான்றன்னைப்
போய்கலந்தார்முன்புகுதாவொருவனை
உய்கலந்தூழித்தலைவனுமாய்நிற்கும்
மெய்கலந்தின்பம்விளைந்திடும்மெய்யர்க்கே ”

என்னும் திருமந்திரத்தால் அறியலாம். மற்றும், “கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானைக் கரவார்பால்-விரவாடும்பெருமானை விடையேறும் வித்தகனை” என்ற திருநாவுக்கரசுசுவாமிகள் திருவாக்கானுமறிக. “ஐயனை அத்தனை ஆளுடையாமாத் தூரணணலை—மெய்யனை மெய்யார்க்கு மெய்ப்பொருளான விமலனை” என்பது சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.

இனி, திருமால் சக்கரம் பெற்றமை, வெண்பலியேற்றல், கம்பள அசுவதரர் தவஞ்செய்து காதிலே குண்டலமாக இருந்து இறைவருக்கு இசைத்தொண்டு செய்தல், இறைவர் சுந்தரமூர்த்திசுவாமிகள் பொருட்டுப்பரவையார் பால் தூது சென்றமை, ஆற்றிலிட்டபொருளைக் குளத்தில் அழைப்பித்தது, செங்கல்லைப்பொன்னாக்கியது, மாணிக்க

வாசகசுவாமிகள் அருளிய திருச்சிற்றம்பலக் கோவையாரை இறைவர் எழுதியமை, சிறுத்தொண்டநாயனர் பால் பிள்ளைக் கறி வேண்டினமை, மூவர் அருளிய தேவாரத்திருப்பாடல் களில் இறைவர் மிகவிருப்பம் வைத்தல் முதலிய பல வரலாறு கள் அங்கங்கே பேசப்படுகின்றன. தில்லையில் நடராச மூர்த்தியைத் தரிசித்தோர் பெறும்பேறும், தரிசியாமல் அவமேபொழுது கழிப்பார் அடையும் பயனும் நன்கு கூறப் பட்டுளது. சிவபெருமான் கரத்தில் மான்தாவுதற்குக் கற் பித்த காரணம் வியத்தற்குரியது. சிவபெருமானுக்கு ஒப்பா கச் சிலர் மால்பிரமர்களைக்கூறுதல் அடாது என்கின்றனர். சிதம்பரத்திலே சென்று 'எப்படிச்செத்தாலும் நல்லதே' என்று கூறுதல் நெஞ்சை உருக்க வல்லதாம். பதமுத்திகளை யெல்லாம் தரவல்லது அருள்வடிவாகிய திருவம்பலமே; பேரம்பலவனை நினையும் போதே சாரூபம் கிடைக்கும்; தமர் தந்தையரொடு அம்பலவாணரைச் சரண்புகுவது எளிது; அம்பலவாணர் திருவடிகளில் அன்பு செய்யாதவர் நிரயம் புகுவர்; கயிலைக்கல்லில் இருக்கும் தேவரீர் எமது நெஞ்சக் கல்லில் இருப்பதும் கடனாகும்; சிவபெருமானையன்றிப் பிற தேவருக்கு ஆன்மாக்களின் பிறப்பறுத்தல்கூடாது என்ற செய்திகள் வற்புறுத்திக் கூறப்படுகின்றன. இனி, தில்லை யரனுக்குத்தலம்—நெல்லை, முல்லைவாயில், நல்லம், வில்ல வனம், நெல்லிக்கா, நல்லூர், மல்லைநகர், கொல்லம், வில்லி புரம், வல்லம், குல்லைவனம், கொல்லிமலை எனக்குறிக்கின் றனர். குடந்தை, கடவூர், தென்குடி, வலஞ்சுழி, புறம்பயம், எறும்பிமலை, செம்பியனல்லூர், அன்பில், புறவம், பழனம், வஞ்சிகளம், இஞ்சிகுடி, அம்பல் முதலிய சிவதலங்கள் அடைமொழியின்றிப்பாடப்பட்டுள. 'புலவோர் தமிழ் இரு

செவிக்குள் வைத்தனே' என மூவர் அருட்பாக்களைப் போற்றிப் பாதுகாக்கின்றனர். தெள்ளுமூவர் கவிபைச்சுமந்தன எனத்தேவாரத்திருமுறையை விதந்து கூறுகின்றனர். இறுதியாகவுள்ள உயிர்வருக்கமோனை ஆசிரியப்பாவிலே பல சிவ தலங்களை எடுத்துக் கூறிச்சிறப்பிக்கின்றனர். சிதம்பரம், ஆரூர், இடைமருது, ஈங்கோய்மலை, உறையூர், ஊறல்மாநகர், எறும்பிமாமலை, ஏடகம், ஐயாறு, ஒற்றியூர், ஓமாம்புலியூர் என்பன அத்தலங்கள். அம்பலக்கூத்தன் எனத்தொடங்கி ஓமாம்புலியூர்ச்சிற்றம்பலவன் என முடிக்கின்றனர். பிருதிவித்தலம் முதலிய ஐம்பூதத்தலங்களும், ஐந்து சபைகளும் பேசப்படுகின்றன. இதில் காஞ்சீபுரம் பிருதிவித்தலம் எனக் குறித்தனர். குற்றாலம்–சித்திரசபை, பழையனூர் (திருவாலங்காடு)–இரத்தினசபை, திருநெல்வேலி–தாம்பிரசபை, (ஆலவாய்) மதுரை–வெள்ளியம்பலம் (இரசதசபை), தில்லை–பொன்னம்பலம் (கனகசபை) என இறைவர் ஐந்து சபைகளும் தெளிவாகக் கூறப்பட்டுள. எல்லாநீரிலும் சிவகங்கை நீரே சிறந்ததெனப் போற்றுகின்றனர்.

பதஞ்சலி வியாக்கிரபாதருக்காக நடனம் செய்தமையும் கூறப்படுகிறது. தெரிசிக்க முத்திதரும் நித்தர் பொற்பதத்தை மறவாமல் பரிசிக்க, வசனிக்க, பணிய, மலரால் அருச்சிக்க, பிரதக்கணம் செய்ய முத்திதருவார் எனக் கூறுவர். எழுபிறப்பும் தொல்லை (துன்பம்) எனவும், சிவகாமிநிலை, சிதம்பரம், திருமூலட்டானம், சிவகங்கை, மகுடாகமம், தலபுராணம், சபை, நான்மறை, சோதிநடமாடல்இவையெல்லாம் தொல்லை (பழமை) எனவும் குறிப்பிடுகின்றனர். சிதம்பரேசர் பூசை மகுடாகமப்படியே என்று எடுத்துக்காட்டினர். தில்லைக்கலம்பகத்து முதலுறுப்பாக நேரிசைபொத்தாழி

சைக்கலிப்பா, நேரிசைவெண்பா, கட்டளைக்கலித்துறையைத் தொடங்கினர். கலம்பக உறுப்புக்களாக—புயவகுப்பு-13, மதங்கியார்-23, களி-31, இடைச்சியார்-37, காலம்-39, கொற்றியார்-56, அம்மானை-60, பாண்-62, மறம்-68, ஊசல் -70, குறம்-72, சித்து-76, சம்பிரதம்-78, மேகவிடுதூது-80, தழை-85, பிச்சியார்-87 என்பன வந்துள்ளன. மருட்பா-54, மடக்கு-18, 30, 89, வகுப்பு-66, இரங்கல்-5, 6, 7, 14, 16, 34, 36, 40, 43, 46, 48, 50, 74, 82, சந்தவிருத்தம்-58.

அகப்பொருட்செய்திகளாக—நாணிக்கண் புதைத்தல், வறுங்களம் நாடிமறுகல், தூது, அவயவத்தருமை சாற்றல், இடமணித்தென்றல், இரங்கல், அவயவங்கூறல், முதலிய துறைகள் காணப்படுகின்றன. காந்தண்மலர் மலையிலே மலரும் முறைமாறிக் 'கடலிலே மலர்வது புதுமை' என நாணிக்கண் புதைத்தலைக் கற்பித்துக் கூறுகின்றனர். (கடல்—கண்; காந்தள்—கை.) இடமணித்தென்ற துறையிலே—கொள்ளிடம், ஆயிக்கால் மண்டபம், திருமதில், பசும் பொற்றோர், நூற்றுக்கால்மண்டபம், சிவகங்கை, கனகசபை, தில்லைச்சிதம்பரம், கோபுரம், தில்லை மூவாயிரவர் என்பன குறிக்கப்பட்டுள்ளன.

சில சொற்கள்— கோனிச்சி, தேனித்தல், பூவணிக வேளாளர், தில்லைக்கோவிந்தர் என்பன.

ஆவணி—புரட்டாசி, ஐப்பசி—கார்த்திகை, மார்கழி—தை, மாசி—பங்குனி, சித்திரை—வைகாசி, ஆனி-ஆடி மாதங்களில் ஆவணி, ஐப்பசி, மார்கழி, மாசி, சித்திரை, ஆனி மாதங்கள் எதுகையில் வைத்துப்பாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இறைவர் திருநாமங்கள்—அம்பலவர், குவளைக் கண்டன், நீலமிடற்றீசன், தில்லைவானவன், தென்புலியூரன், பசுபதி, அம்பலத்தாடி, பேரம்பலவன், தில்லையம்பலவர், தில்லையம்பலக்கூத்தர், திருவம்பலவர், விடைக்கொடியார், ஆதிபுலியூரர், சபையினில்வரதர், தில்லைநிருத்தர், தில்லைநடராசனார், கனகசபைக்கடவுள், ஏமசபைவாணர், அம்பலத்தாடுமையர், தில்லைவாணர், கனகசபாபதி, புலியூரம்பலவர், சபையில் நடித்த சித்தர், காசிக்கும் சேதுவிற்குந்தலைவர், விரிஞ்சற்கும் முகுந்தற்குந்துரை, தில்லையம்பல வாணனார் முதலியன.

அம்மையார்: சிவகாமி, சிவகாமவல்லி, சிவகாமசுந்தரி என்பன.

தீர்த்தம்: சிவகங்கை.

சுவாமி: திருமூலட்டானேசுரர்.

தேவி: உமையம்மை.

விநாயகர்: கற்பக விநாயகர்.

மதுரைத்திருவிளையாடல்கள்:— சங்கப்பலகையில் இருந்து தமிழாராய்ந்தது, பாணனுக்குப் பொற்பலகையிட்டது, நரியைப்பரியாக்கியது, பிட்டுக்குமண்சுமந்தது முதலியன.

மார்கழித்திருமஞ்சனம் சொல்லப்பட்டது.

சில குறிப்புக்கள்:

1. சிற்சபை—திருச்சிற்றம்பலம். (பராசத்தி வடிவம்)

2. கனகசபை—பொன்னம்பலம். திருமஞ்சனத்துக்கு மூர்த்தியை எழுந்தருளப்பண்ணுமிடம்.

3 தேவசபை—பேரம்பலம். (உற்சவமூர்த்திகள்.)

4. நர்த்தனசபை—கொடிமரத்தின் தென்புறம் ஊர்த்துவதாண்டவர்.

5. இராஜசபை—ஆயிரக்கால் மண்டபம்.

அருவம்—திருவம்பலசக்கரம்—மந்திரவடிவம்.

உருவம்—ஸ்ரீ நடராஜ மூர்த்தி.

அருவுருவம்—அழகிய திருச்சிற்றம்பலமுடையார்.

ஸ்ரீநடராஜர் அபிஷேகதினம்.

சித்திரையில் ஓணமுதற் சீரானி யுத்தரமாம்
சத்ததநு ஆதிரையும் சார்வாகும்—பத்திவளர்
மாசிஅரி கன்னி மருவு சதுர்த்தசிமன்
றீசரபி டேகதின மாம்.

2. திருவாமாத்தூர்க்கலம்பகம்.

திருவாமாத்தூர்க் கலம்பகம் என்பது திருவாமாத்தூரினது கலம்பகம் எனவிரியும்; ஆறும்வேற்றுமைத்தொகை. திருவாமாத்தூரைப்பற்றிய கலம்பகம் என இரண்டன் உருபும் பொருளும் தொக்கதொகையாகவும் கொள்ளலாம். திருவாமாத்தூரில் கோயில் கொண்டருளும் சிவபிரானாகிய அழகியநாதரைப்பற்றிய ஒருபிரபந்தம் என்பது கருத்தாகக் கொள்க. அம்மையார் திருநாமம் அழகியநாயகி என்பர்.

இத்தலம் விழுப்புரத்திற்கு அண்மையில் மூன்று கல்தொலை வில் வடமேற்கில் இருக்கிறது. பசுக்கள் பூசித்துப் பரம சிவனைத் தமக்குப் பாதுகாப்பாகக்கொண்ட தலம் என்பர், இராமபிரானால் பூசிக்கப்பெற்றது பிருங்கி முனிவரும் பூசித் துச் சாபம் நீங்கப்பெற்றார் என்ப. ஸ்தல விருட்சம்— வன்னி. சுவாமி சந்நிதி கிழக்கு நோக்கியும், அம்பிகை சந்நிதி மேற்கு நோக்கியும் உள்ளன கோமாதுருபுரம் என்பது இத்தலத்துக்கு வடமொழிப்பெயர். தேவாரத்திருப்பதிகம் பெற்றது (திருஞான—பதிகம்-2; திருநாவு – திருக்குறுந் தொகை-1, திருத்தாண்டகம்-1; சுந்தர-1 ஆக-5.)

ஆமாத்தை: ஆமாத்தூர் என்பதன் மரூஉ.

இறைவர் திருநாமம்: அழகியநாயகர், மாதை நாதனார், மாதைபுங்கவன், மாதைப்பரஞ்சுடர், மாதைநாயகர். ஆமாத்தூர் அழகனார் என்பன.

அம்மையார்: அழகியநாயகி.

விநாயகர்: மால்துயரந்தீர்த்த விநாயகர்.

நதி: பம்பைத்துறை, பம்பைத்திருநதி, பம்பைநதி.

சில குறிப்புக்கள்:- இறைவர் வந்திப்பவர்தம் மனக் கோயில்கொண்டவர்எனல்; அரிக்குப்பொருள் இன்னதெனல்; அழகியநாதரடியவர் இயல்புகள். 'இடையனெறிகின்றமரம் என' என்ற உவமைகாட்டப்பட்டுளது. முதற்பாடலில் மணச்செய்திகள் விளக்கப்பட்டுள. தொல்காப்பியத்தேவர் இயற்றியுள்ள திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகப்போக்கை யொட்டியே இக்கலம்பகம் செய்யப்பட்டது. ஆயினும், சிவ பரத்துவம் நனிமிக்கொழிப்பதாம். மடக்குகள் இன்பந் தருவன. சைவசித்தாந்த சாஸ்திரக்கருத்துக்கள் இதில் அருமையாகவுள்ளன,

இக்கலம்பகச் செய்யுள் தொகை காப்பு-1 நூல்-101 ஆக 102. கலம்பகத்துக்குரிய பதினெட்டு உறுப்புக்களுள் இந்நூலில் வந்தவை வருமாறு:- புயவகுப்பு-7, வலைச்சியார்-28, சம்பிரதம்-46, குறம்-53, மடக்கு-51, இடைச்சியார்-54, மறம்-56, அம்மானை-67, கொற்றியார்-77, சித்து-88-89, காலம்-95, ஊசல்-96, மதங்கியார்-97, பாண்-100. இவைகளையன்றி **யோகினியார்** என்ற உறுப்புப் புதிதாக இதன்கண் வந்துள்ளது.

மதங்கியார்-வாள்சுழற்றி ஆடுபவள், பிச்சியார்-சிவ வேடம் புனைந்து வருபவள், கொற்றியார்-வைணவ வேடத்தினள், மறம்-மறக்குலத்துப்பெண்ணை ஒரு வேந்தன் மணம் பேசிவிடுப்ப வந்த அத்தூதனை அச்சாதித்தலைவன் சினந்து கூறல், குறம்-குறத்தி குறிகூறுதல், சம்பிரதம்-பிறரால் இயற்றமுடியாத அரிய செயல்களைத் தாம் இயற்றுவதாகத் தோற்றும்படி ஒருவன் கூறுதல், சித்து-இரசவாதம் செய்யும் சித்தனைத் தன்னை ஒருவன் கூறுவது, களி-கட்குடியன் கள்ளைச்சிறப்பித்துக்கூறுவது, அம்மானை-மகளிர் மூவர்பாடி அம்மானை ஆடுவதாகக்கூறல்.

இனி, அகப்பொருட் செய்திகளுக்குரிய துறைகள் வருமாறு:- தலைவன் குறைநயந்துரைத்தல்-8, வறும்புனங் கண்டுமறுகல்-9, கழிக்கரைப்புலம்பல்-10-73, அருந்தவர் வாய்மை வற்புறுத்தல்-11, தலைவிபுள்ளொடு கிளத்தல்-13, பருவங்கண்டுபெருமகள்புலம்பல்-15, தலைவிஆற்றுத்தன்மை கூறல்-16, மெய்தொட்டுப்பயிறல்-18, தலைவன்பிரிவு பாங்கியறிந்து தன்மனத்தழுங்கல்-19, தலைவிகார்காலங்கண்டு இரங்கல்-20, தலைவன் மேகத்தொடுபுலம்பல்-24-93, தலைவிசெக்கர் கண்டு இரங்கல்-25, தலைவி நிலவு கண்டிரங்கல்-26, தலை

வன் வருந்தியமை பாங்கி தலைவிக்கு உரைத்தல்-29, தலைவி கையாறெய்திடுகிளவி-30-41, தலைவியை முன்னிலையாக்கல்-31.69-83, தலைவன் குறிப்புவேறாக நெறிப்படக்கூறல்-32, தலைவிவலம்புரி கேட்டு உளமகிழ்தல்-33, தலைவிபாங்கனொடு உற்றதுரைத்தல்-36, காமமிக்க கழிபடர்கிளவி-38-59-87, தலைவியைப்புகழ்தல்-39-50, தலைவன் அழுங்கல்-44, தலைவி மாலைப்பொழுது கண்டு இரங்கல்-45, பொய்ப்பாராட்டல்-48, தலைவன் புல்லொடுகிளத்தல்-52, தலைவன்நீடத் தலைவிவருந்தல்-57-72, தலைவன் முறுவற்குறிப்பு உணர்தல்-62. இறைவன்றனக்குக் குறைநேர் பாங்கி இறையோற் கண்டமை கூறல் -63, தலைவன்வறுங்களநாடி வருந்தல்-79, தலைவிகுருகொடு கையாறெய்திடுகிளவி-74, தலைவன் நெஞ்சொடுவருந்தல்-79, தலைவன் உருவெளித்தோற்றங்கண்டு உளமறுகல்-94, தழை விருப்புரைத்தல்-98 என்பன இந்நூலுள் வந்தன.

3. ஏகாம்பரநாதருலா.

இனி, தமிழ்மொழிக்கு உரியனவாகக் கூறப்படும் 96-வகைப் பிரபந்தங்களுள் உலா என்பதும் ஒன்று. உலாப்புறம் எனவும் இது வழங்கப்படும். பேதை முதல் பேரிளம்பெண் ஈறாகவுள்ள எழு பருவ மாதர்களும் மால் கொள்ளும் வண்ணம் தலைவன் வீதியிற் பவனி போந்தான் என்று கலிவெண்பாவால் கூறப்படுவது இப்பிரபந்தம். பன்னிருபாட்டியல் முதலியவற்றில் இதன் இலக்கணவிரி பேசப்படும். உலாச்செய்யுள் பாடாண்டிணையின்பாற்படும். இங்கே கூறப்பட்ட எழுபருவமகளிரும் பொதுமகளிராவார். இதுபோன்ற சைவப்பிரபந்தங்களில் கூறப்படுவோர் உருத்திரகணிகையராவார்.

"திறந்தெரிந்த பேதை முதலெழுவர் செய்கை
மறந்தயர வந்தான் மறுகென்—றறைந்தகலி
வெண்பா வுலாவாம்......" என்பது வச்சணந்திமாலை.

தமிழ் நாட்டில் உலாப்பிரபந்தங்கள் பல வழங்குகின்றன. தாம் வழிபடுதற்குரிய கடவுளர்மீதும் தம்மை ஆதரித்த தலைவர்கள் மீதும் பண்டைக்காலந்தொடங்கியே பெரியோர் இதனைப் பாடி வருகின்றனர். மிகப்பழையதாகவுள்ளது சேரமான் பெருமாள் நாயனார் செய்தருளிய ஆதியுலா. அது சிவபிரான் மீது பாடப்பட்டது. கவிராக்ஷஸ கூத்தன் கவிச்சக்கரவர்த்தி பாடிய மூவருலா சோழ அரசர் மூவரைப்பாடியது.

ஏகாம்பரநாதருலா என்பது காஞ்சியம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளிய சிவபெருமான் மீது இரட்டையர் இயற்றியது. இதிலுள்ள கண்ணிகள்—556. தேவாரம் பெற்ற தலம் இது: கச்சியேகம்பம் என்பது.

பரம கருணாநிதியாகிய சிவபெருமான், ஸ்ரீகாஞ்சியம்பதியும் தீர்த்தக்குழாங்களும் ஸ்ரீ ஏகாம்பரநாதருமாக எழுந்தருளியுள்ளார். இறைவரே மூர்த்தி தலம் தீர்த்தமாக இருந்து ஆன்மாக்களை உய்யச் செய்வர். ஸ்ரீகாஞ்சீபுரத்தில் உள்ள சிவதலங்கள் பலவற்றுள்ளும் கச்சியேகம்பமே சிறந்ததென்பர். அத்தலத்திலேதான் உமாதேவியார் ஒருமாவின் கீழாகிய சிவபிரானைப்பூசித்தார். நான்கு வேதங்களாகிய மாமரம் தல விருக்ஷம்.

சிவபெருமான் கயிலாயமலையில் தமது திருவருட் சிற்சத்தியாகிய உமாதேவியாருடன் வீற்றிருந்தார். அம்மையார் விளையாட்டாக இறைவருடைய திருக்கண்களைத் தமது திருகரத்தால் பொத்தினர். சூரிய சந்திரர்களுடைய வெளிச்சமின்றி உலகம் இருளடைந்தது. பொத்தியது ஒரு நொடிப்பொழுதாயினும் உலகத்துக்குப்பல ஊழிக்காலஞ்சென்றன. அதனால் தேவர், முனிவர், அந்தணர் முதலியோர் தமது கடன்களைச் செய்யாதொழிந்தனர்.

விதிமுறை தப்பியது அம்மையார் திருவிளையாட்டினாலே என்பதை இறைவர் திருவுளத்தடைத்தார். உலகம் நெறிதப்பிய பாவம் தீருதற்கு, உமையே! நீ சிவாகம விதிப்படி நம்மைப்பூசிப்பாயாக என்றருளினார். அம்மையார் சிவபூசைசெய்ய அமையம் வாய்த்ததே என எண்ணி, சுவாமியை வணங்கி, தேவரீரை வழிபடுதற்குரிய இடத்தை வகுத்தருள்வீர் என்று விண்ணப்பித்தார். பாலிநதி பாயும் தொண்டைநாட்டிலே காஞ்சி நகரில் ஒருமா மரநிழலில் நமது வடிவத்தைப்பூசிக்க என சுவாமி அம்மையாருக்குக் கட்டளையிட்டார். அவ்வாறே காஞ்சிசென்று (கண். 1—17) யானையை முயல் துரத்துமிடம், நிழல் சாயாக்காஞ்சி, செல்கின்றவரைப்பிறர் காணுவகை செய்யுமிடம், ஒருதாளில் மூன்று கமலம் மலரும் தடாகம், தூண்டாவிளக்கு, நோக்குவோருடைய நிழல் காணாக்கிணறு, கிழக்கிலிருந்து மேற்குத்திக்கிலே மிக்க நீரோடிப்பின் மறைந்து போகும் நதிகளும், தேவருடன் அவ்விடத்தில் உண்டாகும் இன்பத்தைதரும் பிலத்துவாரமும், ஞான நெறியில் நிற்போர் விரும் பித்தீண்டினால் செம்பொன் நிறமாக்கும் கல்லும், ஐயனார் உலாவி வரும் வையாளிவீதியும், பகலில் மலரும் செங்குவளையும் இரவில் மலரும் தாமரையும் பொருந்த நடுப்பகலில் மலரும் பாதிரிமரமும், உட்புகுந்தோர்குரக்குருவத்தையடையும் பிலத்துவாரமும், அக்குரக்கினுருவத்தைமாற்றும் பொய்கையும், இயமனால் இறவாத இடமும், இறந்தால் பிறவாத இடமும் ஆகிய அதிசயங்களையெல்லாம் பார்த்து (கண்-18—26) ப்பின்னர் கம்பாநதிக்கரையையடைந்தார். [பெரியபு—திருக்குறிப்பு: காஞ்சிப்புராணம்—விம்மித: பார்க்க.] அம்மையார் கம்பை மணலைக்குவித்துப் பூசித்தலும், நதியில் வெள்ளம் வரப்பண்ணி அம்மையார் வளைத்தழும்பும் நகிற்றழும்பும் தோன்ற இறைவர் வெளிப்பட்டருளுதலும், பங்குனித்திருநாளில் ஒருநாள் பூசைகொண்டு ஆயிரக்கால் மண்டபத்தில் வீற்றிருத்தலும் 52-வரைபேசப்பட்டுள்ளன. அலங்காரஞ்செய்து பின் கண்ணாடி பார்த்தல் 77-கண்ணிகள் வரையில் கூறப்படும்.

தேவார முதலிகள் திருவாசகச்செல்வர் முதலிய அடியார்களும், பூதகணங்களும், நாற்பத்தெண்ணுயிரவரும், நிபந்தக்காரரும் உடன் வரத்திருநந்திதேவர் வேத்திரப்படைதாங்கிவரத் திருத்தேர் மேற்கொள்ளுதல் 102-கண்ணிகள்வரை கூறப்படுகின்றன. வாத்தியங்கள் முழங்கப் பவனி வருதல், திருச்சின்னம் சேவித்தல்-119 வரை; மால்பிரமர் முதலியோர் தத்தம் வாகனங்களில் வருதல், கங்கை, சத்தகன்னியர் உடன் வரல்—நிலமாதர்கள் வீதிகளிலும் கூடகோபுரம் நிலாமுற்றம் தெற்றிமறுகுகளிலும் நெருங்கியிருத்தல் முதலியன 153-வரை சொல்லப்படும். இறைவர் நீற்றுப்பவளக் கோலத்திருமேனியைக் கண்டோர் கூற்றுக்கள் — 185 வரை; வருணிக்கப்படும் இப்பகுதிகள் படிக்கப்படிக்கப் பெரிதும் சுவைதருவன. பேதைப் பருவப்பெண் கூற்றும், அன்னையர் அணைத்தாற்றுதலும். 215- கண்ணிவரையுள்ளன. பெதும்பைப்பருவவருணனை 229-வரையில் சிறக்ககூறுவர். பின்பு, இறைவர் அருளிச்செயல்களை 253 வரை வருணிப்பர். பெதும்பைப்பருவத்தாள் காமுறுதலை அதன்பின் பேசுகின்றார். 266 முதல் 310 கண்ணிகள்வரை மங்கைப்பருவவருணனையும் செயலும் கூறப்படும். 311 முதல் மடந்தைப்பருவமும், அவர் முன் இறைவன் காட்சி தருதலும், பெண்கள் காமுறுதலும், தாயர் சைத்தியோபசாரம் செய்தலும், அவள் இரங்கலும் சொல்லப்பட்டுள்ளன. 357 ஆம் கண்ணி முதல் அரிவைப்பருவ வருணனை; இப்பருவத்திலே இறைவனைக் குழைவிக்கத்தக்க செய்திகளையெல்லாம் சொல்லித் தன் கைக்கிளிளைக்குத் தூதுபோகச் சொல்லியபின், இறைவர் வரத் தொழுது, மாலாகி, அவள் இரங்கிக்கூறும் இரக்கவுரைகள் எவர் மனத்தையும் உருக்குவன. தெரிவைப்பருவம்405ஆம் கண்ணியிலிருந்து தொடங்குகிறது. 416 வரையில் அப்பருவம் வருணிக்கப்படும். பிறகு விறலிவந்து அவளைக்கண்டு புகழ்தல்- இறைவரது தசாங்கத்தைப் பாட விறலியைத் தெரிவை தூண்டுதல் — அவள் தசாங்கம் பாடல் — தெரிவை அதனைக்கேட்டு மாலாதல் — தோழியிடம் கூறல் முதலியன 465—

கண்ணிகள்வரை பேசப்பட்டுள்ளன. இனி, முடிவு வரை பேரிளம் பெண் வருணனை சிவபரத்துவம் மிக்க இன்பந்தந்து சுவைபயக்கும். உடையான் போந்தான் உலா என முற்றும்.

இனி, இப்பிரபந்தங்களின் ஆராய்ச்சிக்கு இவ்வாதீனத்துக் கல்விக்களஞ்சியமாகிய 'சரஸ்வதி மஹால் நூல் நிலையத்தில் உள்ள ஏட்டுச்சுவடிகளும், இவ்வாதீன வித்துவசிரோமணி—சபாபதிநாவலரவர்கள் மருகரும் மாணவரும் ஆகிய சிவப்பிரகாச பண்டிதர் 1883ல் அச்சிட்ட ஆமாத்தூர்க் கலம்பகமும்; திருமயிலை சே. வெ. ஜெம்புலிங்கம் பிள்ளையவர்கள் விகிர்தி—மாசியில் அச்சிட்ட ஷெ பிரதியும், :சென்னை—பிரமநகர் முருகேச முதலியார் 1897-ல் அச்சிட்ட தில்லைக்கலம்பகமும் ஆலாலசுந்தரம் பிள்ளையவர்கள் காஞ்சிப்புராண வுரையுடன் சேர்த்து விகாரி (1897) ஆண்டில் அச்சிட்ட ஏகாம்பரநாதருலாவும் பெரிதும் துணை செய்தன. புதுவை—அருணாசலக்குருக்கள் முன்பு அச்சிட்டதாக வுள்ள தில்லைக்கலம்பகம் கிடைக்கவில்லை.

இனி, இவ்வாதீனத்திலே இப்பொழுது இருபத்தொன்றாவது குருமஹா சந்நிதானமாக வீற்றிருந்து, சிவஞானதான வள்ளலாகச் சித்தாந்த சைவநூல்களையும் செந்தமிழ் நூல்களையும் அச்சிட்டு வழங்கி, சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரிபாலனம் வித்தியா பரிபாலனம் செய்து விளங்கும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக மூர்த்திகள் கருணை** முன்னின்று பாதுகாப்பதாக எனச்சிந்தித்து வந்திந்து வாழ்த்துகின்றேன். குற்றம் பொறுத்தருளுக.

இங்ஙனம்,
சித்தாந்தசைவமணி—

21—8—53. த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளை,
திருவாவடுதுறையாதீனவித்துவான்.

விடுபட்டவை.

.... —இணையிலிமுன்
372 மேவு புளகமுடன் வெண்ணீறு மெய்க்கணிந்து
தேவி யிருந்த செயல்பாரீர்—பூவிற்
373 கரந்து மழைபொழியாக் காலத்தே கம்பை
பரந்து வரும்பெருக்கைப் பாரீர்—விரிந்தபுனல்
374 மாகம்புதைய ....
.........எனமேலே தொடர்ந்துகணக்கிட்டுக் கொள்க



“மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாரறி வாரே.”

— திருமூலதேவர்.

நூலாசிரியர் வரலாறு.

சோழநாட்டிலே ஆடுதுறைக்குத் தென்பால் நான்கு கல் தொலைவில் உள்ள **இலந்துறை** என்னும் ஊரிலே செங்குந்தர் மரபிலே இரட்டையர் தோன்றினர். அவ்விருவரும் உறவின் முறையால் அம்மான் மகனும், அத்தை மகனுமாயினர். இளமைப்பிராயத்திலேயே அவர்கள் பெற்றோரை இழந்தனர். இரட்டையரும் பிறப்பிலேயே அங்கக் குறைவுடையவர்கள். ஒருவர் குருடர், ஒருவர் முடவர். ஆயினும், இருவரும் 'ஈருடம்புக்கு ஒருயிர்போல' மனமொத்து வாழ்வாராயினர். முடவர் தோளிலேறிக்கொள்ள குருடர் அவரைச் சுமந்து செல்வர். முடவர் குருடருக்குக் கண்ணாகவும், குருடர் முடவருக்குக் காலாகவும் விளங்கினர். 'எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்' என்னும் பழமொழிக்கு இலக்காக இரட்டையர் இருந்தனர். முன்னைப் பல பிறவிகளில் ஈட்டிய புண்ணியத்தின் பயனைச் சிவபத்திச் செல்வமிக்கு ஈடுமெடுப்புமின்றிச் சிவதல யாத்திரையிலும் பெருவிருப்புக் கொண்டனர். அங்கங்கே சென்று சிவதரிசனம் செய்து சிவபிரானைப்பாடி மகிழ்வர். பெரும்பாலும் 'அம்மானையே' பாடியுள்ளனர் போலும். கண்கள் பெற்ற பயனை முடவரும், கால்கள் பெற்ற பயனைக் குருடரும் எளிதில் அடைந்தனர். அங்கமெலாம்பங்கமிலாமற்பெற்றும் ஆலய வழிபாட்டிற் சிந்தையின்றி அலைந்து திரியும் நம்மனோருக்கு அவரிருவரும் ஆசிரியராயிருந்து ஆலய வழிபாட்டின் இன்றியமையாமையை அறிவிப்பார் போன்று விளங்கினர். 'கால்களாற் பெற்ற பயன் கறைக்கண்டன் கோயிலை வலம் வருதலாம்' என்பதை யறிந்து வைத்தும் முற்பிறவிகளில் அது செய்யாதார் முடவராவார் எனவும், 'கண்களாற்

பெற்ற பயன் காளகண்டன் உருவத் திருமேனியையும் அவனடியார் திருவேடப்பொலிவையுங் கண்டு மகிழ்தலே ' என்பதை மறந்து வாளா திரிவோர் கண்ணிழந்து குருடராய்ப் பிறப்பார் எனவும் யாமெல்லாம் அறிந்து உய்ய வழிகாட்டுவாதைப் போல இருந்தது அவர்தம் செயல். ஊர்தோறும் சென்று இதனையே உபதேசிப்பார் போன்றது அவர்களுடைய சிவதலயாத்திரை. ஒருவர் புறக்கண் குருடேயன்றி அகக்கண்ணுற் குருடரல்லர். மற்றவர் புறத்துறுப்பு முடமேயன்றி அறிவு முடம்பட்டிலர். ஆகலின், இருவரும் அறிவுவடிவாகிய இறைவரை அல்லும் பகலும் அனவரதமும் சிந்தை செய்து அன்பினல் வழிபடுவாராயினர்.

“ காலகளாற் பயனென்— கறைக்கண்டனுறை கோயில் கோலக்கோபுரக்கோகரணஞ்சூழாக்கால்களாற்பயனேன். ,,

“ கண்காள் காண்மின்களோ—கடல் நஞ்சுண்ட கண்டன் றன்னை, எண்டோள்வீசிநின்றுடும்பிரான் தன்னைக்கண்காள் காண்மின்களோ. ” —திருநாவு.

“ கண்ணுடைய ரென்போர் கற்ரேர் முகத்திரண்டு— புண்ணுடையர் கல்லா தவர் ” எனவும், “ ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற்(கு)—எழுமையும் ஏமாப் புடைத்து” எனவும் திருவள்ளுவனாயனுர் அருளிய திருக்குறட்பாக்கள் இவர்கட்கு ஏற்புடைத்தாயின “கற்றதனுற் பயனென்கொல் வாலறிவன்—நற்ருள் தொழாஅ ரெனின் ” என்னும் குறட்பாவை நன்குணர்ந்தவர் என்பதை அவர்கள் செயல் நன்குணர்த்துவனவாம். கருவிலே திருவுடையராகிய இரட்டையர் புலமைத்திறமும் பெரிதுடையர். இங்கே திருவென்றது அருட்டிருவையேயாம்; பொருட்டிருவை யன்று. இவ்விருவரும் முதுசூரியர் இளஞ்சூரியர் எனவும் வழங்கப்

பட்டனர். தவமுந்தவமுடையார்க்கேயாம் எனவும், 'ஒன்றற்குச் செய்த தவம் பிறிதொன்றற்கு ஆகாது' எனவும் ஆன்றோர் கூறும் பொருண்மொழி இவர்கள்பால் நன்கு சித்தித்தது. பெருஞ்செல்வம்பெற அருந்தவம் செய்தோரில் அதனைத் துய்க்குந் தவஞ்செய்தோர் மிகச்சிலரே என்பதை நாம் அநுபவத்திலே காண்கின்றோம் அன்றோ!

"வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது"

என்னும் திருக்குறள் இதனை வலியுறுத்தும். எனவே, அருட்செல்வமும் கல்விச்செல்வமும் பெரிதும் பெற்ற இரட்டையர் பொருட்செல்வம் ஒரு சிறிதுமின்றி வறுமையால் வாடிவருந்தினர். அதனால், சில சமயங்களில் புரவலரைத் தேடிப்பாடிச் சென்றனர். "பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்" என்ற சமயகுரவர் திருவாக்கு இடையிடையே நினைவில் வந்து இவர்கட்கு அப்புன்மைத்தொழிலைத் தவிர்க்கும். பசிப்பிணி இடை இடையே வாட்ட அவர் என்ன செய்வார்? பாவம்! பசிவந்திடப் பத்தும் பறந்துபோமன்றோ!! இவர்கள் நிலையையும் புலமையையும் அறிந்தோர் பலர் உதவிசெய்தனர். புரவலர் பலர் இவர்களை உபசரித்துப் பாதுகாத்தனர். அலட்சியம் செய்து அவமதித்த மக்களும் பலரே. அவ்வவ்வமையங்களில் இரட்டையர் பாடிய செய்யுட்கள் இவைகளை நன்கு உணர்த்துவனவாம். வில்லிபுத்தூர் ஆழ்வாரைக் கொண்டு பாரதத்தைச் செய்வித்த வக்கபாகை வரபதியாட்கொண்டானால் இவர்கள் பெரிதும் அபிமானிக்கப்பெற்றனர். சமணப் புலவனாகிய திருவண்ணாமலைச் சம்பந்தாண்டான் என்பவன் 'மன்' என்றெடுத்து 'மனுக்கு' என்று வெண்

பாவில் முடிக்கச் சொன்ன சமுத்திபைப் பூர்த்தி செய்தார் இவர். திருவாமாத்தூரில் ஆறு விலகப் பாடிப் புகழ்படைத் தார். திருவாரூரிலே வன்மீகநாதரைத் தரிசித்து இவர் கள் வழக்கம்போலச் செய்யுள் பாடத்தொடங்கி இரண்டாம் அடி எடுக்க வாராமல் மயங்க, அப்போது அங்கே தரிசனம் செய்திருந்த காளமேகப்புலவர் 'பாணந்தான் மண்தின்ற பாணமே' என்று எடுத்துக் கொடுக்க இவ் இரட்டையர் அவ்வெண்பாவை முற்றுவித்தனர் என்ப. பின்னொருகால் ஆனைக்காச் செல்வரை வழிபாடு செய்ய இரட்டையர் அங்கே வந்தபோது ஈமத்திலே காளமேகப்புலவ ருடம்பு வேகக் கேட்ட அவர்கள் பதறி "வேகின்றதைதையோ -- மண்டின்ற பாணமென்ற வாய்" என்றிறுதி பாடிய கையறுநிலைச் செய்யுள் எவர் நெஞ்சையுருகச் செய்யாது.

இனி, இரட்டையர் திருவாமாத்தூர்க்கலம்பகத்தைப் பாடி அரங்கேற்றினர். 61-ஆம் பாடல் அரங்கேற்றும்போது பம்பையாற்றுக்குக் கீழ்கரையில் கோயில் கொண்ட சிவபெரு மானைப் 'பம்பை மேற்கரைக்கோயில் கொண்டார்' எனப் புலவர்கள் பாடியிருப்பதைக் கேட்ட சபையோர் பாடிய வருக்குக் கண்ணுங்காதும் இல்லாமற் போயினும் கேட் போருக்கு அவையில்லாமற் போகவில்லை எனஅசதியாடி எழுந்து சென்றனர் என்றும், அங்ஙனம்சென்றவர் பொழுது விடிந்ததும் ஆற்றங்கரைக்கு வந்து பார்க்க அன்றிரவில் உண்டான பெருவெள்ளத்தில் ஆற்றின் கதி முற்றும் மாறி மேற்கரைக்கோயிலாகவே காட்சியளிக்கக் கண்டு முன்னிர வில் கேட்ட புலவர் வாக்கின் தூய்மைக்கு வியப்பும் அச்ச மும் அடைந்து அவரை யாவரும் போற்றிப் புகழலாயினர் என்றும் சரித்திரம் வழங்குகிறது. தமிழ் நாவலர் சரிதையில்

'ஆறுவிலகியபாட்டு' என்று காணப்படும் தலைக்குறிப்பும் காண்க என்பர் பெருந்தொகைத்தொகுப்பாசிரியர்.

இனி, ஏகாம்பரநாதர் உலாவைப்பாடி அரங்கேற்றுங் காலத்துக் காப்புச்செய்யுளிற்கண்ட ஆயிரக்கால் மண்டபமும், விகடசக்கர விநாயகரும் அங்கு இல்லாமையால் சபையோர் அதனை மறுத்தனர் 'இவைகளைக் கண்டன்றி நூல் அரங்கேற்றுவதில்லை' என உறுதிபூண்ட இரட்டையர்சிவதலயாத்திரைக்குச் செல்வாராயினர். பின்பு, சில நாட்களில் ஏதோ திருப்பணி செய்ய எண்ணிச் சிலர் பூமியை வெட்ட அங்கே மண்ணால் மூடப்பட்டுக்கிடந்த மண்டபமும் விநாயகமூர்த்தியும் தோன்றக்கண்டு, அவ்வூரார் வியந்து, மீண்டும் இரட்டையர்பாற் சென்று, குறையிரந்துவேண்டி அழைத்து வந்து, நூலை அரங்கேற்றச்செய்து சிறப்புச்செய்தனர் என்பர். ஏகாம்பரநாதருலா தெய்வீகவுலா எனவும் பெயர் பெறும்.

இனி, இவர்கள் பாடிய ஏகாம்பரநாதர் உலாவிலே 61,102, 146, 151 ஆம் கண்ணிகளால் பாராட்டப் பெறுபவன் 'ஏகாம்பர சம்புவராயன்' என்பவன். அவன் கி. பி. 1337 — 1360 வரை காஞ்சீபுரத்தையாண்டுவந்த சகலலோக சக்கரவர்த்தி இராஜ நாராயண சம்புவராயன் காலத்தில் இருந்தவன் எனக் கல்வெட்டு ஆராய்ச்சிகளால் தெரிகின்றது. (Ep. Rep- No. 390 of 1905)

இவர்கள் காலத்துப் புலவர்களில் காளமேகப்புலவர் அதிமதுரகவி, சம்பந்தாண்டான், அருணகிரிநாதர், வில்லி

புத்தூரார், வரந்தருவார் முதலியோர் சிறந்து விளங்கியோ ராவார். இரட்டையர்காலம் பதினான்காம் நூற்றாண்டு என்பர்

பெருங்கதை, தொண்டைமண்டலசதகம், சோழமண்டல சதகம்,சிதம்பரம் முதலியன இவ்வரலாறு எழுதத்துணை செய்தன தொண்டைமண்டல சதகப் பதிப்பாசிரியர் எழுதியுள்ள விரிவான வரலாறு என் கைக்குக்கிட்டவில்லை. இரட்டையர் வரலாற்றின் விரிவையும் பிறவற்றையும் அதன்கண் பரக்கக் காணலாம்.

கவிராக்ஷஸ — ஸ்ரீ கச்சியப்பமுனிவர்.

இல்லை யானமக் கென்று வெறுக்கைமிக்
    கெய்தி னார்களை யெண்ணி யிரங்கிநீ
அல்ல லிற்றுளை கின்றனை நெஞ்சமே
    அவர்க ளோபண்டை நல்வினை யாற்றினார்
செல்ல லாம்வகை தீவினை முன்புநீ
    செய்தொ ழிந்தனை தெய்வதக் காஞ்சியின்
மல்ல லானந்த ருத்திரே சத்தனை
    வழுத்து மேலை வளத்தினை யாவையே.



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தில்லைக்கலம்பகம்.

காப்பு.

கற்பக விநாயகர்.

நேரிசைவெண்பா.

அல்லைப் பொருவு மணிமிடற்றெம் மையனுறை
தில்லைக் கலம்பகத்தைச் செப்பவே - யொல்லையிலே
கற்பகமுன் சத்திவிடுங் கந்தனுக்கு முன்பிறந்த
கற்பகமால் யானையருள் காப்பு.

நூல்.

நேரிசை யொத்தாழிசைக்கலிப்பா.

சீர்கொண்ட மன்றமென்றுந் திருச்சிற்றம் பலமென்றும்
ஏர்கொண்டபொழிற்றில்லையெழிற்பொன்னம்பலமென்றும்
வார்கொண்ட முலையுமையாள் வாழ்பேரம் பலமென்றும்
பேர்கொண்ட கனகசபைப் பெரும்பற்றப் புலியூரோய் !

இது தரவு.

பூலோக முதலாய புவனங்க ளளிப்பதுவுஞ்
சாலோகந் தருவதுநின் சரணார விந்தமன்றே.

பூமீது வலஞ்செய்து புகழ்ந்தோது மடியவர்க்குச்
சாமீப மளிப்பதுநின் றாட்கமல மலரன்றே.

நீறுருஞ் சடைமௌலி நிலவெறிப்ப மறையொலிப்பச்
சாரூபந் தருவதுநின் றாமரைப்பூஞ் சரணன்றே.

இவை மூன்றுந்தாழிசை.

அதனால், (இது தனிச்சொல்)

அலம்புநீர் லூழ்கியு மஞ்செழுத்து நவின்றும்
பொலம்புனை நறுமலர் புனைந்துஞ்
சிலம்படி பரவுதுஞ் செனனமறற் பொருட்டே.

இது சுரிதகம். (1)

நேரிசைவெண்பா.

பொருள்வடிவாய் நின்ற புனிதா கயவர்க்
கிருள்வடிவாய் நின்ற விறைவா — வருள்வடிவ
மானவா நின்று ளவாவென் றறிந்துதில்லை
வானவா நின்று ளவா. (2)

கட்டளைக்கலித்துறை.

வாசவ னந்தி மதிகதிர் வானவர் மாமலரோன்
கேசவ னந்திக் கணபதி வேலவன் கெங்கையுமை
நேசவ னந்தி யனந்தன் பரவிடு நீலமிடற்
றீசவ னந்திகழ் தென்புலி யூரவென் றேத்துமினே. (3)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மின்னொன்று வான மதியொன்று வேணி
விடையொன் றிருந்த கொடியார்
மன்னொன்று சோதி நடமொன்று தில்லை
மணிமன்றின் முன்றி லிடையே
பொன்னொன்று மேனி யரவொன்று நீடு
புலியொன்று நின்ற வதனால்
என்னொன்று பேதை தொழுவான் றுணிந்து
மெழுவாண் மடந்தை யிவளே. (4)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இவளைக்கண் டனைவோரு மிரங்குகின்றார் பொழுதுபுகு
மிடத்திற் பாய்ந்த
தவளைக்கண் டனைமறைத்துந் தாமரையி னிதழ்குவியுந்
தடஞ்சூழ் தில்லைக்
குவளைக்கண் டனைக்கண்டு மாயவனுண் முன்கையினிற்
குழவி வைத்த
அவளைக்கண் டனைக்கண்ட வன்றுமுதல் குடியிருப்ப
தருமை தானே. (5)

ஷை வேறு.

அருமை யாகிய பசுபதி யம்பலத் தாடிதென் புலியூரின்
உரிமை யாகிய காளையைக் கண்டபி னுயிர்வரு மல்லாமல்
கருமை யாகிய கன்றிழந் திருப்பவள் காலனார் பகட்டின்பின்
எருமை போனபி னிவளுயிர் மீளுமோ வேழைமை
மடவீரே. (6)

கட்டளைக்கலித்துறை.

மடலூர் வதுமறுத் தியான்செய்த நன்றி மறந்தொழிந்தீர்
அடலூர் பகையெனி லாற்றுங்கொலோமுன் றிலார்த்தசங்கந்
திடலூர் வளவயற் றென்புலி யூர்தென்ற றில்லைச்சுற்றுக்
கடலூர் மரக்கலக் காகமன் றோவஞ்சி காதலர்க்கே. (7)

நேரிசைவெண்பா,

காதி லிரண்டுபேர் கண்டோ ரிரண்டுபேர்
ஏதிலராய்க் காணா ரிரண்டுபேர் — பேதைமுலை
யுண்ணா ரிரண்டுபே ரோங்குபுலி யூரருக்குப்
பெண்ணான பேரிரண்டு பேர். (8)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பேரம்பலவனைநினையும்பொழுதொருபிறையுஞ்சடைமுடியுஞ்
சேரும் பலபல பவனந் தருவது திருவம் பலமன்றோ
தாரம் பலவனை தமர்தந் தையரொடு சரணம் புகவெளிதா
நீரம் பலவனை நினையன் பிலையெனி னிரயம்பல பலவே. (9)

ஷை வேறு.

பலகோடி மலரன்றி மலரொன்றா புனைந்துலகம்
படைத்தான் வேதன்

மலர்கோடி யருகிப்ப வொருமலரால் விண்புரந்தான்
வச்ர பாணி
உலகோடி வணங்குதில்லை யம்பலவர் திருவடியி
லொருகண் சாத்தி
அலர்கோடி புனைந்திடுமுன் சக்கரம்பெற் றுனாழி
யரங்கத் தானே. (10)

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

அரங்கச்சிற் சபையார் மடந்தைக்குப் பிரியா
ரலங்கற்பொற் சடையாளர்
விரிஞ்சற்குத் துயில்கூர் முகுந்தற்குத் துரையாம்
விடங்கற்குப் பதியாமால்
மருங்குற்றுக் கயல்சேல் கரும்புக்குட் புகவே
வரும்பெற்றிச் சினவாளை
பெருங்கப்பற் கடன்மீ னுடன்றத்திக் கரைசேர்
பெரும்பற்றப் புலியூரே. (11)

நேரிசைவெண்பா.

புலியூ ருறையும் புனிதா புகுவெண்
பலியூர் தொறுமிரக்கும் பண்பா — பொலிகயிலைக்
கல்லி லிருக்கக் கடனு லெங்நெஞ்சக்
கல்லி லிருக்கக் கடன். (12)

புயவகுப்பு.

கல்லினுங் கடிதாக விறுகத்திரண்டன
கைவிலங் குயிர்மாள வெதிரிட்டுவென்றன
கல்வியங் தணரேவு மழுவைத்திருந்தன
கையில்வெண் டலையோடு திகழப்பொலிந்தன

வில்லெனும் படிமேரு கிரியைப்புரந்தன
மெய்பருந் தவர்கோவை யெழுதிச்சிவந்தன
வெய்யவன் குருடாக விழியைப்பிடுங்கின
வில்லமுங் கழுநீரு நிறையக்கிடந்தன
வல்லியந் தலைசாய வுரியைக்கவர்ந்தன
வைகைமண் கரைமீது குவியச்சொரிந்தன
மல்குமைந் தலைநாக மணியிட்டணிந்தன
வைபகந் தருவோனை முடியைக்களைந்தன
செல்விநஞ் சிவகாமி தழுவக்குழைந்தன
தெய்வவெண் டிருநீறு துதையப்புனைந்தன
தெள்ளுசெந் தமிழ்மூவர் கவியைச்சுமந்தன
தில்லையம் பலவாணர் கனகப்புயங்களே. (13)

கலிவிருத்தம்.

புயங்க மாலை புனைபுலி யூரினன்
வயங்க மாலை மதியணி வேணியான்
முயங்க மாலை முராரியை வேட்டவன்
உயங்க மாலை யுதவினன் வஞ்சியே. (14)

கட்டளைக்கலித்துறை.

வஞ்ச மனத்தைச் சிதம்பரத் தாக்கிய வல்லமையைக்
கஞ்ச மனத்தை யுயர்த்தோன் வியந்தனன் கைபிசைந்தான்
வெஞ்ச மனத்தை யறிந்தபின் னீரினி விட்டுவிடீர்
கொஞ்ச மனத்தை யொருபாகம் வைத்த குணக்குன்றமே.
(15)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

குன்றுளோ னென்னுந் தெய்வக் குறுமுனி வணங்குந்தில்லை
மன்றுளோர் நடனங் காணு வஞ்சரைக் கண்டா லஞ்சேன்
தென்றலோ டிகலுஞ் சேவல் சிறையினு லணைத்த பேடை
அன்றிலோ வென்னு மோசைக் கஞ்சுமென் னெஞ்சந் தானே. (16)

கடைமடக்கு. (கட்டளைக்கலிப்பா)

அஞ்சு மேயுடன் கானக மொன்றுமே
யரக்க னைப்பொருங் கானக மொன்றுமே
கஞ்சன் மாறெழு மன்ற வரங்கமே
கைலை மாலையு மன்ற வரங்கமே
வஞ்ச மான பரசிவ கங்கையே
மன்னு தீர்த்தம் பரசிவ கங்கையே
நெஞ்ச மேநீ சிதம்பரந் தில்லையே
நித்த மோது சிதம்பரந் தில்லையே. (17)

தில்லைமூ வாயிரவர் பூசைபுரி பாதந்
தேவருட னேயிருவர் தேடரிய பாதம்
வல்லமா காளியொடு வாதுபுரி பாத
மாமுனிவற் காயமனை மார்பிலுதை பாதஞ்
சொல்லவே பரவையிடந் தூதுசென்ற பாதந்
தொல்புலிப தஞ்சலியுந் தொண்டுசெயும் பாத
மல்லலா மேழ்பிறவி தீரநட மாடு
மாதிபுலி யூரர்திரு வம்பலவர் பாதம். (18)

கட்டளைக்கலித்துறை.

அம்பல வாணனை வென்றேன் புறவத் தரும்புமுல்லை
யம்பல வாணனை யார்குழல் வேற்க ணரிவையரா
யம்பல வாணனைப் பெண்ணுரு வாக வமர்ந்தவனை
யம்பல வாணனைப் போற்றாரில் வாடு மவண்மருங்கே. (19

சந்தக்கலிநிலைத்துறை.

மருமலி சபையினில் வரதனை யுமையொடு மலர்தூவிப்
பெருமையு மடைகுவ ரவரவர் பதவிகள் பெறுவாரே
பொருமகள் சசிமகள் வனமகள் புலமகள் புகழ்மாதர்
திருமக ணிலமகள் ரதிமக ணிதிமகள் செயமாதே. (20)

நேரிசைவெண்பா.

மாதரெச்சிற் றம்பலத்தை வெளவாதே நன்னெஞ்சே
நீதிருச்சிற் றம்பலத்தை நின்றுதொழு — போதருச்சித்
தாடிப்பா டித்திரியா தாதுலர்போ லேதிலர்போல்
வாடிப்பா டித்திரியா மல். (21)

நிலைமண்டில ஆசிரியப்பா.

மல்லலம் பணைசூழ் தில்லையம் பதியினில்
புழுவாய்ப் பிறப்பினு மழுமான் கரத்தவென்
றெழுதாக் கிளவி யிருடி பகர்ந்தது
மெழுதுமறை பகர்ந்த கழுமல முனிவன்
சங்கரன் புலியூர்ச் சதாசிவ மனைத்துஞ்
செங்கர மழுமான் சுமந்தன தெரிந்து
பண்ணுறு செந்தமிழ்ப் பதிகம் பாடி

மண்ணுறு மாந்தர்க்கு வகுத்துரைத் தனவுஞ்
செவிப்புலங் கதுவத் தெளிந்தொழிந் தனன்யான்
அதனால், இருடிக ளாகிய வீங்கிவ ரிருவர்
திருவடி நான்குஞ் சிரத்தின்மே லனவே. (22)

மதங்கியார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சிரத்திலே கரங்குவித்து முப்பத்து முக்கோடி
தேவ ரெல்லாம்
வரத்திலே தெண்டனிடு மம்பலவர் தென்புலியூர்
மதங்கி யார்தம்
உரத்திலே கோடிரண்டு கதுப்பிலே கோடிரண்டென்
னுயிரை வாட்டுங்
கரத்திலே வாளிரண்டு முகத்திலே யோரிரண்டு
கணைக டானே. (23)

வஞ்சி விருத்தம்.

தானவரை யாள்கனக சபையாமா
தானவரை போர்முழவு தனைபோராய்
தானவரை யார்கிளவி தவறுர்நீ
தானவரை யாணைகொள றவறுமே. (24)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தவபுரத்தை யிழந்துகொடு நரகில் வீழ்வர்
சாலகடங் கடராவர் தருவ ராவர்
அவபுரத்தி லம்பரத்தை யடைவர் தில்லை
யம்பலத்திற் றிருநடத்தை யறியா தோர்கள்

பவபுரத்தை யகல்வரந்தப் புரத்தை யாள்வர்
பரமபுரத் தணிவர்நிதி படைத்து வாழ்வர்
சிவபுரத்தில் வீற்றிருப்ப ரெம்மை யாளச்
சிதம்பரத்திற் றிருநடத்தைத் தெரிசித் தோரே. (25)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தெரிசிக்க முத்திதரு நித்த ரத்தர்
சிகரப் புயத்தர் புலியூரில்
இருவர்க்கு நிர்த்தமிடு சிற்ச பைக்கு
ளிறைபொற் பதத்தை மறவாமல்
பரிசிக்க முத்தி வசனிக்க முத்தி
பணிதற்கு முத்தி மலராலே
மருசிக்க முத்தி பிரதக் கிணத்தில்
வருதற்கு முத்தி தருவாரே. (26)

நேரிசைவெண்பா.

தருத்தாவு பூஞ்சோலைச் சங்கரா தில்லை
நிருத்தா வுருகாதென் னெஞ்சம் — பருத்தமர
மேவம் பழுத்த விடைவெளிறில் லாவயிரம்
பாவம் பழுத்த பழம். (27)

கட்டளைக்கலித்துறை.

பழுத்துச்செத் தாலும் பிறந்துசெத்
தாலுமிப் பாழுடலங்
கொழுத்துச்செத் தாலு மெலிந்துசெத்
தாலுங் கொலைப்படினும்

புழுத்துச்செத் தாலும் புதைத்தாலுங்
காலிற் புரிகைக்கட்டி
யிழுத்துச்செத் தாலுஞ் சிதம்பரத்
தேசென் றிறத்தனன்றே. (28)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நன்றென மகிழ்ந்தொரு சிதம்பர நடம்புரியு
நம்பர் பரனூர்
குன்றென வுயர்ந்தவர் விரும்பிய பெரும்பதி
குடந்தை கடவூர்
தென்குடி வலஞ்சுழி புறம்பிய மெறும்பிமலை
செம்பிய னல்லூர்
அன்பில்புற வம்பழனம் வஞ்சிகள மிஞ்சிகுடி
யம்ப னகரே. (29)

மடக்கு.

பதினாறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அம்பு லிக்கொரு நட்டம் புரிந்தவ
ரம்பு லிக்கொரு நட்டம் புரிந்திலார்
ஆழி யுஞ்சங்கு மாலுக் களித்தவ
ராழி யுஞ்சங்கு மாலுக் களித்திலார்
வம்பு லாவு மிதழியை வேட்டவர்
வந்து செய்ய விதழியை வேட்டிலார்
மானை யுங்கைப் பிடித்தே நடத்தினார்
மானை யுங்கைப் பிடித்தே நடத்திலார்
பம்பு வேலை விடமிட லாக்கினர்
பாவை யாசை விடமிட லாக்கிலார்

பரவை கோபமுஞ் சோபமுந் தீர்த்தவர்
பரவை கோபமுஞ் சோபமுந் தீர்த்திலார்
செம்பொன் மாளிகை யம்பலக் கூத்தனார்
தினமு மெங்களை யம்பலத் தேற்றினார்
தில்லை யம்பதி வாழ்நட ராசனார்
திருவு ளச்செய னின்றுயி ருந்ததே. (30)

களி

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

இரும்பெண்ணை விரும்பாதா ரெவருளர்கட்
குடிமாறு திருந்தான் வேதன்
வரும்பெண்ணை யகன்றபின்னெண் ணறவருந்தி
னன்முகுந்தன் மாலு மானான்
சுரும்புண்ணு மதுமுடியும் பசுந்தோடும்
பூமடலுஞ் சுமந்து தோன்றிக்
கரும்பெண்ணை நீங்காம லுடனிருந்தான்
கனகசபைக் கடவு ளானே. (31)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடல்விட நுகர்ந்த காசினி யிலிங்கங்
காஞ்சிமா நகருறை யிலிங்கம்
காவிரி வடபால் வருதிரு வானைக்
காவினி லப்புலிங் கமதாம்
வடதிசை யண்ணு மலையினி லிங்கம்
வன்னியின் வடிவுகா ளத்தி
வாயுலிங் கமதாஞ் சிதம்பர லிங்க
மாசிலா காயலிங் கமதாம்

குடதிசை யதனின் மருவுகுற் றாலங்
கோதறு சித்திர சபையாம்
குற்றமில் குணக்கிற் பழையனூர் மன்றங்
குலநவ ரத்னமன் றென்பார்
அடல்விடைப் பாக னெல்லையம் பதியி
லம்பலந் தாம்பிர சபையாம்
ஆலவாய் மதுரை வெள்ளியம் பலமா
மணிதில்லை செம்பொனம் பலமே. (32)

குறளடி வஞ்சித்துறை.

அம்பலவர் தாளே — நம்பர்பத தூளே
தம்பமென தாளே — வம்பர்மத வேளே. (33)

நேரிசைவெண்பா.

வேலை யிடுதுரும்பாய் வெம்பினே னம்பலவர்
மாலை யெனக்குதவ மாட்டாரேற் — சோலையினிற்
போதந்த தும்பியே புன்கணீர் போலெனது
போதந்த தும்பியே போம். (34)

கட்டளைக்கலித்துறை.

போதத்தை விட்டவர்க் காளாகி வேள்வி புரிந்ததக்கன்
வேதத்தை விட்டவர் வேந்தா யிருப்பர்வில் வேளிருந்து
மாதத்தை விட்டவ ரம்பல வாணர் மலர்க்கமலப்
பாதத்தை விட்டவ ரூரூர்த் திரிவர் பலிக்குழன்றே. (35)

வெள்ளை விருத்தம்.

பலியூருங் கன்மனத்தார் பழிநாணு ரென்செய்கேன்
பரவாய் வாழி

புலியூரர் கழிக்கானற் புலம்பரொடு மறந்தனையோ
புணரீ வாழி
கலியூர்தி யுடன்சென்றார் கடுந்திண்டேர் வழிசிதையேல்
கடலை வாழி
வலியூரு மலர்க்கணைக்கென் னுயிரிலக்கம் புரிந்திடேல்
வாரீ வாழி. (36)

இடைச்சியார்.

வாணிச்சி யார்வணங்கு மம்பலவர் தென்புலியூர்
மணிவீ திக்கே
கோணிச்சி யார்தயிர்பால் விலைகூறி விற்றுவருங்
குரலைக் கேட்டாற்
றேனிச்சி யார்கரும்பு தனையிச்சி யாரிவரைத்
தெரிசித் தோர்கள்
ஏனிச்சி யார்மதவே ளிரதிபைக்கண் டாலுமவ
ரிச்சி யாரே. (37)

கலிவிருத்தம்.

இச்சையடி யார்பரவு மேமசபை வாணர்
பொற்சடிலர் நீலமணி கண்டர்புலி யூரர்
பச்சையொரு பாதியுடல் பால்வடிவ மானார்
செச்சைமல ரேயனைய சேவடிக ளாரே. (38)

கார்காலம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சேவணியு மணியோசைக் கிடையநின்று
விழிதூங்கத் தில்லை மன்றிற்
கோவணியுங் கொன்றையெனப் பசலைபெழ
வன்பர்மனங் குறியாக் காலம்

பூவணிக வேளாளர் புவியரசர்
கொடுங்கோன்மை பொறுத்தாற் போல
ஆவணியும் புரட்டாசி மாதமுநான்
றனியிருந்திங் காற்றி லேனே. (39)

ஆற்றிலிடும் பொருள்குளத்தி லழைப்பித்த
திருக்கதையு மாரூ ரர்க்குச்
சேற்றுவயற் புகலூரிற் செங்கலைப்பொன்
னாக்கியதுந் திருந்தச் சொன்னார்
நேற்றிரவி னெனைப்புகழ்ந்தா ரின்றறிந்தேன்
பொருடேட நினைந்த தெல்லாம்
போற்றுதிரு வம்பலவர் பொறுப்பரெனைப்
புகழ்ந்ததெல்லாம் பொய்மெய் தானே. (40)

பொய்ப்பசிக்கொண் டிரந்துழலும் புலியூரார்
செஞ்சடைமேற் பொலிந்து வாழும்
மைப்பசியி லிழப்பறந்த நெடுமூச்சு
விடுவதுபோல் வாடை வீச
மெய்ப்பசியு மருந்துயிலுந் தவிர்ந்துபெருந்
தவம்புரியும் விரதர் போல
ஐப்பசியுங் கார்த்திகையும் பிரிந்திருந்து
மொருவகைநா னாற்றி னேனே. (41)

வேறு.

ஆற்றுநீர் மலையில்விழு மருவிநீர்
பூஞ்சுனைநீ ரகமுங் கூவல்
ஊற்றுநீர் குளத்துநீ ருததிநீர்
மேகத்தி லுள்ள நன்னீர்

வேற்றுநீர் விரிசடையோன் கங்கைநீ
 ரித்தனைக்கு மேலாங் கண்டீர்
காற்றுநீ ருரிவைபரம் பலத்தாடு
 மையர்சிவ கங்கை நீரே. (42)

வேறு.

நீர்கழிக்குஞ் சடைமுடியா ரம்பலவர்
 தென்புலியூர் நியம வீதி
தேர்கழிக்குந் திருநாளு மறந்தார்தாஞ்
 சென்றிருக்குந் திசையுங் காணேன்
கூர்கழிக்கும் வாளினுக்கு மிலக்கான
 புண்ணுற்றிக் கொள்வார் போல
மார்கழிக்குந் தைக்குமிருந் தாற்றினேன்
 முன்பனியை மாற்றி னேனே. (43)

நேரிசைவெண்பா.

மாற்று யிதழியந்தார் வாங்கிவந்து வஞ்சிதுயர்
ஆற்று யுனைவளர்த்த வாயிழையைத் — தேற்றுமேல்
அஞ்சுகமே யஞ்சினு ளம்பலவ ரைப்பிரிந்தா
லஞ்சுகமே யஞ்சினு ளாம். (44)

கட்டளைக்கலித்துறை.

அஞ்சத் தனையு மயிலோனை யும்பெற்ற வம்பலனை
வஞ்சத் தனையு மனத்திலெண் ணுதவர் மால்பிரமன்
எஞ்சத் தனையு மறைந்துநின் றுனுக் கிணையென்னவே
கஞ்சத் தனையுந் திருமாலை யுஞ்சொல்வர் காசினிக்கே. (45)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காசிக்குஞ் சேதுவிற்குந் தலைவர்திரு வம்பலவர்
கமல பாதம்
பூசிக்கு மடியவரைத் தெரிசிக்கு மெனைமதனன்
போர்வல் லானே
ஊசிக்கு நிகரான வைங்கணைக்குந் தென்றலுக்கு
முறுவா டைக்கும்
மாசிக்கும் பங்குனிக்கு முன்புவரும் பின்பனிக்கு
வருந்தி லேனே. (46)

வேற்றொலி வெண்டுறை.

வருகடலில் விடமுண்டார் மன்னியதென் புலியூரிற்
குருகடரு நெடுங்கொல்லிக் குன்றநா டுடையீர்
முருகடரு மலர்க்காந்தள் வெற்பிலே மலருகின்ற
முறைமை யின்றிப்
பொருகடலின் மலர்வதொரு புதுமையென விணைவிழிகள்
பொத்தி னீரே. (47)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொத்திரைக்குங் கரும்பாம்பு வைத்திருக்குஞ் சடைமுடியர்
புலியூர் நாட்டில்
நித்திரைக்கு மிடமின்றி விழித்திருக்கத் தந்தவரென்
னிலைமை யோரார்
இத்திரைக்கும் படநாக மருந்திரைக்கு மிளவேனிற்
கிடமாய் வந்த
சித்திரைக்கும் வைகாசி வசந்தனுக்கு மியானினியென்
செய்கு வேனே. (48)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

செய்ய மேனியா ரையர் மாலயன்
        றேடு மம்பலத் தாடு மீசனார்
தூய்ய மால்வரைப் புனமி ருந்தபைந்
        தோகை யார்பிரிந் தேகி னார்கொலோ
கொய்யும் வார்தினைக் கிளியி னங்களே
        கோகி லங்களே கேக யங்களே
மையல் யானையின் பிடியி னங்களே
        மானி னங்களே தேனி னங்களே. (49)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தேனிக்கு மடியவர்கள் வந்திக்கு மம்பலவர்
        தில்லை நாட்டில்
நாணிக்கு மதன்கணைக்கு நரலைக்கு மயலவர்கள்
        நகைக்கு மஞ்சேன்
கூனிக்குங் குமுதமல ரலர்மதிக்கு முதிர்வேனிற்
        கோடை நீங்கா
ஆனிக்கு முடனான வாடிக்கு முயிர்தரிப்ப
        தருமை தானே. (50)

கலிநிலைத்துறை.

அரும்பு தான்சில வவயவ மலர்வடி வாகுங்
கரும்பு தேன்மொழி கமுகமுஞ் சங்கமுங் கழுத்தாம்
விரும்பும் தென்புலி யூரர்மால் வரையின்மின் னார்க்கு
நிரம்பு தேர்படந் திரைகடல் கடிதட நிதம்பம். (51)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நிதம்பதட மயிலேகொள் ளிடங்கடந்தோ மினிச்சற்று
நேரஞ் சென்றுற்
பதம்பரவு மாயிரக்கான் மண்டபமுந் திருமதிலும்
பசும்பொற் றேருஞ்
சதம்பெறுகான் மண்டபமுஞ் சிவகங்கை யுடன்கனக
சபையுந் தில்லைச்
சிதம்பரமுங் கோபுரமுந் தில்லைமூ வாயிரவர்
தெருவுந் தானே. (52)

கட்டளைக்கலித்துறை.

தெருவார வாரங்கள் வண்டின மேசெவி கேட்டவுடன்
உருகாது வீழ்ந்திடும் வண்டின மேபுலி யூரரன்பு
தருவா ரெனமிக வண்டின மேயவர் சந்ததமும்
மருவா விடிலொரு நாளுக மானது வண்டினமே. (53)

ஐயந்தெளிதல்

மருட்பா.

வண்டறை தாமரை வைகுதலாற் கண்டேன்
புலியூர் தொறுந்திரி பிரமரங்காள்
புலியூ ரணங்கிவள் பொன்னணங் கலளே. (54)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொன்றருஞ் சடைக்காடு தனைக்கண்டோ கங்கையெனும்
புனலைக் கண்டோ
எந்நாளுந் திகழறுகு தனைக்கண்டோ வம்புலிமா
னினத்தைக் கண்டோ

அந்நாளிற் கருமானின் றோலுரித்து மருங்கசைத்த
வச்சந் தானோ
தன்னுசை யாற்புலியூ ரம்பலவர் கரத்தின்மான்
றாவுந் தானே. (55)

கொற்றியார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தாவிந்து மதிச்சடையார் நடமாடுஞ் சிதம்பரத்துத்
தளத்தே தில்லைக்
கோவிந்தர் திருவடிகள் சேவிக்கும் படிவந்த
கொற்றி யாரே
மேவிந்த மதியிருக்கக் கரும்புயலை யேன்மறைத்தீர்
மேகத் தாலே
மாவிந்து விணைத்திரும்ப மறைத்தாலின் னமுஞ்சிலநாள்
வாழ லாமே. (56)

வேறு.

வாழும் புலியூ ரெனுநாமம் வைய
முழுதும் பரந்ததலால்
ஆழும் புனல்சூழ் சீரங்கத் தாலைக்
களத்து முளதாமால்
வீழும் பொழுதுங் கண்ணுறங்கி விழிக்கும்
பொழுது மாலயங்கள்
சூழும் பொழுது மறவேன்யான் றுஞ்சும்
பொழுதுந் துதிப்பேனே. (57)

சந்தவிருத்தம்.

துதிக்கை வீசிய மறமத வாரண
முரித்த போர்வையர் முனிவர்க டேவர்கள்
துதிக்க வேவரு கனக சபாபதி பெனுமீசர்
மதிச்ச டாடவி மழவிடை யார்முகில்
எருக்கு மாலிகை யிதழியை பேபுனை
வரைப்பு யாசலர் வளர்புலி யூர்வரு மயில்போல்வாய்
உதித்த மாமதி தழலல வோபினை
எனக்கு நீரொரு துரையல வோவினி
உமக்கு நானொரு பயலல வோதய விலையோதான்
கொதித்த மாமத னடுகணை பேவிட்
முழுப்பி ராணனு மறையுயி ராயுள
குறைப்பி ராணனு மழியுதை போதலை விதிதானே
(58)

நேரிசையாசிரியப்பா.

விதிவழி தவறிய மதியி லாவெனை
மெய்த்தவம் புரியாப் பித்தனிவ னென்று
மன்பதை யுலகத் தன்பர்க ணகைத்தனர்
ஆழியம் புவியி லனைவரும் பழித்த
வேழமென் றிகழா தென்னையுந் தாங்குறுஞ்
சூதமு முல்லையு மசோகமுங் குவளையு
மீதுயர் கஞ்சமும் வெளிப்பட மலர
வெந்திறல் வாலியைத் தந்தைகொன் றதுபோல்
ஒளித்துநின் றெய்த வொண்சிலை மாரனை

முழுத்திரை கொழிக்கு முத்தவெண் ணகையான்
மருங்குசூழ் கிடந்த கருங்கட னகைக்கு
மல்லலம் பெரும்பணை வயல்சூழ்
தில்லையம் பலவர் தென்புலி யூரே. (59)

அம்மானை

லித்தாழிசை.

தென்புலியூ ரம்பலவர் தில்லைச் சிதம்பரத்தே
வெம்புலியொன் றெந்நாளு மேவுங்கா ணம்மானை
வெம்புலியொன் றெந்நாளு மேவுமே யாமாகில்
அம்பலத்தை விட்டே யகலாதோ வம்மானை
ஆட்டைவிட்டு வேங்கை யகலுமோ வம்மானை. (60)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மானுலாம் விழியுமையாள் கற்பலகை நீக்கிநின்ற
மடவாள் பங்கன்
ஊனெலா நடுங்கமடங் கற்பலகை யுடையோனை
யுருத்து வென்றோன்
கானிலே நடமாடுங் கற்பலகை யுடனடிக்குங்
கடவு டில்லைப்
பானிலா மதிச்சடையான் கற்பலகை யென்பர்சங்கப்
பலகை தானே. (61)

பாண்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கற்பலகை தனிலிருந்து கவியுரைத்த புலவனார்
கருணை தன்னாற்
பொற்பலகை பெற்றீரே யாதலா லித்தனையும்
பொறுத்தேன் கண்டீர்

எற்பலகை போற்பசியா லெங்கையர்பாற் றாதுசென்றீ
ரிங்கும் வந்தீர்
பற்பலகை தனிலேற்பீர் வீணரு ராயிருந்தீர்
பாண ரூரே. (62)

நேரிசைவெண்பா.

பாணன் பெறப்பொற் பலகை யளித்ததில்லை
வாண னெனையாள வல்லானே — வீணன்போல்
அக்கமல முற்று மடிப்போது தந்துமுள்ளக்
கற்கமல முற்றுங் கடந்து. (63)

கட்டளைக்கலித்துறை.

கடித்தான்விளங்கும்பறைவைவேட்டுவன்கண்ணிவைத்துப்
பிடித்தா லெனவொரு காட்சியுண் டானது பேய்முலைப்பால்
குடித்தான் மலர்கொண் டருச்சித்த போது குழகன்செய்ய
அடித்தா மரையில் விழித்தா மரைசென் றகப்பட்டதே.(64)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அகப்பட்டே னதிமோக வலைப்பட்டே னின்பழைய
வடியார் தம்மால்
நகப்பட்டே னைவர்க ளுப்பட்டை யெழவைது
நாண மில்லேன்
முகப்பட்ட மதயானை யுரியுடையாய் தஞ்சமென
முறையிட் டாளாய்ப்
புகப்பட்டேன் றென்புலியூ ரம்பலவா பொறியற்றேன்
போற்றி னேனே. (65)

வகுப்பு.

பொறியா டரவினை யரைக்க சைத்தனை
புகையார் திரிபுர நகைத்தெ ரித்தனை
புலவோர் தமிழிரு செவிக்குள் வைத்தனை
புயமே லுமையிரு குயப்பொ ருப்பினை

பெறவே நெறிதனை யெனக்க ளித்திலை
பிறவா வகையெழு பிறப்ப றுத்திலை
பிரமா வெழுதிய வெழுத்த ழித்திலை
பெரியோ ரிணையடி தொழப்ப ணித்திலை

அறநூல் வழியெனை நடத்தி வைத்திலை
அடியார் சபைநடு விருத்தி வைத்திலை
அருளா ரமுதினை யருத்தி வைத்திலை
அடியேன் மனதினி லுருக்கம் வைத்திலை

சிறைசா லையிலெனை யடைத்து வைத்தனை
செலதா ரையிலெனை யகப்ப டுத்தினை
சிவகா மியைபொரு புறத்தில் வைத்தனை
சிவனே சபையினி னடித்த சித்தனே. (66)

கலித்தாழிசை.

நடிப்பார்தென் புலியூரி னம்பரிடம் பிரியாமெல்
லடிப்பாவை சிறுமருங்கு லாற்றியிருந் ததுபாரீர்
கொடிப்பாதி யாயிரண்டு குடஞ்சுமந்து வடஞ்சுமந்து
முடிப்பாரஞ் சுமந்துமொரு முருகனையுஞ் சுமந்ததுவே. (67)

மறம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

முருகனைக்குந் தார்வேந்தன் விடுதூதா விமயவரை
முதல்வி தன்னை
அருகணைக்கு மம்பலவர்க் காட்பட்ட மறக்குலமென்
றறியான் போலும்
பொருகணைக்குஞ் சிலைமாரன் பூங்கணைக்கு மறவர்குலப்
பூவை வாட்கண்
இருகணைக்கு மிலக்கானு லெங்களொரு கணைக்கிவனே
யெதிர்நிற் பானே. (68)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நில்லாத வெழுபிறப்புந் தொல்லை யல்லல்
நீக்குசிவ காமவல்லி நிலையுந் தொல்லை
செல்லாரும் பொழில்புடைசூழ் சிதம்பரமுந் தொல்லை
திருமூலட் டானமொடு சிவகங்கை தொல்லை
சல்லாபந் தருமகுடா கமமுந் தொல்லை
தலபுரா ணமுந்தொல்லை சபையுந் தொல்லை
சொல்லாரு நான்மறையுந் தொல்லை தில்லைச்
சோதிநட மாடுவதுந் தொல்லை தானே. (69)

ஊசல்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தொல்லைமறை யம்பலவ ரூச லாடச்
சுரர்முனிவர் மலரயன்மா றெழுது போற்றக்
குல்லைமகிழ் சண்பகமா தவிமந் தாரை
கொன்றைமலர் சொரிந்தடியார் குணங்கள் பாட

முல்லைமுகை நகையரும்பப் பசும்பொன் ஞேலை
முகமதியின் முத்தரும்ப வரம்பை மாதர்
தில்லைவளம் புகழுவினி தாடீ ரூசல்
சிவகாம சுந்தரியா ராடீ ரூசல். (70)

நேரிசைவெண்பா.

ஆடிய வெண்பிறையோ டந்தரத்தின் மேற்கொழுந்தா
யோடிய செக்கர்வா னெக்குமே — நீடியகோ
பங்கக் குழையான் படைமழுவான் றென்புலியூர்
சங்கக் குழையான் சடை. (71)

குறம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சடைமுடிக்கு மம்பலவர் வந்தணைவ ரென்றகுறி
தப்பா தம்மே
கொடைமுடிக்கும் படிசொன்னல் குறத்தியல்ல யானுமொரு
குசத்தி கண்டாய்
கடைதுடிக்கும் விழியிரண்டு மிடந்துடிக்குந் துடிக்குமிடக்
கரமுந் தோளுந்
துடிதுடிக்கு மிடப்புருவந் தனந்துடிக்குந் துடிக்குமிடத்
தொடையுந் தானே. (72)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்..

தொடையாடச் சிறுசதங்கை துதைந்தாடச் சிவகணங்க
டுணங்கை யாட
உடைவாளிற் பசுங்குருதிக் குழம்பாடச் சிறுத்தொண்ட
ருவகை யாட

நடையாடு பசுங்குழவித் தசைவிரும்பி ஞர்புலியூர்
நம்பர் பாரி
னிடையாடு புலிக்குருளைக் கெப்படிபாற் கடலூட்ட
வெண்ணி ஞரே. (73)

கலித்தாழிசை.

எண்ணினுக்கு ளடங்கிடாதவர் தில்லையம்பல வாணஞர்
இவரளித்திடு மதனமோகன மிவண்மனத்தி லடங்குமோ
விண்ணினுக்கு ளடங்கிடாது விரித்தெழுந்திடு வெண்ணிலா
விரகினுக்கு ளடங்கிடாது விசைத்தெழுந்திடு காமநோய்
மண்ணினுக்கு ளடங்கிடாது வசந்தகால வசந்தனும்
வாசகத்தி லடங்கிடாது மடந்தைபட்ட வருத்தமுங்
கண்ணினுக்கு ளடங்கிடாதிவள் கண்ணிலேவிழு கண்ணினீர்
காசினிக்கு ளடங்கிடாதிவள் காதல்கொண்ட விலாசமே. (74)

கட்டளைக்கலித்துறை.

மேலண்டர் போற்றும் புலியூரர் பாம்பின் விடத்தையஞ்சி
மாலஞ் செழுத்துந் திருநீல கண்டர் மணியும்பொற்ரூர்
நீலந் தருமணி சின்னப் படாம ணிறுத்தநிலாப்
பாலும் பசுந்தழை யுங்கை விடாது பரிந்தனனே. (75)

சித்து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பரிசித்து நறுமலர்கொண் டருச்சித்து மம்பலவர்
பதத்தை நன்ருய்த்
தெரிசித்து நேசமுடன் பூசித்துந் திரிகின்ற
சித்த ரப்பா

வருசித்தர் தமைக்கண்டால் வஞ்சித்து நயம்பேசி
வழிவி டாமல்
ஒருசித்தர்க் கமுதளித்தா லொன்பதினா யிரம்பசும்பொ
னுதவ லாமே. (76)

இன்னிசைவெண்பா.

உதயமே ருப்பொருப்போ டொப்பர்சபை வாணர்
துதயவே நீறணி வாய்தூய் திருப்பர்
கதையைமீ தேயெழுதிக் கட்டிவைத் தாலென்
இதயமே சம்பந்த ரேடு. (77)

சம்பிரதம்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

ஏடியும் புலவனும் போலவே யூமைதனை
யின்னமும் பேசுவிப்பேன்
இவுளிதனை நரியாக்கி நரியையும் பரியாக்கி
யிந்திரசா லம்பண்ணுவேன்
வாடியுடல் வேர்வொழுக மதுரையிற் பிட்டுக்கு
மண்சுமந் தையர்முன்னாள்
வைகையை யடைத்தபடி கடலையு மடைத்திடுவன்
மண்ணுலகி லிதுவித்தைபோ
பாடியும் பரவியுந் தேடாமன் மாயனும்
பத்மாச னக்கடவுளும்
பன்றியும் பறவையுந் தானாகி முண்டகப்
பாதமுஞ் சடைமகுடமுந்

தேடியுங் காணாத திருவுருவை மார்கழித்
திருமஞ்ச னத்தில்யார்க்குந்
தெரிசிக்க வும்பண்ணி யனவரத நடனமுஞ்
சேவிக்க வும்புரிவனே. (78)

கலிநிலைத்துறை.

புரிநூல் புனைவார் திருநீ றணிவார் புலியூரர்
பரிபூ ரணராய் மடவா ருயிரே பலிதேர்வார்
எரிநீ றிடவே நகுவார் பகுவா யெருதேறி
வருநூ புரமா னசையால் பலகால் வருவாரே. (79)

மேகவிடுதூது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வருடிக்கு மழைமுகில்கா ளனதாரைக் கடல்சுவற்ற
மன்றா ளாடுங்
குரிசிற்கு நீர்மொழிந்தா லாவிபெற லாமெமக்குங்
கொண்டல் காளோர்
இருடிக்கும் பதஞ்சலிக்கு மிடைநடுவே நடனமிடு
மிருபா தங்கள்
தெரிசிக்க லாமுமக்குஞ் சேவிக்க லாம்புலியூர்ச்
சிவனைத் தானே. (80)

வஞ்சிப்பா,

சிவகங்கையுந் திருமதிலும்
மணிமன்றமு மதிமுகமும்
பவளவாயும் படர்சடையும்
தவளநீறுந் தமருகமும்

சிவந்தகாலுங் கருமிடறும்
பசந்ததாரும் பனிமதியும்
புண்டரமொடு புலியதளும்
குண்டலமொடு குரைகழலும்
கண்டவன்
புன்பிறப் பகற்றினை புனிதா
என்பிறப் பறயா னென்றுகாண் பதுவே. (81)

சந்தக்கலிநிலைத்துறை.

வேத புராண சபாபதி யாகிய வேதாளர்
தாதகி மாலையர் தாமரை யாகிய தார்தாரார்
மாதர் புரூமயில் கேகய மாமுகில் வாழ்பூவை
ஓதிம மாமிவை போவது மீள்வது மோயாவே. (82)

கலித்தாழிசை.

ஒப்விதண்டையில்லைதில்லையம்பலத்துளாடுவார்
ஒருவரன்பிலாமைகொண்டொருத்தரோவிதண்டைமுன்
போய்விதண்டையிட்டுமீள்வரன்னைமார்கள்தோழிமார்
புலவிதண்டையிட்டுநிற்பர்புள்ளெலாம்விதண்டைகாண்
வேய்விதண்டையுறவினோர்கள்வெகுவிதண்டைகண்ணிலா
வெண்ணிலாவிதண்டையூர்விதண்டைமற்றமின்னனார்
வாய்விதண்டைநீலிபெற்றதாய்விதண்டையிவையலால்
வாரியேழுமேவிதண்டைமாரவேள்விதண்டையே. (83)

நேரிசைவெண்பா.

தண்ணார் பொழிற்றில்லைச் சங்கரனார் சீர்பிழைத்தாற்
கண்ணா யிருந்து கலந்தாலும் — எண்ணார்கொல்
வேர லுமிழ்ந்ததழல் வேள்வியனற் கையுடம்பு
மூர லுமிழ்ந்தசுடர் மூன்று. (84)

தழை.

கட்டளைக்கலித்துறை.

மூதந்த மாந்தில்லை யம்பலக் கூத்தர் முனிவர்விண்ணோர்
போதந்த மாந்தர் புகழ்புலி யூரர் பொருப்பிறைவா
மாதந்த மாந்தன பாரத்தி லேபொற்றி வாழ்ந்தனள்காண்
நீதந்த மாந்தழை யாவியன் றேவெங்க ணேரிழைக்கே. (85)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நேராடல் புரிபரமர் புலியூர்ச்சிற் றம்பலவர் நிமல நாட்டில்
வாராடு களபமுலை வடமாட விளையாடு மடவார் கண்கள்
போராடு மெதிராடு முறவாடும் வரிக்கயலைப் போந்து சாடுந்
தாராடு மிளைஞோரைச் சண்டையிடு மணிக்குழையைச்
[சருவுந் தாமே. (86)

பிச்சியார்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சருவிச்சீ ராட்டுமொரு பஞ்சவன்னக் கிளியேந்தித்
தவத்தோர் காணத்
தெருவிச்சீ ராயணிந்த கஞ்சுளியுந் திருநீறுந்
தெரிசித் தோரைப்
பொருவிச்சீர் பேராசை பூண்பிச்சீர் சண்டையிடு
பூச லெல்லாம்
வருவிச்சீர் மடலேற வைப்பிச்சீர் சிவன்புலியூர்
வரும்பிச் சீரே. (87)

இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

சீரணங் கண்ட திருநீல கண்டர்பரி
பூரணங் கண்ட புலியூர் தொழுதெழுவார்
ஆரணங் கண்டா ரவர். (88)

மடக்கு

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அண்டர் காணநெஞ் சங்கவன் றுயிலை
அத்த னேயிலை யங்கவன் றுயிலை
புண்ட ரீக புரநடந் தேறிலாய்
பொன்னின் வாயிற் படிநடந் தேறிலாய்
மிண்ட னாகவுங் காலங் கழிந்ததே
மிகவி ரந்துண்டு காலங் கழிந்ததே
தெண்ட னாக வரங்கிடந் தில்லையே
செம்பொ னம்பல வர்க்கிடந் தில்லையே. (89)

இடையினச் சந்தவிருத்தம்.

தில்லையர னெல்லைதிரு நெல்லைதிரு முல்லை
நல்லமொடு வில்லைவன நெல்லிவன நல்லூர்
மல்லைநகர் கொல்லமொடு வில்லிபுரம் வல்லம்
குல்லைவன நல்லநகர் கொல்லிமலை யாமே. (90)

கட்டளைக்கலித்துறை.

ஆயுந் தனயரும் பெண்டிரு மாயலைந் தேனடவிப்
பேயுந் தனயரும் பெண்டிரு மாயிற்று பேதமுண்டோ
நாயுந் தலைமுறை யேழா னதுநட ராசவின்னம்
ஓயும் படிக்கில்லை யோவைய னேயென் னுயிரினுக்கே. (91)

நிலைமண்டில ஆசிரியப்பா.

உயிர்த்தன ளாமோ வுறவின ரொலிப்பச்
செயிர்த்தனள் செவிலி தேய்த்த சிறுபறை
அஞ்சுகக் கிளவிக் கைபவி யப்பி
வெஞ்சினக் கூளிமை விலக்குந ரொருசார்
நித்திலக் குதம்பை நீரெழ நிவந்த
கைத்தலங் கதுவாது கன்றிழந் தெனவே
அதனால்,
காரியொடு கழறவுங் களிய ளியம்பவும்
நாரியொடு நவிலவு நாவெழுந் திலளே. (92)

சந்தக்கலிநிலைத்துறை.

கல்லுங் குழையும் படிநின் றடருங் கருதாரைப்
புல்லும் புரமுன் பொடிகண் டவர்தென் புலியூரில்
வில்லுங் கழலும் புயலுங் கொடுவென் றிளைஞோரைக்
கொல்லும் படியென் னெதிர்நின் றதுமின் கொடிமானே. (93)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாழைமா மயில்போன் மாழைநேர் விழியாண்
மாழைசேர் வனமுலைவெதும்பா
மாலைமா மதியான் மாலையே நிகர்வாண்
மாலையே தவிர்த்தருள் புரிவாய்

சூழுமா லிகையால் சூழுமா துயரால்
சூழுமா றென்றையு முணராள்
சூதுவா தறியாள் சூதமே னியினள்
சூதுநேர் முலையின்மீ தணைவாய்
வேழமா மலையே வேழவீ ருரியாய்
வேழமா மதனைவென் றவனே
வேலையா ரமுதே வேலைநேர் விழியார்
வேலையே தவிரவாழ் வருள்வாய்
ஆழிமால் கடலே யாழிமால் பரவும்
ஆழிசேர் விரலுமை கணவா
அம்பலத் தமுதே யம்பலத் தடஞ்சூழ்
அம்பலத் தமரர்சே கரனே. (94)

நேரிசைவெண்பா.

கரத்தாற் றொழுதிடினுங் கண்டிறைஞ்சி னலுஞ்
சிரத்தால் வணக்கஞ் செயினும் — உரைத்திடினுந்
தில்லைக்கப் பானின்று சேவித்தா லுஞ்சனனம்
எல்லைக்கப் பானிற்கு மே. (95)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

எல்லைக்கோ புரநான்குங் கொடிமுழங்க நிதிவழங்கு
மிறைவீ ரெங்கள்
தில்லைக்கோ விந்தர்தொழு மம்பலவர் திருநாடா
செம்பொன் வேண்டேம்

கொல்லைக்கோ மழவிடையின் கொழுந்துமட மணிமார்பிற்
குளித்த பின்பு
முல்லைக்கோ வின்மடந்தை முலையாளைக் கோடீண்டு
முழங்குந் தானே. (96)

கட்டளைக்கலித்துறை.

தான விலங்கைத் தழைகொண்டெப் தேனென்பர் தானவரங்
கான விலங்கை யழித்தவர் போனிற்ப ராதலினால்
ஈன விலங்கை விடுத்தாள் பவர்தில்லை யீசர்வெற்பில்
வான விலங்கை வளைத்தெய்கு வாரிந்த மன்னவரே. (97)

கலிவிருத்தம்.

மன்னேயென் பிறப்பறுக்க வல்லவருண் டெனிலடியேன்
என்னாலெம் பிறப்பறுக்கக் கடவேன்கா ணெம்பெருமான்
உன்னாலும் பிறப்பறுத்தற் கரிதெனிலொண் புலியூரா
பின்னான்மற் றெனைவோருங் கொடிக்காளம் பிடிப்போரே. (98)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

போரு வானவர் சூழ்ந்தசிற் றம்பலம்
புலிப தஞ்சலி போற்றுசிற் றம்பலம்
பாரு ளோர்கள் பரவுசிற் றம்பலம்
பரம னாடக மாடுசிற் றம்பலம்
ஏரு லாவுசிற் றம்பலஞ் செம்பொனால்
எழுதி மேய்ந்தசிற் றம்பல மெம்பிரான்
சீரு லாமுறை பாடுசிற் றம்பலஞ்
செம்பொ னம்பலந் தில்லைச்சிற் றம்பலம். (99)

உயிர்வருக்கமோனை ஆசிரியப்பா.

அம்பலக் கூத்தன் ஆரூர் மானவன்
இடைமரு தீசன் ஈங்கோய் மலையினன்
உறையூ ரெந்தை ஊறன்மா நகரினன்
எறும்பிமா மலையினன் ஏடகத் துறைவோன்
ஐயா றமர்ந்த வமரர்கள் பெருமான்
ஒற்றியூ ரிறையோன் ஓமாம் புலியூர்ச்
சிற்றம் பலவன் சீர்பர வுதுமே. (100)

திருச்சிற்றம்பலம்.

தில்லைக்கலம்பகம் மூலம் முற்றிற்று.

உ

சிவமயம்.

தில்லைக்கலம்பகம்

செய்யுள் முதற்குறிப்பகராதி.

செய்யுள் எண்.

——0——

உ

சிவமயம்.

2. திருவாமாத்தூர்க் - கலம்பகம்.

இரட்டைப்புலவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவாமாத்தூர்க்கலம்பகம்.

காப்பு.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

தஞ்சமென் றமரர் கெஞ்சத்
 தானவ ரதனின் விஞ்ச
அஞ்சவே வருநஞ் சுண்ட
 வழகரா மாதை யார்க்கு
மஞ்சுசேர் பொழில்சூழ் பம்பை
 மாறுப ரந்நீர்த் தானைக்
கஞ்சநாண் மலர்கொண் டேத்திக்
 கலம்பகஞ் செய்வோம் யாமே.

நூல்.

மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

— தரவு —

பூமேவு சதுர்முகத்துப் பொலிமறையோன் சடங்கியற்ற
மாமேவு பசுந்துளவ மாயனுத கம்பொழிய
ஈராறு விளக்கெறிப்ப விமையவர்பல் லாண்டிசைப்பப்
பாரேழு பாலிகையுட் பல்லுயிரு மங்குரிப்பக்
குலகிரிகாற் பகிரண்ட கூடநெடுங் காவணத்தே
உலகனைத்து மீன்றாளை யுயர்மணஞ்செய் தருளினையே!

— தாழிசை —

அப்போது மணக்கோலத் தபிராமங் கண்டன்றோ
இப்போதும் வானவர்கண் ணிமையாம லிருந்தனரே!
பைப்போது புயங்கேசர் பாதாளம் போயுழுவ
ரப்போயு மீண்டிருவர் காணு தறிந்திலரே!
குறையறுத்த செங்காட்டங் குடியம்மை சட்டுவத்தே
முறையமைத்த கருங்கலத்தே முடித்தொண்டர் பெருங்
[கலத்தே
பறையறுத்த பரிகலத்தே பகிர்ந்தகறி யமுதினைமீண்
டிறையழைக்கச் சொன்னபோ தியமபுர மென்படுமே!
மோகமுறு மாயிரமா முககங்கை யொருபாதி
பாகமுறுஞ் செந்துவர்வாய்ப் பசுங்கிள்ளை யொருபாதி
சாகைமறை யொருபாதி தண்டுளவோ னொருபாதி
யாகவகை போயன்றோ வருவுருவ மாயினையே!

— அராகம் —

மிடறரு மொழிசின விடைபொறு விடையிணை
கடலிடர் படவொரு கணைவிடு கணையிணை;

மலரயன் வினவுறு மறைதரு மறையிணை
பலபடி பலவுயிர் பறைதரு பறையிணை;

ஒருவரு மிருவர்முன் றெளிசெயு மொளியிணை
தருமறை பதமொடு சடைபடர் சடையிணை;

— தாழிசை —

ஆனீழல் வடுப்படினு மாகாயம் வடுப்படுமோ
மாநீழ லிருந்தன்றோ வடுப்பட்ட துன்மேனி!

இராமனார் காரணமோ வெரிபொன்மலை வளைத்திளைத்தோ
பராபரமாய் வீற்றிருந்தாய் பம்பைநதிக் கரைதனிலே!

ஐவர்க்கும் விநோதமுமா யறிவுமறி யாமையுமாய்
வைகைக்கு மண்சுமந்தால் வான்கங்கை யென்செயுமே!

அணிப்புலவர் பெருமிதமோ வல்லதுநின் றமிழறிவோ
மணிப்பலகைக் கீழ்நின்றாய் மறைகிடந்து முறையிடவே!

அச்சமற்ற விடமன்றோ வமுதாய்ப்பின் னமரருக்குண்
எச்சிலிட்ட தல்லவோ வேடனெச்சில் விரும்பியதே!

செம்பூத மாகியுனைச் சேவிப்ப தருமறையே
ஐம்பூதத் திருமேனி யாரோவுன் னளவறிவார்!

— அம்போதரங்கம் —

தே மாத்தூர் பொருந்தினை
தீ யாத்தூர் முனிந்தனை
யா றைத்தூ ரடங்கினை
யா மாத்தூ ரமர்ந்தனை;

1. உலகுயிர்த்தனை
2. உலகளித்தனை
3. உலகெடுத்தனை
4. மலைவளைத்தனை
5. கடல்கொளுத்தினை
6. மழுவலத்தினை
7. மானெடுத்தனை
8. மானிடத்தினை;

எனவாங்கு

— சுரிதகம் —

ஆமா த்தையினுறை யழகிய நாதநின்
தேமா மலரடி சிந்தைவைத் திறைஞ்சுதூஉம்
எம்பா வங்கெட விடர்கெட விராப்பகல்
பம்பா நதிப்புனல் படிகுதும் யாமே
ஓடினு மாடினு முறங்கினும் விழிப்பினும்
பாடினுந் திருப்புகழ் பாடிக்
கூடினுந் திருவடி கூட்டுங்கோ வெனவே. (1)

நேரிசைவெண்பா

எனையளிக்கு மாமாத்தை யீசர்க் கனங்கா
உனையழிக்கும் வாணயன மொன்று—பனியின்
செருவழிக்கும் வாணயன மொன்றுசேர் மாதர்
உருவழிக்கும் வாணயன மொன்று. (2)

கட்டளைக்கலித்துறை.

ஒன்று மிரண்டுரு வாயுயர் மூவர்க்கு முற்பத்தியாய்க்
குன்றுத மாதைப் பரஞ்சுட ரேகொண்ட தண்டமிழ்நூல்
நன்றாக வோவெனி னின்றுரை யாப்புன்சொ னன்மை [யென்றால்
பொன்று வெருக்கணிந் தாயது போலுமென் புன்சொலுமே. (3)

கலிவிருத்தம்.

சொல்லாடிய வேதங்க டிக்கும்பல பூதம்
எல்லாமுறை பலவண்டமு மிடுநூபுர வடியார்
அல்லார்பொழி லாமாதையி லேயன்றணி புறையுங்
கல்லானிழ லெங்கேயது கண்டார்சில ருண்டோ. (4)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

உண்டிலந் துவர்வா யுற்றிலந் திரடோள்
உறவுயிர்த் திலமா லோதியின் மணமுங்
கண்டிலந் தமியேங் கலவியின் சமபங்
கனிவழங் குவதுங் கனவிலுங் கேளோம்
வண்டினம் புரளுங் கொன்றையந் தொடையார்
மங்கைபங் குடையார் மாதையம் பதியில்
அண்டர்பைந் தொடியா லென்பெறுங் கொடியேம்
அறிவினெஞ் சகமே யைம்புலன் களுமே. (5)

கட்டளைக்கலித்துறை.

புலம்போ னெறிசெலு மீகாம னுலைம் பொறிகலங்கிக்
கலம்போ லுடைந்துமுன் னங்குரஞ் சாய்ந்திடக் காய்ந்தமழு
வலம்போது மாதையைப் பாலித்த நாள்வந்துமாணிக்கப்பூஞ்
சிலம்போடு சேர்த்தனை போகரை சாரத் திருக்கண்வைத்தே.
(6)

புயவகுப்பு.

ஆசிரியச்சந்த விருத்தம்

கடல்வாய்தாக்கா முகடுசுடாவெழு
கறுவியகாளக் கடுவைக்கவர்ந்தன
கழுநீ ராற்று விழியுமைபாளிரு
கனதன முகிளக் கலவிக்கிசைந்தன
கரைபார்நாட்டார் பழுதுபடாதொரு
கடுபடு வலையக் கலைப்புனைந்தன
கனல்வாய் தோற்று வருமதசீகர
கரமலை யுரிவைத் தெரியப்பிளந்தன

படர்மா லாற்று வரிவையராருயிர்
பரிவொடு மெலியப் பலியைப்பயின்றன
பறைமோ தாற்று வயிரவராகிய
பரிபுர வரவப் பவனிக்கமைந்தன
படிவாய் கேட்டார் செவிகள்பொறுதொரு
படுகொலை மதலைக் கறிப்பகிர்ந்தன
பகலே போய்த்தா மதுரையிறைவலர்
பலகையி னுறைபப் படிபுக்குயர்ந்தன

புடைசூழ் மாத்தூர் முதுகணநாதர்கள்
புரிகுழல் புகலப் புகழிற்பொலிந்தன
பொடிமீ தூட்டா மறையுணர்தாமரை
புலிபணி பரவப் பொதுவிற்புரிந்தன
புரிநூல் சாற்று வருவிவிடாதிழி
புரைபறு பவளக் கிரியிற்றிரண்டன
புரைதீர் வாக்கா லுரைதருமூவர்கள்
புதியன கவிதைத் தொடையிற்புணர்ந்தன

செடைகூர் பாட்டா லுயர்மறைவேதியர்
திருமுக முளரிக் கொளியைப்புரிந்தன
திருமால் காற்று மொருகணையாலெழு
திரிபுர மெரியச் சிலைதொட்டுவென்றன
செகமேழ் காப்பார் திருமகனார்தலை
திருகிய மகரத் தருகிற்கிடந்தன
திருவா மாத்தூ ரழகியநாயகர்
செறிதரு தவளப் பவளப்புயங்களே. (7)

தலைவன்குறைநயந்துரைத்தல்.

கட்டளைக்கலித்துறை.

புயத்தள வான புயங்கத்த ரைபொற் புயங்கத்தரை
வயத்தலை மான்மழு வாமாதை நாதர் மலரடிநேர்
இயத்தமிழ் வல்லிதன் பால்வந்த கால மெனைவினவ
அயர்த்தன ராயினுஞ் சொல்லுமெல் லீர்களு மன்னங்களே.
(8)

தலைவன் வறும்புனங்கண்டு மறுகல்,
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அனத்திற் றிரிவார் காண்பரியார்
ஆமாத் தூரி லழகியனார்
இனத்தைச் சேரா தவர்போல
என்னெஞ் சுருகு தென்செய்கேன்
புனத்திற் காணேன் விளையாடும்
பூந்தண் சுனையிற் புறங்காணேன்
வனத்திற் காணேன் வரக்காணேன்
மடமா னெங்கே கடமானே. (9)

கழிக்கரைப்புலம்பல்.
கலிநிலைத்துறை.

மானே கிளியே மயிலே குயிலே வரிவண்டே
கானே சுனையே கழியே வழையே கான்யாறே
ஆனே றுடையா ராமாத் தூர்சென் றடையார்போல்
ஊனே வருமே யுயிரோ வெனுமே யுய்பாதே. (10)

தலைவி அருந்தவர்வாய்மை வற்புறுத்தல்.
கலிநிலைத்துறை.

உய்யாத விடைகொண்டு தவறாத மொழிதந்
தொளித்தேகினும்
பெய்யாத முகில்கொண்டு வந்தா ரெமக்கொன்று
பேசாதிரார்

மையாடு மொருகண்டர் மகிழ்வாகி வளர்கின்ற
மாமாதைபோல்
ஐயாவுன் மொழிகொண்டு மொழியாய மொழியான
தவர்வாய்மையே ! (11)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வாரண முரிசெய் தாரு மாதையின் வைகி நஞ்சைப்
பாரணம் பண்ணி னாரும் பாப்பலங் கார ராரும்
நாரணன் றேடி னாரு நான்முகன் றேடி னாரும்
ஆரணம் பாடி னாரு மழகிய நாத னாரே. (12)

தலைவி புள்ளொடுகிளத்தல்.

வஞ்சிவிருத்தம்

அழகிய நாயக ராமாதைத்
தழைகெழு சோலைத் தாராவே
பொழிபுய லோடுவர் போனாரோ
விழியக லாதவர் மீள்வாரோ. (13)

கட்டளைக்கலித்துறை.

மீளார் பிறப்பினில் வீழார் நரகினில் வேறொருநாள்
கேளா ருயிர்க்கொரு கேடுசெய் யார்கிளர் தீவினையின்
மூளார் திருநுத லீறிக ழார்பின்னை முத்தியல்லால்
தாளார்தென் மாதை யழகிய நாத ரடியவரே. (14)

பருவங்கண்டு பெருமகள் புலம்பல்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

அடியார்ப வங்க ளறநீ றணிந்த வரனார் முடிந்த பரனார்
வடிவாப விந்து முடியா ரிருந்த வயன்மாதை தங்கு குயிலே
முடியாத கங்கு லுறவாகி நின்று முதிராத கொண்ட லதிரா
விடியாதகொண்டனடுவேதகைந்ததினிவேறுதஞ்சமிலையே.

தலைவிஆற்றுததன்மைகூறல்.

கலித்தாழிசை.

தஞ்சமில்லவ ராவிகோலிய சாபமூழ்கிய சாயகம்
அஞ்சும்வல்லவ ராடுபூசலி னளவுகாண வடுக்குமோ
மஞ்சுபுல்லிய மாடமாளிகை மாதைமேவிய நாதனார்
நஞ்சமேபமு தாகவுண்டரு ளுதனார்நுத னயனமே. (16)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நயன நகாயுத ரழகிய நாயகர் நதிபொரு மாதையுளார்
பயனுடை மூவர்தம் மனவிய லாகிய பாவக மாரறிவார்
உயர்நெறி வேரற வுலகமே லோகமொ டொருவெளி யாய்
[விடுநாள்
அயன்முடி மாலைகொ டரிமுடி மாலைகொ டாடுவர் பாடுவரே.

மெய்தொட்டுப்பயிறல்.

வஞ்சிவிருத்தம்

பாடுவை யாடுவை பணியோதிக்
காடிடை மூழ்குவை களிவண்டே
ஆடக வில்லித ஞமாதைப்
பீடுடை மானிடை பிழைகாணே. (18)

தலைவன்பிரிவு பாங்கியறிந்து தன்மனத்தழுங்கல்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

பிழைத்த புரங்க ளெருப்பெழ நின்றவர்
பெற்றவ ரன்பொடு பேசாதே
அழைத்து விருந்து சமைத்த வுடம்பை
யழைத்தவர் தங்கிய வாமாதைக்
கழைக்குண் மறிந்து குழைக்குள டர்ந்து
கறுத்து மடங்கிரு கண்ணூறு
செழித்து வளர்ந்து சுழித்தெழு நண்பர்
செலுத்துவ ரின்றுயர் திண்டேரே. (19)

தலைவி கார்காலங்கண்டிரங்கல்.

கலிவிருத்தம்.

தேர்வந்தமை கண்டீரெழு திரைவாரி முழக்கிக்
கார்வந்தமை கண்டீர்நிலை கண்டீர்வரி வண்டீர்
வார்செஞ்சடை முடியாருறை மாமாதை மருங்கே
ஆர்வந்தெ னரும்பாவித னளவேயிர வளவே. (20)

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

அளவி லாதோ ரறிவி னாலு மரியயோகப் பெருமையாலும்
எளிய ராயு மரிய ராயும் யாரு மெய்யே சேருவாரே
ஒளிகொண் மாதைப் பதியி னூடேயுருவுதங்கு மருவுதன்னைத்
தெளிவி லாதா ரன்ன மாயும் பன்றியாயுஞ் சேர்கிலாரே. (21)

கட்டளைக்கலித்துறை.

சேர்ந்தமை யாளுஞ் செழுநலப் பாகமுஞ் செவ்விபருள்
கூர்ந்தெழுபச்சைத்திருமேனியுங்கொண்டுகுன்றமொன்றை
வார்ந்தவில் லாக வளைத்தார் விளங்கிய மாதையிலே
போந்தவர் போந்தில ரேலென் படாதெழு பூதலமே. (22)

கலிவிருத்தம்

பூண்ட மால்பணி யாய்புகழ் மாதையாய்
ஆண்ட நாயக னேபழ லாடியே
வேண்டு வேனிது வேவிடு காலதூ
தீண்டு போதருள் வாயிது போதுமே. (23)

தலைவன் மேகமொடுபுலம்பல்.
எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

போதி ரண்டுவிழி யான வெந்தையிறை
புங்கவன் றெரிவை பங்கினன்
மாதை யம்பதியில் வாரி யுண்டநெடு
வான்வ ளைந்துவரு மஞ்சுகாள்
ஆத ரம்புதிய வம்பு கொண்டெழுது
மதனின் மைபெழுதி யவரையஞ்
சோதி கொண்டசுரு ளோலை யங்கைகொடு
சுரர்வி டுக்கவரு தூதரே. (24)

தலைமகள் செக்கர்கண்டிரங்கல்.

கட்டளைக்கலித்துறை.

தூது நெருக்கு மிதழியந் தாரினுந் தோகையர்தங்
காத னெருப்புக்கு நீரல வேகமு காடவிசூழ்
மாதை நகர்ச்சிறந் தாரடி யார்தம் மனத்திருந்தார்
கோதை யிடத்தமர்ந் தார்திரு மேனிக் குடதிசையே. (25)

தலைமகள் நிலவுகண்டிரங்கல்.

கலிவிருத்தம்.

குடக்குமீ தொன்றுபோய்க் குணக்கெ ழாதலால்
அடுக்கவா னொன்றவந் தனலை வீசுமால்
மடக்கலா மஞ்ஞைசேர் மாதை நாதனார்க்
கிடக்கணோன் வலக்கணோ னிரண்டுந் தீக்கணே. (26)

கட்டளைக்கலித்துறை.

கம்பத் துறையுறை நீலமு மாதைக் கடிநகர்சூழ்
பம்பைத் துறையி லுறையும் பவளமும் பாற்கடல்சூழ்
செம்பொற் சிகரத் திமையத்தி லேவந்து சேர்ந்திலரேல்
உம்பர்க்கு வாழ்விலை யேயிலை யேபுவிக் குற்பத்தியே. (27)

வலைச்சியார்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

பத்திபடு முதுமேபெய்க டொக்கதிரு நடமைதர்
பச்சைமயி லிடமான பெருமான்
முத்தரழ கியநாத ரத்தருறை புகழ்மாதை
முத்துதிரை வலைவாணர் மகளார்

நெய்த்ததுவ ரிதழூறு புத்தவமு தினைவாரி
நித்தமிவர் கயல்கூறி வரவே
அத்தருல கிதுவாகி யித்தரணி யதுவாகி
யப்பொழுது புவிமாறு படுமே. (28)

தலைவன்வருந்தியமை பாங்கி தலைவிக்குணர்த்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாறுபட வைகைக்கு மண்சுமந்தார் மாதைவரி
வண்டு பாடச்
சோறுவிரி தாழையிடைச் சுரபுன்னை பந்தரெலாஞ்
சுரிசங் கார்ப்பக்
கூறுபடு காலலவன் பேடையுடன் குழையுமணங்
குறியா தோங்கி
ஆறுமழை மின்காட்ட வரையிரவிற்
றடுமாறு மாவி தானே. (29)

தலைவிகையாறெய்திடுகிளவி.

கலிநிலைத்துறை.

ஆவி தளர்ந்தாய் மேனி பசந்தா யலரானாய்
ஏவி லுழன்றே நாணு மிழந்தா யென்செய்தாய்
வாவு கடும்போ ரேறு புரிந்தார் மாமாதைக்
காவல ருன்பான் மேவிய துண்டோ கழுநீரே. (30)

தலைவியை முன்னிலையாக்கல்.

கலிவிருத்தம்.

கழுநீர் கண்ணாகிற் றண்ணளி காணேனே
பழிநீர் விடமாகிப் பாவி பதைப்பேனே
வழிநீர் பிறைநாறு மாமுடி யாமாதைச்
செழுநீர் பொருபம்பைத் திருநதி குடைவீரே. (31)

தலைவன்குறிப்புவேறாக நெறிபடக்கூறல்.

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

குடிபொரு பாதி யானவர் குறைமதி சூடும் வேணியர்
அடியவ ரேவல் போனவ ரழகிய நாதர் மாதைவாய்
வடகிரி பேறு மாமயில் வரைமட லூரு மோதிமம்
நடைபெறு மாத ரோடெழு நதிபல வோடு மாடுமே. (32)

தலைவி வலம்புரிகேட்டு உளமகிழ்தல்.

கட்டளைக்கலித்துறை.

ஆடக் கொடியிட்ட தாமரைப் பாத ரழகர்வைகு
மாடக் கொடிமதின் மாதையன் னீர்மல ரிற்பிறந்தாள்
தோடுற்ற வோதி முடித்தசங் கோமலர்த் தோகையுடன்
கூடப் பிறந்தசங் கோவின்று தேர்முன் குறித்தசங்கே. (33)

தலைவனிடத்தலைவிவருந்தல்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

சங்குதுயில் கின்ற வெண்கமல மொன்று
தண்கலைம டந்தை தருமாதைப்
புங்கவன்வி ளங்கு பம்பைநதி வந்து
புந்திமகிழ் கின்ற புள்ளீரே
எங்களுயி ரென்று முங்களுயி ரென்று
மிங்கினியி ரண்டி லெண்ணுரே
செங்கயல்பு ரண்டு வெண்டரள பந்தி
சிந்தவும றந்து சென்றாரே. (34)

கட்டளைக்கலித்துறை.

சென்றார் பாவைதன் பாலிருந் தார்திகழ் மாதையிலே
நின்றார் பணிபவர் நெஞ்சகத் தேசைவ நீறணிவார்
மன்றா டுவரென்பு சூடுவ ரேற்றின் வருவர்நஞ்சை
ஒன்றாக வுண்ப ரிவரா மெவரினு முத்தமரே. (35)

பாங்கனொடு தலைவனுற்றதுரைத்தல்.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

உத்தமன் முத்தா னத்தி னடித்தோ
னற்பவ மற்றோ னுபர்மாதை
வித்தக னெத்தா னத்திலு நிற்போன்
வெற்பு நெறிக்கே மீள்வாரே
சித்ர முலைக்கே முத்து நகைக்கே
செற்ற முகிற்கே திருவான
பத்தி விழிக்கே நெய்த்த கவிர்க்கே
பட்ட நுதற்கே பட்டேனே. (36)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பட்ட யானையி னுரிவை யாடையும்
பவள மேனியுந் தவள தூளமும்
எட்டு வாகுவு மிடுபு யங்கமு
மினிது கண்டவர்க் கிமைபொ ருந்துமோ
மட்டு லாவுதண் கொன்றை வேணியார்
மங்கை பங்கனார் மாதை நாதனார்
கட்டு மாசுணப் பாத சூடமுங்
கண்ட கண்களே யண்டர் கண்களே. (37)

காமமிக்ககழிபடர்கிளவி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

கண்ணா ஞர்தே டண்ணா லாரெங்
கண்ணி லுள்ளார் மண்ணி லுள்ளார்
உண்ணி லாதார் மாதை மூதூர்
ஓதி மங்காள் சாத கங்காள்
வண்ண நீல வாவி தோறு
மலையு மாரங் கடலு மாரந்
தண்ணி லாவே வெண்ணி லாவே
தனியி ராவே யினியி ராவே. (38)

தலைவன் தலைவியைப் புகழ்தல்.

நேரிசைவெண்பா.

இருந்தவிட மெல்லா மிளநீர் தருவார்
அருந்து மமுதளிப்பா ராஞர் — பரந்தபுனல்
ஆமாதை யையரிடத் தம்மைபறச் சாலையின்பம்
வாயா புகுந்தனவோ வந்து. (39)

தலைவி கலவிநலம் நினைந்துவருந்தல்.

கட்டளைக்கலித்துறை.

வந்திப் பவர்தம் மனக்கோயில் கொண்டவர் மாதையுள்ளார்
கந்தர்ப் பனைவென்ற கண்ணுத லார்கயி லைக்கருகே
இந்தச் சுனைமருங் கேயன்பர் வாழ்வித்த வின்பமெல்லாஞ்
சிந்திக் கினுங்கொண்டல் காளண்டர் வானமுந் தீப்படுமே.
(40)

தலைவிகையாறெய்திடுகிளவி.
எழுசீர்ச்சந்தவிருத்தம்.

படமுது புயங்க னுடன்மிசை நடஞ்செய்
பதயுக சுயம்பு பயில்மாதைப்
புடைபெருகு பம்மை நதிவளை சொரிந்த
புதுமணல் விழைந்த போதாவே
இடையனெறி கின்ற மரமென விருந்த
எமதளவு நொந்து பாராயே
தடமலி குடம்பை மலரணை புகுந்து
தமபெடை மணந்த தாராவே. (41)

கட்டளைக்கலித்துறை.

தாரமன் றுவுடை யார்மாதை மேவிய சங்கரனார்
பேரொளி மேனி பவளமென் பாரெமைப் பேணுமடி
காரண பிறி யாரறி யார்முடி நான்முகனார்
ஆரறி வார்பின்னை யின்னமுந் தேடு மருமறையே. (42)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அருமறைகட் கெட்டாத வாதி யார்நம்
மையனா ராமாத்தூ ரழக னார்தந்
திருவடித்தா மரைமலர்கள் சிவக்க வாடுந்
தித்தித்த கூத்திங்கே தில்லை யிங்கே
விரிசடைசேர் பழமுனிகா ளோடி வாரீர்
வியாதனார் மதுச்சுனையின் மிதிக்கின் றீரோ
இருதலைக்கொள் ளியைக்கொண்டே சுள்ளென் றெம்மை
யிட்டவா பாவமெலாங் கெட்ட வாவே. (43)

தலைமகன் இறைமகள் திறம்நோக்கி அழுங்கல்.

கட்டளைக்கலித்துறை.

கெட்டோ ருறவு கிளையினு மில்லைக் கிளையுருவச்
சுட்டோ ருறவுபின் சொல்லவுண் டோசுரும் போடரும்பி
மட்டோ டவிழ்ந்த விதழியந் தாரையர் மாதைசுற்றும்
நெட்டோ டையிலனங் காளுற வாயிங்ங னிற்கின்றதே. (44)

தலைவி மாலைகண்டிரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நின்றுறங்கு முடையாயர் நிரையழைக்குங் குழலோசை
நெடுங்கொம் போசை
குன்றிருந்த வரிவேங்கை கொலைமறந்து செவியேற்குங்
குறும்புன் மாலை
மன்றுறைந்த நடநாதர் மதிகரந்தை முடிநாதர்
மாதை மூதூர்
அன்றுசென்ற கடுந்திண்டே ரமர்புலத்து முண்டோகண்
டழைக்கு மேதை. (45)

சம்பிரதம்.

கட்டளைக்கலித்துறை.

மேலம ரேசரி ஞரா யணரில் விதிகளிற்றங்
காலமெ லாமுடி யுங்கடை நாளிற் களங்கறுக்க
ஆலமெ லாமுண்ட வாமாதை யைய ரடியவர்கைச்
சூலமெ டாதவ ரார்பர வாதிகள் சொல்லுமினே. (46)

மருட்பா.

சொல்லுமி னென்றுநீர் சொல்லுஞ் சொலிவிடா
நில்லுமின் மானிடங்கா ணில்லுமினோ — தொல்லை
மாதையங் கடவுளுங் கடவுள்
சேதிமங் கெழுமு தேவருஞ் சிலரே. (47)

பொய் பாராட்டல்.

நேரிசையாசிரியப்பா.

சில்லிதழ் மலிந்த தெய்வத் தாமரை
முட்டாட் கடியற வுண்டோ மட்டவிழ்
இதழி யந்தொடை யழகிய நாயகர்
மாதையங் கிரியின் மானார்
சூதடு கொங்கை சுமந்தநுண் ணுசுப்பே. (48)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நுண்ணறிவு பறிபோய் நெறிபோய்
நுவல்மதுர மொழிபோய் விழிபோய்
உண்மணிக ளொளிபோய் விடுநாள்
உள்ளபடி விடைமேல் வருவீர்
பெண்ணமுத மிடமா னவரே
பேய்மருவு மிடமா னவரே
வண்ணமதி முடிநா யகரே
மாதையழ கியநா யகரே. (49)

தலைவியைப்புகழ்தல்,
வஞ்சித்துறை.

அழகிய நாயகர்
பழகிய மாதையர்
குழைகெழு சாபமே
மழைகெழு சாபமே. (50)

மடக்கு.
அறுசீர்க்கழிநெடிலடியாசிரியச்சந்தவிருத்தம்.

பண்ணி லறுமிரு தாளரே பாவ மறுமிரு தாளரே
கண்ணி லமர்தரு மானரே களிறு குரகத மானரே
எண்ணில் பலவுக பாலரே யாரும் வெருவுக பாலரே
வண்ண மழகிய நாதரே மாதை யழகிய நாதரே. (51)

தலைவன் புல்லொடுகிளத்தல்.
கட்டளைக்கலித்துறை.

நாதர்க்கு நாத ரழகிய நாதர் நயந்துறையும்
மாதைப் புரத்து மடவன்றில் காளுங்கள் வஞ்சிபஞ்சிற்
கோதைக் கழகுசெய் கோதையெல் லாமென் குரகதத்தின்
பாதைப் பெருவழி யாமழி யாவிடம் பார்த்திருமே. (52)

குறம்.
எழுசீர்ச்சந்தவிருத்தம்.

இருந்த குறியினி தெழுந்த கருமம
தியம்பு மொருகுற மென்குறம்
அரந்தை யொடுதெவ முயன்ற பொழுதஃ
தறிந்த தொருகுற மம்மைகேள்

மருந்து பிறருண வெழுந்த கடுவிட
மகிழ்ந்து புதிதுணு மாதையார்
பொருந்து தொறுமெனை மகிழ்ந்து நினையிது
பொய்க்கில் மறைமொழி பொய்க்குமே. (53)

இடைச்சியார்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பொய்யி டைச்சியே மெய்ம்மு டைச்சியே
புதுவ ளைச்சியே பொதுவர் பாவையே
மெய்வி லைத்திறம் விழியு ரைக்குமே
மென்சொல் கொண்டுநீர் விற்க வேண்டுமோ
மைபெ றித்தசெங் கந்த ரத்தனார்
மாது பாகனார் மாதை வீதியில்
ஐயர் விற்றுவா வென்று விட்டபால்
அமுதி டச்சொனா ரல்ல வல்லியே. (54)

தலைவி சிறைப்புறங்கூறல்.

கட்டளைக்கலித்துறை.

வல்லிக் கிடந்தந்த மாமாதை நாயகர் வண்டின்கையிற் [த்த
கொல்லைப் பசுங்கொன்றைத் தாருந்தந் தாரில்லை கோலிவை
முல்லைக் கொடியையுந் தேமா வையும்விட்டு மொய்குழலீர்
அல்லிக் கடுக்கையை வைத்தில மேகம் மறிவின்மையே. (55)

மறம்.

கலித்தாழிசை.

வில்ல டுங்கொம்பு பல்லி யங்கொம்பு
வினைப டுங்குன்ற வில்லிகாள்

சொல்ல ழிந்துங்கண் மன்ன வன்பின்பு
சொன்ன சம்பந்த மென்னடா
வல்லி தன்பங்கன் மைபொ ருங்கண்டன்
மாதை யஞ்சம்பு மரபிலெம்
மில்லில் வந்தன்று கொண்ட தொன்றன்றி
யில்லை சம்பந்த மில்லையே. (56)

தலைவனிடத்தலைவிவருந்தல்.

கலிவிருத்தம்.

இல்லை யான விருபிறப் பாளனுர்
மல்லன் மாதை மகிழ்நர் பிரிந்தநாள்
எல்லை போகியு மேகா வெனக்கிது
நல்ல காணிற்றை நாளென்ற யாமமே. (57)

நேரிசைவெண்பா.

பாமாழி மாலை யிடபமென வெட்கினீர்
ஆமாதை நாதர்க் கறிவிலிகாள் — தேமாலைப்
போரே றெனுநாமம் பொய்யன்றே நாங்களோ
நீரோ மொழிந்தீர் நிலத்து. (58)

காமமிக்ககழிபடர்கிளவி.

சந்தவிருத்தம்.

நிலவும்பணியுந்தேனிறைகொன்றையுமாரும்நீரும்
பேரென்புநிறைசெஞ்சடையார்தம்
அலையும்பணிலம்போயணிவீதியிலேறு
மாமாதையில்வாழுமாழிப்புள்ளீரே

உலையும்பொங்கழல்போலியானுளம் வெந்தழிகின்றே
னுறவும்பாராதேயிரவுந்தேராதே
மலையுங்கடலும்போய்வைகிப்பெடையோடே
வாருஞ்சிறுகாலேயூருஞ்சிறுகாலே. (59)

சந்தக்கலிநிலைத்துறை.

காலத்தி னுயிர்கொள்ள வெதிர்கொள்ளும் யமதூதர் கர
[சூலமும்
ஆலித்து வீசுங்கொ டும்பாச மும்மென்னை யமராடுமோ
மாலத்தி மெய்க்கொண்டு மகனத்தி கைக்கொண்ட மாமா
[தையார்
சூலத்தை மாருத பாசத்தி னூடே யெதிர்த்தாலுமே. (60)

கட்டளைக்கலித்துறை.

ஆற்குழை யோவர வோவாயர் பாடி யருமனையோ
பாற்கட லோதிங்க ளோதங்கு மாவம் பலபலவாம்
மார்க்கமு மாகிநின் றார்மாதை நாதர் வலங்கொள்பம்பை
மேற்கரை கோயில்கொண் டார்புரஞ் சீறிய வெங்கணைக்கே.
(61)

தலைவன் முறுவற்குறிப்புணர்தல்.

இன்னிசைவெண்பா.

வெங்காள முண்டு விபுதர்க் கமுதீந்த
கங்காளர் மாதைக் கடுக்கைச் சடைமுடியார்
மங்கா விடைமேல் வருவார் திருநகையோ
நங்காவில் வாழ்வார் நகை. (62)

இறைவன்றனக்குக்குறைநேர்பாங்கி இறையோற்கண்டமைகூறல்.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

நகைய முற்கொடு புரமெ ரித்தவர்
நாதர் வித்தகர் மாதையார்
இகன்மு கப்படை யிறைவர் வெற்பினின்
யாமி தற்கினி யென்செய்கோம்
அகமி முற்றிய கிளிக ளைத்துவள்
அளிக ளைப்பெயர் வினவியே
மகனெ ருப்பெழ நெடிது யிர்ப்பொடு
வருவ ரிப்பொழு தொருவரே. (63)

கட்டளைக்கலித்துறை.

வருக்கைத் தடம்பொழின் மாமாதை யையர்க்கு மாசொன்
முருக்கொத்த மேனி யழகிய நாதர்க்கு மூச்சரவத் [றில்லா
திருக்கைக் கமல வரனார்க் கரிதிருத் தேவியன்றேல்
அரிக்குப் பொருளுரை யீர்கெடு வீர்நும் மறிவின்மையே.(64)

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

அறிவழி யுங்குடி கொண்டநோ யன்னை மருந்தினி லாறுமோ
உறுவது மாதை யிடத்திலே யுறைவது பம்பை மருங்கிலே
பறையும ருந்தொரு பாதியும் பச்சை பழுத்த புறத்திலே
கறுவிய தீக்கொடி கண்ணியே கட்டி விடிலிது பட்டதே.(65)

நேரிசைவெண்பா.

பம்பா நதிக்கே பழனமா தைப்பதிக்கே
நம்பா விருந்தனையே நாங்காணக்—கொம்பார்
புதுமுகமா யன்னமாய்ப் பொன்முடிதாள் காணார்
சதுர்முகனார் தந்தையார் தாம். (66)

அம்மானை.

இடைமடக்காய் ஈற்றடிமிக்குவந்த கலித்தாழிசை.

தந்தை பிடித்தரியத் தாயா னவள்சமைக்க
வெந்த விடக்குய்ந்து மீண்டதுகா ணம்மானை
வெந்த விடக்குய்ந்து மீண்டதுவே யாமாயின்
மைந்த னுறப்பு மணத்ததோ வம்மானை
மாதையார் வல்லபத்தான் மணத்ததுகா ணம்மானை.

இதுவுமது.

ஆரத் தடவயல்சூ ழாமாதை வாழழகர்
தாரொத்த மேனி தழலொத்த தம்மானை
தாரொத்த மேனி தழலொத்த தாமாயின்
ஈரக்கங் காநதியா ளிருப்பதேன் அம்மானை
ஈரம் பெருநெருப்புக் கில்லையே யம்மானை. (68)

தலைவன் முன்னிலையாக்கல்.

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

அம்மனை பந்தா யரிய கழங்கா யங்கையி லணையேனை
மென்மலர் வண்டாய் விரிகழு நீராய் மென்குழ லானேயை
கைம்மறி கொண்டார் கங்கை புனைந்தார் கந்தரம் வந்தாரும்
மைம்முகி னஞ்சார் மங்கையொர் பங்கார் மாதையில்வருவீரே.
(69)

தலைவன் வறுங்களநாடி வருந்தல்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

வருங்கட களிற்றினையு ரித்தபெரு மான்பழன
மாதைநகர் வந்தபெருமான்
பொரும்புர நெருப்பெழ நகைத்தபெரு மான்மதன்
பொடிபட விழித்தபெருமான்
பெருங்கனை பரக்கரை யறுத்தகள மோமணி
பிறங்கிய மணிப்பொடிவிடு
வருங்கடு விடம்புதிய துண்டகள மோதினைபொ
டரியவவர் சென்றபுலமே. (70)

குறளடிவஞ்சிப்பா.

புலங்குலைந்து மலங்குலைய
நவத்துளையுந் தவிர்ந்தொரீஇ
அறிவழிந்து நெறிபாழ்பட்
டைமலிந்து மலிந்துகை
மொழித்தமர்கூடி யமராடுங்
கழிபிறப்பி லழிகுவெமோ
உமையேந்தி மழவானே
றார்திநீ றணிந்தோன்
ஆமாதை முதலோன்
தாமரைப்பெருந்தகைத்
திருந்தடி யிருந்தநம்
மிதையபங் கயத்தே. (71)

தலைவன்நீடத்தலைவி வருந்தல்.

கலிவிருத்தம்.

தேவிதிரு மார்பினுறை தேவிமண வாளர்
வாவிபுனன் மாதைதனின் வாவிமலர் காளே
ஆவிசரு காவதுமுன் னாவியரு ளாதோ
பாவிமன மேபெருகு பாவிநிலை பாரீர். (72)

கழிக்கரைப்புலம்பல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பாராரும் பிடரும் பகுவாயும் பணமும்
பலபத்திச் சிகையுங் குலத்துதித்த தொகைபோ
டாராரும் புனைவா ராமாதைப் பதிசூ
ழாழித்தண் புனலுண் டாலிக்குங் காரே
காராரும் பொழிலே பொழில்சூழுங் கழியே
கழியோடுங் கயலே கயலுண்டா ராவே
நீராருந் துறையே துறைபாருந் தடமே
நிதமாடுங் குருகே நேயர்செயற் குருகே. (73)

தலைவி குருகொடு கையாறெய்திடுகிளவி.

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

குருகணை குருகொடு குளிர்சிறை சிறையொடு
குளிர்தலை தலையொடு கூடியே
கருதல கலகொடு கவரடி யடியொடு
கருவிழி விழியொடு மூழ்கியே
வருகரி யுரிபவர் மறைகம முடியினர்
மதிபுனை சடையினர் மாதைபார்
ஒருகுரு கெனவுயி ருடல்பிறி திலையென
வுறுபிணி யறிகில ரூரரே. (74)

கலித்தாழிசை.

ஊருமாசுண மூர்வபோலுக வொளிசெய்மின்னுட னேடியே
வாரிவாரி விசும்பெலாமிக மஞ்சனஞ்செயு மஞ்செலா
மேருமால்வரை வில்லியாருயர் வேதமாதையி னேதனார்
சேரும்வாள்விழி கடவுதேரவர் சென்றதேரொடு சென்றதே. (75)

நேரிசைவெண்பா.

தேங்கமல நாறுவன தீந்துழாய் நாறுவன
ஓங்கிதழி மாலைதனக் குண்மாலை—பூங்கடுக்கைத்
தெய்வப் பெருமான் திருவாமாத் தூருறையுஞ்
சைவப் பெருமான் சடை. (76)

கொற்றியார்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

சடைமௌலி முடிவேந்த ராபிசாரத்
தழலின்வரு கரியுரித்த தம்பிரானார்
அடல்மகுடப் புயங்கனார் திருவாமாத்தூர்
ஆதியா ரருவமா யுருவமானார்
விடைபொருத விடைக்கொம்பைத் தோளிலிட்டார்
மெய்யம்பின் கையம்பை விழியிற்கொண்டார்
உடைபமுத லடிபளந்த விடங்களெல்லா
மொற்றியா யிடவந்த கொற்றியாரே. (77)

கலிவிருத்தம்.

கொற்ற மாதையிற் கொற்றவ னைத்துழாய்ப்
பெற்ற மூரும் பிரமக பாலியை
உற்ற மூவர்க் கொருவரென் றோதுவார்
மற்ற நாவு மனங்களும் வாழியே. (78)

தலைவிநெஞ்சொடுவருந்தல்.

கலித்தாழிசை.

வாழிதணந்தவர் வாழிகடும்பரி வாழிம றைந்தொளிதேர்
வாழிகுறுந்துளி வாழிமதங்கயம் வாழிவ ளைந்தெழுகார்
காழியில்வந்தவர் பாழியமண்பகை காதுசெ யும்பெருமான்
ஆழிவிடந்தர ராழியுகம்பயில் மாதைம ருங்கருகே. (79)

தலைவன் தலைவியைமுன்னிலையாக்கல்.

கட்டளைக்கலித்துறை.

அருங்கா னகத்திற் றிருவுந்தி போதைகொண் டங்குநின்றீர்
கருங்கா வணங்கொண்டு முற்பட்ட வாறென் கடல்கொடுத்த
வருங்காள முண்ட பிரான்றிரு மாதையின் வல்வினையேன்
பெருங்காதல் வெள்ளந் தருங்கட லூடு பிறந்தவரே. (80)

யோகினியார்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பிறப்பி லாதொரு குழகனார் பேணு மாதையி லழகனார்
பேயொ டாடிய நாதனார் பெற்ற மேறிய பெற்றியார்
இறப்பி லாதொரு தலைமையும் யார்கொ லோசிலர் கூறுவார்
இந்த யோகினி பெருமையு மெங்ங னேபிற ரெண்ணுவார்
அறுத்த தாழ்வட வளவெலா மரிய சங்கி லழுந்தவே
அயில்நி றம்புனை கஞ்சுக மமர்ந்த வூதிய மாகவே
வெறுத்த காலர்கள் சூலமே மெய்யில் வைத்தருள் சூலமே
விண்ட கண்ட கபாலமே கொண்ட கொண்ட கபாலமே.
(81)

கட்டளைக்கலித்துறை.

கொண்ட கபால மயனார் சிரமரிக் கூர்மம்விண்ட
சண்ட கபால மணித்திருக் கோலஞ் சதுர்முகனார்
கண்ட கபாலமெல் லாநெற்றி மாலைக் கழகுசென்னி
அண்ட கபாலம் பெறுந்திரு மாதை யழகருக்கே. (82)

கலித்தாழிசை.

அழகார் மாதையுளா ரணியும்நா ராயணரே
குழையும்வா னோர்புடைசூழ் குடியும்நா ராயணரே
தழையும்நீ ரூர்சடையார் சடையும்நா ராயணரே
விழியின்மே லோர்விழியார் விடையும்நா ராயணரே. (83)

நேரிசைவெண்பா.

நாரா யணனறியா நாட்கமல நாங்காண
வாரா தெதிர்நிற்க வல்லீரோ —சீராரும்
பூமாத்தூ ரத்தரே பொற்பணியூ ரத்தரே
ஆமாத்தூ ரத்தரே யன்று. (84)

கலிவிருத்தம்.

அன்றுபே ருழுவைமுன் னுரணம் பாடவே
மன்றுளா டும்பிரான் மாதைவா ழெம்பிரான்
என்றுநீ டும்பத மிடைவிடா தேத்திலை
ஒன்றுதா னணுகுமோ வுங்கள்பா வங்களே. (85)

நேரிசைவெண்பா.

பாவ வினைக்குறும்பு பற்றறக்குங் கொற்றத்தாள்
தேவர் கபாடந் திறக்குந்தாள்—ஆவிவிடாப்
பூமாத்தூ ராற்றுப் பொதிசோறுந் தண்ணீரும்
ஆமாத்தூ ரத்த ரடி. (86)

காமமிக்க கழிபடர்கிளவி.

கலிவிருத்தம்.

அடியி லிந்துவை யமுது செய்திடாய்
கொடிய தென்றலே கொண்டு வாழ்வியாய்
மடிவில் கொன்றைபார் மாதை நாதனார்
விடையில் மொய்ம்பனார் வேணி நாகமே. (87)

சித்து.

கட்டளைக்கலித்துறை.

வேணி முடிப்பரன் மாதைபப் பாலிந்த வேர்கொளுத்தத்
தாணு வெடுத்த தனுவைப்பொன் னாகத் தருங்குளிகை
காணி யுருக்க வொருகோடி செம்பொன் கடுகவொரு
பாணி முதற்கொண்டு வாகொண்டு வாசொன்ன பச்சிலையே. (88)

இ து வு ம து.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பச்சிலை பத்திலொர் பத்ம பதத்தொடு
பக்க மெரித்திடவே
இச்சரி கைப்பொதி கற்ப மிருக்கு
மெனக்கிது வித்தைகளோ

மைச்செறி பொற்பொழின் மாதை பொருத்தர்
மணிப்பவ ளத்துறையும்
அச்ச விடத்தினை மற்றிரு வர்க்கு
மருத்தி யிருத்துவனே. (89)

கட்டளைக்கலித்துறை.

இருந்தாய் திருமுடி மேல்வளர்ந் தாயெம் பிரானிடத்தே
மருந்தா யவதரித் தாயொரு மாதிட மாதையையர்
பிரிந்தா ரிருந்தே யரும்பாவி நின்னைப் பிழைத்ததுண்டோ
குருந்தா யெழுந்தவன் றேதழ லாய்நின்ற கோண்மதியே(90)

நேரிசைவெண்பா.

கோளரவு கண்டுங் குறையாம் பிறையணிந்த
காளவிட முண்டிருண்ட கண்டரூர்—பாளைகமழ்ந்
தூரும் பொழிலுந் துறையுந் துறைவெண்சங்
கூருந் திருவாமாத் தூர். (91)

கலிவிருத்தம்.

ஆமாத் தூரி லழகிய நாயகர்
தேமாத் தூரிற் சிறந்தே வருகிலர்
தாமாத் தூரிற் றழுவக் குழைபவே
வாம பாக மிடைவடு வானதே. (92)

தலைவன் மேகமொடுசொல்லல்.
கட்டளைக்கலிப்பா

ஆன கயலிடை மருவு கமலமும்
அஞ்ச னக்கமல மளவு கமலமும்
பானன் மூடிய வமுத கமலமும்
பரவிய பசலை முகிளித கமலமும்

வானவர் தலைவ ரழகர் மாதைசூழ்
மருவிய கமல மனையில் வளர்வதோர்
தானகை திருமுன் முகில்கள் செல்லுமே
தாரகத விரத வரவு சொல்லுமே. (93)

தலைவன் உருவெளித்தோற்றம் கண்டு உளமறுகல்.

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

சொல்லுவ போலொரு சொல்லாடீர்
தோய்வது போலிரு தோடோயீர்
நல்குவ போலிதழ் நல்கீர்முன்
நகுவது போலொரு நகைதாரீர்
மல்விடை யூர்பவன் மழுவாளி
மாதையின் வீதியில் வருவீர்நீர்
அல்லகொ லோவய லாமோநீர்
அருவழி போயின தறியேனே. (94)

காலம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

அயன்மாத்தூ ரழகரங்க ணழலாக் காலம்
ஆமாத்தூ ரழகரங்க ணழலுங் காலம்
மயலாற்றா ரணியரங்க மாறுங் காலம்
மனமாத்தூ ரணியரங்க மாறாக் காலம்
கயலாற்றார் மணிமுத்தங் கவருங் காலம்
கடலாற்றார் மணிமுத்தங் கவராக் காலம்
இயன்மாட்டே ரெம்மிறையி னிசைக்குங் காலம்
இயன்மாட்டே ரெம்மிறையி னிசையாக் காலம்.
(95)

ஊசல்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

காலன்விழும் படியுதைத்த கழலுங் காலுங்
கண்ணனிடு பலிபெற்ற கையு மோடுஞ்
சாலமதன் படவிழித்த நுதலுங் கண்ணுந்
தடம்புரங்க ளுமூட்டு தனுவுந் தோளுஞ்
சேல்கயல்கள் விளையாடும் பம்பை யாறுஞ்
செந்தமிழைத் தடுத்தாண்ட தெய்வ நாடும்
ஆலமயின் றமுதீந்த வழகர் சீரும்
ஆமாத்தூ ரும்பாடி யாடீ ரூசல். (96)

மதங்கியார்.

அறுசீர்ச்சந்தவிருத்தம்.

சதந்தருவங்தெனவண்டெழுமாதவிதாதவிழ்மாதையின்வாழ்
கதஞ்செய்புரங்கள்முனிந்தபெருந்தகைகமலபதம்பரவா
விதங்கொணடம்புரியங்கைசரந்தொறும்வீழுமனங்கசர
மதங்கிதருந்தனுமண்டலமெங்குமதன்றருமண்டலமே. (97)

தழைவிருப்புரைத்தல்.

கட்டளைக்கலித்துறை.

மேதிக் குலஞ்சொரி பால்கயன் மாந்தும் விரைப்பழன
மாதைக் கடவுள் சடாடவி யோமணிப் பேரணியோ
ஆதித் தனிவிழி யோநகை யோசெங்கை யம்பினம்போ
போதுற்ற சேவடி யோவைய நீதந்த பூந்தழையே. (98)

எழுசீர்ச்சந்தவிருத்தம்.

தழையுணர்ந் துணர்ந்து தகவழிந் தழிந்து
தனியுழன் றுழன்று சாயல்போய்
வழிமறந் துசென்று விழிகுவிந் துநின்று
மனவிருந் தயின்ற கானலே
அழிவில் மங்கைகொண்க ரரியமங்கை பங்கர்
அழகரன்பு கொண்ட மாதையார்
கழிசுரங் கடந்து பழியுடன் படர்ந்த
கனகனண்பு கொண்ட காதலே. (99)

பாண்.

கொச்சகக்கலிப்பா.

காட்டகந்தோ றுந்திரிந்து கண்குழிந்து தடுமாறல்
கேட்டிலையோ விலங்கேசன் கீதத்திற் கவர்ந்ததெலாந்
தீட்டியசீ ராமாதைச் சிவலோகன் றிருச்செவிகாண்
பாட்டறிவீர் படைவீடு பலிதிரியும் பாண்மகனே. (100)

கலிநிலைத்துறை.

மகனுக்கு மாலுக்கு முதலான வைபங்கள் பதினாலின்வாய்
அகிலத்தெவ் வுயிருக்கு முயிரான வாமாதை யழகற்குமே
நகமுற்று கடலுங் கடைந்தார்க ளுயர்நஞ்ச முண்டார்களோ
முகமொக்க வமுதாக வுண்டார்கள் முப்பத்து முத்தேவரே. (101)

திருச்சிற்றம்பலம்.

திருவாமாத்தூர்க்கலம்பகம் முற்றிற்று.

சிவமயம்.

திருவாமாத்தூர்க்கலம்பகம்

செய்யுள்முதற்குறிப்பகராதி.

எண் — செய்யுள் எண்.

தஞ்சமென்—காப்பு.

செய்யுள் முதற்குறிப்பகராதி முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

3. ஏகாம்பரநாதருலா.

இரட்டைப்புலவர்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஏகாம்பர நாதருலா.

காப்பு.

விகடசக்ர விநாயகர்.

சாற்றரிய ஆயிரக்கான் மண்டபத்தின் சார்வாக
ஏற்ற முடனே இனிதிருந்து—போற்றும்
விறல்விகட சக்ர விநாயகனை ஏத்தும்
திறல்விகட சக்ரா யுதம்.

நூல்.

1 நிலம்போற்றும் பைந்துளப நீலப் பொருப்பும்
பொலம்போற்றும் போதிற் பொருப்பும்-நலம்போற்றும்
2 மேருப் பொருப்பொருதன் வெள்ளிப் பொருப்பிலிரண்
டாரப் பொருப்புடைய வன்னமுடன்—சேர
3 இருந்து மனமகிழ்வுற் றெப்போது மின்பம்
பொருந்தி யுறைகின்ற போதிற்—கரந்தையினி
4 தேந்துமுடி யோனுடனே யின்பநகை யாடிவளைக்
காந்தளிணை கொண்டுதிருக் கண்புதைப்ப—வாய்ந்த

5 படியும் விசும்பும் பரிதிமதி காணா
தடையு மிடையிருளே யாகி—நெடிதூழிக்

6 காலஞ் சிறிது பொழுதிற் கழிதலாற்
சீல முனிவர்க்குந் தேவர்க்குஞ்—சால

7 மறையவர்க்கும் வேதம் வகுத்ததொழி லெல்லாம்
குறைவுபட்ட தென்றிறையுட் கொண்டு—செறியளக

8 ஓவியமே நின்னா லுலக நெறிமுறைமை
யாவுங் குறைவுபட்ட தீங்கதற்கு—மேவியநல்

9 வேதா கமத்தில் விதித்தபெரும் பூசைதனைப்
போதார் குழலாய் புரிகென்ன—ஈதெமக்கு

10 வாய்த்த தெனவிரும்பி வானோரை நஞ்சுண்டு
காத்த பெருமான் கழலிறைஞ்சி—ஏத்தி

11 மடமாது நின்னை வழிபடுதற் கான
இடமாவ தேதருள்செய் கென்ன—விடையோனும்

12 தென்பால தான திசையிற் றிரைவீசும்
நன்பாலித் தண்டகநன் னாட்டகத்து—முன்பாக

13 ஓது திருநகரி யோரேழி னுஞ்சிறந்த
ஆதி நகர்காஞ்சி யந்நகரிற்—போதநலம்

14 மன்னி வளர்வதொரு மாவுண் டதனிழற்கீழ்க்
கன்னி யெமையுனக்குக் காணலாம்—சொன்னபடி

15 ஆகம பூசை புரியவினி தவ்விடத்துப்
போக வெனவமரர் போற்றிசைப்ப—ஏகிப்

16 பொருப்பரைய னேவலொடு போந்துபல கோடித்
திருத்தகு மாதருடன் சேர—விருப்புடனே

17 தென்றிசையிற் சென்று திருவாய் மலர்ந்தவுயர்
நன்றுதிகழ் காஞ்சி நகரெய்தி—வென்றியிபம்

18 ஒன்று குறுமுயலுக் கோடு மிடம்பார்த்து
நின்றுவிடுங் காஞ்சி நிழல்பார்த்துச்—சென்றடைந்தோர்
19 தாம்பிறரைக் காணலாந் தம்மையவர் காணாமல்
ஆம்பரிசு நல்கு மகம்பார்த்துக்—காம்பொன்றின்
20 மூன்று முளரி முகிழ்க்குந் தடம்பார்த்துத்
தோன்றுமலர்த் தீபச் சுடர்பார்த்துத்—தான்றன்
21 இடத்து நிழனோக்கி யாவருங் காணாப்
படுத்து மொருகிணறு பார்த்துக்—குடக்கோடிக்
22 காணா வரிதாய்க் கரக்குநதி பார்த்தமரர்
பேணுலகத் துய்க்கும் பிலம்பார்த்துக்—காணரிய
23 செம்பொ னிறநல்குஞ் சிலைபார்த்துத் திண்காரி
வெம்பரியூர் செண்டு வெளிபார்த்துக்—கொம்பிற்
24 கடிக்கமலப் போதுங் கழுநீருஞ் சேரப்
படைக்குமொரு பாடலமும் பார்த்து—நடுப்புகுந்தோர்
25 தோற்றங் குரங்காக்குந் தொல்லையிடம் பார்த்ததனை
மாற்றுங் கடவுண் மடுப்பார்த்துக்—கூற்றால்
26 இறவா விடம்பார்த் திறந்தவர்பின் வந்து
பிறவா விடம்பார்த்த பின்னர்—செறிதரங்கக்
27 கம்பை நதியின் கரையணுகிக் காண்டகைய
பைம்பொழில்சூழெம்மருங்கும்பார்த்தருளி—எம்பிரான்
28 யாமா தரவோ டிருப்போ மெனச்சொன்ன
தேமா வடிநிழலைச் சேர்ந்தருளிக்—கோமானை
29 நாமினிது பூசிக்க நல்லவிட மீதென்று
பூமருவு தெய்வப் புனலாடித்— தாமாகக்
30 கம்பை மணலைக் குவித்துக் கசிந்துள்ளம்
எம்பெரு மாட்டி யினிதிறைஞ்சித் —தப்பழைய

31 சேடியர்க ணிற்பத் திருச்சூட் கக்கைபால்
தோடவிழ்பூக் கொய்து தொடுத்தணிந்து — கூட
32 விரவுந் திருவுருவில் வெண்ணீறு நெஞ்சில்
திருவைந் தெழுத்துந் திகழ — உரிமையுடன்
33 அந்தமில் பூசையின்மே லாளுடைய நாயகிக்குச்
சிந்தை யொருப்படவே செல்லுநாள் — இந்துநுதல்
34 ஆதிக் குலமடந்தை யன்புடைமை முன்புபோற்
சூதத் திருநிழலோன் சோதிப்ப — மோதிக்
35 கரைபொருது கம்பைநதி கற்பாந்தந் தன்னில்
விரிகடல் போற்றரங்கம் வீசி — இருசுடரும்
36 விண்ணும் பொலன்சக்ர வெற்புங் குலகிரியும்
மண்ணும் புதைய வரப்பண்ணி — எண்ணிறந்த
37 ஆரிடத்து மெவ்விடத்து மெப்போது முள்ளபிரான்
ஓரிடத்துத் தாமு மொளித்திருப்பப் — பாரிடமும்
38 மேலை யமர்நாடு மேகோ தகமாக
ஆன பெரும்பெருக்குக் கஞ்சாதே — வானவர்கோன்
39 செச்சை நிகருடம்பிற் செம்பாதி யாகியதன்
பச்சை யுடம்பருமை பாராதே — இச்சையுடன்
40 தேசு தரும்பழைய திவ்யாக மப்படியே
பூசை தனைபொழிந்து போகாதே — மாசிலா
41 அன்புடைமை தன்னை யகன்று லரன்மேனி
என்படுமோ வென்பதனை யெண்ணியோ — தன்பழைய
42 பெண்மையோ வன்போ பிறப்போ பெருங்காதற்
றிண்மையோ கற்போ தெரிகிலேம் — உண்மை
43 மறைபடைத்த மேனி வளையான் முலைபாற்
குறிபடுத்தி மார்பு குழைய — நறைபடைத்த

44 தாழ்ந்த புரிகுழலா டாணுக வம்மணன்மேல்
வீழ்ந்து தழுவ வெளிப்பட்டோன்—சூழ்ந்தமரர்

45 மீளா வடிமை விலையா வணங்கொடுக்குந்
தாளா னரிபிரமர் தம்பிரான்—ஆளாய

46 தொல்லைத் திருக்குறிப்புத் தொண்டன் றலைமோதக்
கல்லிற் புறப்பட்ட கையுடையோன்—வில்லால்

47 வசையின் முடிமேன் மதியாமன் மோத
விசைய னொடுபொருத வீரன்—பசியாற்

48 பதறி யொருசிறுவன் பால்வேண்டப் பாலின்
உததி கொடுத்த வுதாரன்—துதிபெருகத்

49 தேவர் நெருங்குந் திருப்பங் குனித்திருநாள்
மேவிய வேத விழாவொலியில்—தாவிக்

50 குலாவு பலபொற் கொடிவீதி யெங்கும்
உலாவி வருநாளி லொருநாள்—நிலாவியசீர்

51 எவ்வா னவரு மிறைஞ்சும் பெரும்பூசை
திவ்யா கமப்படியே செய்ததற்பின்—மைவானில்

52 ஆறு தொடவுயர்ந்த வாயிரக்கான் மண்டபத்தில்
ஏறி யருளி யினிதிருந்து—சீறியெழக்

53 காணுந் தொறுமொருதன் கண்மூன் றினிலிரண்டு
நாணுந் திருக்காப்பு நாணணிந்து—சேணுலவும்

54 மைவாரி மேகம் வளரும் பிறைபடைத்த
செவ்வான மீது திகழ்ந்ததென—எவ்வாயும்

55 தோடு விரியிதழிச் சூழறனிற் பல்கோடிப்
பாட லளிகள் படிந்ததென—நீடுமிரு

56 பானும் வெயிலுதவு பத்மரா கக்கிரிமேல்
நீல வொளிபோய் நிறைந்ததெனக்—கோலமுடன்

57 அன்றுதிருச் செங்காட் டணிந்ததிருச் சட்டைதனை
இன்று மணிந்தா ரினிதென்ன—ஒன்றாக
58 எம்மை யுடையா னிருபா கமுமெங்கள்
அம்மை திருமேனி யானதெனத்—தம்மின்
59 முயங்கக் கிரிமான் முலைகுழைத்த மெய்யில்
தயங்கத் திருச்சாந்து சாத்தி—உயர்ந்த
60 நனைத்தண் டுழாய்மௌலி நாபியில் வாழன்னம்
எனைத்து மறியா விடத்தே—தனக்கமையச்
61 சம்பு குலத்தொருவன் சாத்துகைக்கா மென்றளித்த
செம்பொன் மணிமகுடஞ் சேர்வித்துத்—தம்போல்
62 நிகரற் றவரிருவர் நீங்கா விடத்தே
மகரக் குழையங்கு வைத்துத்—திகழமரர்
63 சாத லொழித்ததற்குச் சான்றிருக்கு மவ்விடத்தே
சோதிமணிக் கட்டுவடஞ் சூழ்வித்துப்—போதப்
64 பதும வளைத்தழும்பு பட்ட விடத்தே
புதுவயிரக் கேயூரம் பூட்டித்—திதலை
65 பரந்து வளர்கடவுட் பச்சைக் குரும்பை
இரண்டு குறியிட்ட விடத்தே—திருந்துமுடிக்
66 காணிப் பிறைநிலவோ கங்கா நதிப்புனலோ
வேணிப் புரையிருபால் வீழ்ந்ததெனச்—சேணில்
67 பனித்தா ரகையின் பரிசன்ன முத்தின்
தனித்தாழ் வடம்விளங்கச் சாத்திக்—குனிப்பில்
68 திருந்து மபிநயமுந் தெய்வத் துடியும்
இருங்கனலும் வாழு மிடத்தே—பொருந்தப்
69 பிறந்த விளம்பரிதிப் பேரழகு மட்கச்
சிறந்த கடகஞ் செறித்து—நறுங்கப்

70 பிசைந்துபிசைந் துண்ணவொரு பிள்ளையறுத் தாக்க
இசைந்துபசி தோன்று மிடத்தே—விசும்பின்
71 முதிரு மிருளை முனிபதும ராகக்
கதிருதர பந்தனமுங் கட்டி—மதுரைப்
72 புரவி திகழிடத்தே பொற்பதும ராகத்
திருவுடை யாடை திருத்திப்—பரதவிதக்
73 குஞ்சிப்பு நல்லநிலைக் கூத்துந் திகழிடத்தே
செஞ்சித்ர ரத்னச் சிலம்பணிந்து—துஞ்சிச்
74 செலவுற்ற வானோர் சிரந்தொடுக்கு மாலை
இலகிக் கிடக்கு மிடத்தே—குலவும்
75 மதுமிக்க கல்லார மாலை யுடனே
இதழித் திருமாலை யிட்டும்—மதில்பொருத
76 தம்பொற் சிலையைத் தலைக்கொண் டனரென்னச்
செம்பொற் றிருவா சிகைசேர்த்து—விம்ப
77 இரவி யிடைதா னிலங்குவதே யென்னப்
பரவுமணிக் கண்ணாடி பார்த்துச்—சுருதியினால்
78 மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும்
தேவாரஞ் செய்த திருப்பாட்டும்—பாவனையால்
79 போதவூர் கண்ணீர் புளகத் துடனணிந்த
வாதவூ ராளிதிரு வாசகமும்—தீதகல
80 ஏட்டென் றெழுதா விருபிறப்போர் கற்கத்தான்
பாட்டுண்ட நாலு பழங்கவியும்—கேட்டருளி
81 ஐங்கைப் பவளநிறத் தானைப் பெருமானும்
செங்கைச் சுடர்வடிவேற் சேவகனும்—எங்கும்
82 நிறைபூதஞ் சூழ நிலமெல்லாங் காப்ப
மறைஞாளி யேறிவரு வானும்—நிறைபருளால்

83 துண்ணெனத்தே வர்க்குச் சுதைபகுத்த மோகினியாம்
பெண்ணிடத்தில் வந்து பிறந்தோனும்—பண்ணுமகம்
84 மங்கும் படிக்கழற்கண் வாய்ந்திலங்குந் தம்முடைய
திங்கணுதல் வேர்விற் செனித்தோனும்—துங்கமுடி
85 கொண்ட கடவுட் குளிர்கொன்றைத் தாருமுடித்
துண்ட பரிகலத்தி லுண்டோனும்—தண்டமிழால்
86 மண்புகழப் பாடி மறையூரி லாண்பனையைப்
பெண்பனை யாக்கிய பிள்ளையும்—திண்பிடித்துப்
87 பாழி யமணரிடும் பாரச் சிலையுடனே
ஆழி தனின்மிதந்த வன்பனும்—சூழுமிருட்
88 பாதி யிரவிற் பரவைக்குஞ் சங்கிலிக்கும்
தூது நடப்பித்த தோழனும்—தீதில்
89 வழுக்கில் பெருந்துறையில் வாழ்வித்த கோலம்
கழுக்குன்றிற் கண்ட கவியும்—வழுத்திநர்க்குப்
90 போத வினியதொரு பொன்வண்ணத் தந்தாதி
ஆதி யுலாவோ டமைத்தோனும்—சோதிமணி
91 மன்றி னருகு மலர்த்துழாய் நாறுமிடம்
கொன்றை கமழ்வித்த கொற்றவனும்—என்றும்
92 புடைமருவு தன்னிழலிற் போகாத பேயை
இடைமருதி லிட்ட இறையும்—அடையத்
93 துயர்கடந்த தொண்டத் தொகைபதனி லேனைச்
செயல்சிறந்த தொண்டத் திரளும்—கயிலைதனில்
94 தந்தாள் படாமற் றலையா னடந்துபோய்
அந்தாதி யாற்புகழ்ந்த வம்மையும் - இந்தநிலம்
95 கோட்டி வளைத்தெடுத்துக் கூட்டிக் குலைத்தடுக்கிக்
காட்டவல்ல பூத கணவரும்—ஈட்டுநலம்

96 எண்ணுமொரு நாற்பத் தெண்ணா யிரவரெனும்
புண்ணிய வேடப் புனிதரும்—நண்ணரிய

97 ஓரா யுதத்துத் தொளாயிரரென் றாழிமுதற்
பேரா நிமந்தப் பெருமையரும்—சேர

98 உரிய விதிமுறையோ டுள்ள முருகிப்
பொருவரிய வன்புடனே போதச்—சுரரைத்

99 திருவா சலினந்தி செங்கைப் பிரம்பால்
நிரையாக வெங்கு நிறுத்தி—வருவார்

100 கழற்சே வடிபணிந்து கண்களிப்ப முன்னே
எழச்சே வியுநீங்க ளென்ன—முழக்க

101 இருப்பதுவும் வெள்ளிமலை யென்னுமற் செம்பொற்
பொருப்பினு மேறினார் போல—விருப்பால்

102 வடித்தசுடர் வேற்சம்பன் வாழ்மல்லி நாதன்
கொடுத்த திருத்தேர்மேற் கொண்டு—முடித்தந்தி

103 ஆடும் விசையி லலையெழுந்து தன்மீதில்
நீடும் வகைசுழித்து நின்றதெனக்—கூட

104 இருகதி ரஞ்ச வெறிக்கு நிலாவில்
ஒருதனி வெண்குடை யோங்க—இருபாலும்

105 கங்கை நதியிற் கரைபுரண்ட சீகரம்போல்
மங்கையர்கள் வெண்சா மரையிரட்ட—எங்களையும்

106 இட்டாலோ பூணுக வென்றுரக மாடுவபோற்
பட்டால வட்டம் பணிமாற—விட்ட

107 எருது மராமரமு மெவ்வேழுஞ் சாயப்
பொருத விடைக்கொடிமுன் போத—வருவதொரு

108 மேரு கிரிதொடரும் வெள்ளிக் கிரியென்ன
மூரிவிடை யெம்பிரான் முன்போதப்—பேரிகை

109 சல்லிகை மத்தளி தண்ணுமை பண்ணமை
பல்லிய மெங்கும் பரந்தார்ப்ப—வல்லபடி

110 வாணன் குடமுழா வாசிப்ப மாமதுர
வீணை யுதத்தி மிகவுயிர்ப்பப்—பேணும்

111 பரிசி றமதுசெவிப் பாண்சேரி பெற்ற
இருவ ரிசைபாடி யேத்தச்—சுருதியெழும்

112 இன்னரம் பேழு மிசைததும்ப வெம்மருங்கும்
கின்னரர் தங்கள் கிளைபாட—முன்னரிடும்

113 பேரிகை யோசை பிறங்கமிகத் தாரையுடன்
மூரி வலம்புரி முன்முழங்க—ஆரம்

114 குளித்த வதிபாரக் கொங்கைத் தழும்பும்
வளைத்தழும்பும் பெற்றபிரான் வந்தான்—கிளைத்தசடை

115 ஏகாம் பரநாதன் வந்தா னிகல்விடையின்
பாகாம் பழையபரன் வந்தான்—மாகத்

116 தெழுமிரண்டு பேரொளியு மெப்போது மஞ்சி
வழிவிலங்கு மூருடையான் வந்தான்—சுழிகொண்

117 டலையும் பகீரதிநின் றார்க்கின்ற சென்னி
மலையன் றிருமருகன் வந்தான்—கலைதேர்

118 பரிசி லிருவர்க்கும் பகல்விளக்குங் கண்ணும்
வரிசை யுடனளித்தான் வந்தான்—ஒருவயிற்றில்

119 வாரா வுடம்புடையான் வந்தா னெனமறுகில்
சீரார் திருச்சின்னஞ் சேவிப்ப—வேரிமிகத்

120 தேங்கு மலரோன் சிறையோ திமமீதும்
ஓங்கு திருமா லுவணத்தும்—தாங்குபடை

121 வாசவன் வெள்ளை மதவா ரணமீதும்
ஈசர் பதினொருவ ரேறிடத்தும்—தேசுதரும்

122 ஆறிருவ ரெவ்வே றுடர்புரவித் தேர்மீதும்
வேறிருவ ரெண்மர் விமானத்தும்—சீறியடும்

123 கூற்றுக் கடவுள் கொடிய கடாமீதும்
போற்று மளகேசன் புட்பகத்தும்—காற்றுறவாம்

124 வேக மிகுதழலோன் வெற்றித் தகர்மீதும்
வாகை வருணன் மகரத்தும்—ஆகமத்தின்

125 நீதி தெரியு நிருதிநர வாகனத்தும்
காது பவனன் கலைமீதும்—சோதிதிகழ்

126 சீத மதிமுத்தின் றேர்மீது மோரேழு
வேத முனிவர் விமானத்தும்— போதவுயர்

127 விஞ்சையர் சாரணர் சித்தர் வியன்கருடர்
செஞ்சுடிகை நாகருடன் சேவிப்ப—மஞ்சுகவித்

128 தாடுங் கொடிக ளருக்கன் பரிதடுகக
மாட நெடிய மணிமறுகில்—நீடருளால்

129 பொன்னனை சூடகக்கைப் போதன்ன மும்புனலும்
எந்நாளு மெவ்வுயிர்க்கு மீந்தருளி—மன்னும்

130 அறச்சாலைப் பெண்டி ரருகுவரக் கங்கை
புறக்காவற் பெண்டிருடன் போதச்—சிறக்கும்

131 வரையரச மாதரும் வாரா கரத்தில்
திருவுடன் வந்த திரளும்—திருவும்

132 கலையை யகலாத கன்னிமட மானும்
மலையை யகலா மயிலும்—கலைமகளும்

133 பொன்னி னுலகாளும் பூவையரும் மாநதிகள்
என்னு மடவா ரெழுவரும்—அன்னமயில்

134 சீறும் விடைகளிறு சேனம் கடாயாளி
ஏறும் மடவா ரெழுவரும்—கூறும்

135 குலநாக மாதர் குழாமும் பணிந்து
பொலமாட வீதி புகுத—நிலமாதர்
136 தாணு நுதல்விழிமேல் தாவடிபோ கத்திரண்ட
பாண மலரோன் படையென்னப்—பூணரவம்
137 சூடுந் தரங்கச் சுரநதியிற் றேய்ந்துவிளை
யாடும் படிதிரண்ட வன்னமெனப்—பாடலிறைல்
138 தம்பெருமை பாடுந் தமிழோன் றனக்களித்த
வெம்பகலிற் சேர்ந்த விளக்கென்ன—நம்பருறை
139 சூதத் தெழுந்த துணர்ப்பல்ல வப்படலம்
கோதத் திரண்ட குயிலென்னத்—தீதற்ற
140 எந்தைபெரு மான்கரத்தி னேந்துமிள மான்கண்டு
வந்து திரண்டசில மானென்னச்—செந்தமிழின்
141 பாட்டுக் குழல்வோன் பசும்பாதி யின்வார்த்தை
கேட்டுத் திரண்ட கிளியென்னக்—கூட்டகிலார்
142 தாழ்ந்த சடைமுடியோன் றன்னுடம்பைக் காரென்று
வாழ்ந்து திரண்ட மயிலென்னச்—சூழ்ந்தரன்பால்
143 நன்புதிய தூதுக்கு நான்செல்வேன் நான்செல்வேன்
என்பனபோன் மென்குழல்வண் டெங்குமெழ—நின்புயமேல்
144 எங்க டழும்பணிந்தா லென்செய்யு மென்பனபோற்
செங்கை வளைகள் சிறந்தார்ப்பச்—சங்கரன்மேல்
145 தள்ள வரிபகுறி தாமு மிடத்தாயம்
கொள்வனபோற் கொங்கைக் குவடசைய—உள்ளமகிழ்
146 செம்பதுமை கேள்வன் திருமல்லி நாதனுயர்
சம்புபதி நல்குந் தடந்தேர்போல்—கம்பரே
147 இத்தேருங் கண்டாலோ வென்பனபோ லல்குலெனும்
அத்தேரின் மேகலைக ளார்ப்பரிப்ப—இத்தெருவில்

148 சீற்ற விடையோனைச் சேவிக்கப் பெற்றபதம்
போற்றுவபோற் பொன்னூ புரஞ்சிலம்ப—மேற்ககன
149 கூடம் வெளியடைத்த கோபுரத்துங் குன்றனைய
மாட நெடுமத்த வாரணத்தும்—ஓடுகதிர்
150 விஞ்சு கொடிதடுக்கு மேனிலா முற்றத்தும்
மஞ்சுதவழ் கங்கைகொண்டான் மண்டபத்தும்—வெஞ்சமரில்
151 தத்துபரி பல்லவன் சம்பு குலப்பெருமான்
வைத்த துலாபார மண்டபத்தும் — சித்ரமணிச்
152 சூளிகையின் மீதுஞ் சுதைநிலா முற்றத்தும்
மாளிகையின் மீது மறுகிடத்தும்—யாளி
153 செறியுமணித் தெற்றியினுஞ் செய்குன் றிடத்தும்
நிறைய வெவரு நெருங்க—இறையவனை
154 வந்து வணங்கி மதிக்கொழுந்துஞ் செஞ்சடையும்
சிந்தைகவர் கண்மலருஞ் செவ்வாயும்—எந்தைபிரான்
155 தெய்வப் புரிநூலுந் திண்டோளு மார்பகமும்
சைவத் திருவான தாழ்வடமும்—மெய்வழியக்
156 கொண்டதிரு நீறுங் குழைதூரந்த செங்கழுநீர்
மண்டு திருக்கொன்றை மாலையும்—எண்டிசையும்
157 தாவில் சுருதித் தமருகமுந் தம்முடைய
தேவி யறியுந் திருக்கூத்தும்—பாவையுந்தம்
158 உள்ளத்தே கொள்ளா வுருகாப் பெருகின்ப
வெள்ளத்தே வீழா மிகவுயிராத்—தள்ளியுறை
159 விட்டவாள் போல்விழியீர் மென்சுணங்கின் பொன்முலைமேற்
பட்டவா பாரீர் பசப்பென்பார்—கட்டழகன்
160 கோதையகன் மார்பங் குழைவிக்க மாட்டாதால்
ஏது படிலெ னிவையென்பார்—போத

161 நெருக்கி யரிதிட்ட நிரைவளைக ளெல்லாம்
இருக்கை யரிதுகரத் தென்பார்—நிருத்தன்

162 பரிக்குந் தழும்பு படுத்தா வளைகள்
இருக்கிலென் போகிலெ னென்பார்—திருக்கண்கள்

163 வையார்நம் மேலென்பார் வைப்பா ரவர்கருணை
மெய்யா னவளொருத்தி மேலென்பார்—ஐயோ

164 அருள்படைக்க வேண்டி யருமந்த கண்டம்
இருள்படைத்த தேனிங்ங னென்பார்-இருள்படைத்த

165 தின்றாகில் வானோ ரெனுஞ்சாதி யத்தனையும்
பொன்றாதோ வென்று புகலுவார்—வென்றிமதன்

166 ஏவானோ மேலென்பா ரேவினு லின்னமுந்தான்
வேவானோ போய்த்தோ விழியென்பார்—மேவனிலம்

167 செல்லாதோ மீதென்பார் சென்றால் வரவிடுமோ
நல்லார் திருக்காப்பு நாணென்பார்—புல்லத்

168 திருக்கொன்றை மாலைபெறிற் சிந்தைகுடி யேறி
இருக்கின்ற மாலொழியு மென்பார்—ஒருத்திகுறி

169 இட்டதிவர் மார்புபிற ரெய்துவதின் மாலுழன்று
பட்ட தமையும் படவென்பார்—மட்டவிழும்

170 அம்பதுமப் போதி னயன்மா லறியாத
உம்ப ரறியா வொருகிரியைச்—செம்பவளப்

171 பாதி யுடம்பு பசப்பித்தாள் பைங்களபக்
கோதை முலையாற் குழைவித்தாள்—ஆதலால்

172 உண்மைதனக் கிந்த வுமையாள் பிறந்ததற்பின்
பெண்மைதனக் கேற்றம் பெரிதென்பார்—பெண்மைக்

173 குறையு ளிவளன்றோ வென்பார்மற் றிங்ஙன்
மறுகி லெதிர்வந்த மாதர்—அறுசமய

174 அண்டருக்குந் தாயா ரறச்சாலை யிப்படிபெற்
றண்டிருக்கு மூதா ருடையானே—கொண்டவிருட்

175 காவி விழியொருத்தி கட்டிக் குறியிட்டு
மாவடியில் வைத்த வயிரமே—தேவிமுகம்

176 செவ்வி பெருகத் திருச்சூட கக்கையால்
தவ்விப் பிடித்துச் சமைத்தன்னம்—எவ்வுயிர்க்கும்

177 ஆரச் சொரிதருநெல் லாட்டைக் கிருநாழி
சேரப் படியளக்குஞ் சீமானே—மார்புபோற்

178 கண்ணுஞ் சிலர்படைத்த காணியோ காமவேள்
பண்ணுந் துயர்தீரப் பார்த்தருளீர்—வெண்ணிலவோ

179 டூரு மிளந்தென்றல் ஈரம லும்முடைய
ஆரம் பசிதணித்தா லாகாதோ—வாரவுளம்

180 வேவக் கறங்கும் விடைமணியை யும்முடைய
சேவுக் கினிதளித்தாற் றீதாமோ—மேவியவிக்

181 கொக்கி னிறகுடனே கூவுங் குயிற்சிறகை
ஒக்க வணியவுனக் கொண்ணாதோ—மிக்க

182 அறஞ்செய்யு மூருடையீ ராகாது காணும்
மறஞ்செய வென்று மயங்கா—நிறந்திகழும்

183 விண்ட குவளைக்கும் விள்ளாத தாமரைக்கும்
தண்டரள மும்பொன்னுஞ் சாத்துவார்-ஒண்டொடியீர்

184 பாகம் பிரியாத பச்சைமயில் காணமல்
ஏகம்பர் பார்த்தா ரெமையென்பார்—ஆகமதன்

185 காதன் மலர்சொரிந்து கைசலிப்ப விவ்வண்ணம்
மாதர் பலர்மயங்க மற்றொருத்தி—பேதை

பேதை.

186 திரையுதவு பேரமுதின் சிற்றரும்பு முற்றி
வருமுகைய தானதொரு வல்லி—கருதியளி

187 ஊத மலரா வொருதா மரைமுகுளம்
காத லுதவாத காமரசம்—வேதத்

188 துழையா னகலா துறைகின்ற சூதம்
குழையாத தென்றற் கொழுந்து—பழைதாகக்

189 கம்ப ருறையுங் கடவுளிளஞ் சூதத்தின்
கொம்பி லுறையாக் குயிற்பிள்ளை—இன்ப

190 அலையா ரமுதத்தி னாரம்ப வித்து
தொலையாத காமத்தின் தோற்றம்—உலகில்

191 சிறந்தபிரா னல்லாத தேவர்களைப் போல
இறந்து பிறக்கு மெயிற்றாள்—நிறைந்துமைப்போல்

192 முத்தாரம் பூண முலையெனக்குச் சூட்டுமென்று
கைத்தாயர் முன்னின்று கண்பிசைவாள்—சுத்த

193 இயல்பு தனையொழிய வேதும் பிறழாக்
கயலை யனையவிரு கண்ணாள்—புயல்வரினும்

194 ஆடாத தோகைபதன் பிஞ்சம்போற் கூடுவதும்
கூடாது மான குழலினாள்—நீடிமிக

195 ஓங்கி வளர்தன் னுரியபரி ணாமமெல்லாம்
தாங்கிய வித்தன்ன தன்மையினாள்—நீங்காத

196 ஏகம்ப மென்னீ ரிமவான் மகடழுவ
ஆகங் குழைந்த வரனென்னீர்—மாகம்பை

197 ஆறென்னீ ரம்மை யறச்சாலை யென்னீர்நம்
பேறென்னீ ரென்றுதமைப் பேசுவித்த—வாறெல்லாம்

198 பாவைக் குரைத்தந்தப் பாவைபக ராததெல்லாம்
பூவைக் கழுது புகலுவாள்—மேவுபல

199 தீவிற் பிறந்த செழுமணியுந் தம்மூரின்
வாவி பிறந்த மணிமுத்தும்—காவிவிழி

200 அம்பை முதனு ளரனுரைப் பூசித்த
கம்பை மணலுங் கலந்தெடுத்துக்—கொம்பனையாள்

201 ஒண்டொடி மாத ருடனே காஞ்சிவப்ப
வண்ட லிழைத்து மகிழ்போதில்—பண்டொருநாள்

202 தெண்டிரையிற் பெற்ற திருவமுதச் செவ்வாயும்
பண்டுகிராற் கொண்ட பரிகலமும்—மண்டுமெரி

203 தாழுஞ் சினத்துழுவை தான்கொடுத்த வுட்சாத்தும்
வேழங் கொடுத்தமொரு மேற்சாத்தும்—சூழ்பணியின்

204 ஓங்கல் கொடுத்த வொருபா கமுமுடையார்
தாங்கு மணிமறுகு சாருதலும்—ஆங்கவளும்

205 வண்ட றனையொழிந்து வந்தணுகிச் செந்துவர்வாய்
ஒண்டொடி மாத ருடனிறைஞ்சி—அண்டருறை

206 நாகஞ் சிலையாக நண்ணார் புரமெரித்த
ஏகம்பர் தம்பெருமை பெண்ணுதே—கோகநக

207 உந்திக் கணைபோ னொருபாக முஞ்சடையும்
அந்தப் புரமென் றறியாதே—இந்தப்

208 பெருத்த மணக்கோலப் பிள்ளையுடன் தேர்மேல்
இருத்து மெனைக்கொடுபோ மென்ன—ஒருத்தியிவர்

209 பூணத் தவரிருவர் பொன்முடியுஞ் சேவடியும்
காணக் கிடையாத கம்பர்காண்—வாணுதலாய்

210 பாய வுலகம் பதினு லையும்பரந்தொன்
ருய பெருமா னருகிருக்கத்—தோயுமகிற்

211 பச்சைக் கிரியாற் பவளத் திருமார்பில்
அச்சிட் டவர்க்கொழிந்துண் டாகுமோ—அச்சமுடன்
212 மீதெடுத்துக் கம்பை மிகுபெருக்குக் கஞ்சாத
மாதவத்தாட் கன்றியிது வாய்க்குமோ—மூதண்டம்
213 எல்லாம் பெறநெல் லிருநாழி யால்வளர்க்க
வல்லா டனக்கன்றி வாய்க்குமோ—சொல்லாய்
214 குறைவின் மடமயிலே கூசாதே யாமே
இறைவ ரருகேறி யிருப்போம்—மறவிதனை
215 என்ன விளையா ளிருகண்கண் முத்தரும்ப
அன்னையர் தங்கையா லணைத்தாற்றி—மின்னேபோ
216 தென்று பகர்வதன்மு னேகம்பர் தேருடனே
தென்றலந் தேருந் தெரிவித்து—வென்றி
217 மதன்கை வரிசாபம் வாங்காமல் வாசம்
பொதிந்தகணை பூட்டாமற் போந்தான்—பெதும்பை

பெதும்பை.

218 இவண்மற் றொருத்தி யெவர்க்குந் தெரியாப்
பவளத் தமுதுதரும் பாவை—தவளத்
219 திருப்பாற் கடற்பிறந்து செந்தா மரைமேல்
இருப்பார்க்கு நேரே யிளையாள்—விருப்புடனே
220 ஆர்க்கு மளிக ளவிழ்பத மீதென்று
பார்க்குமுகை போலும் பருவத்தாள்—ஆக்கமுடன்
221 போராக்கு மாமதனன் போதும் பவனிக்குத்
தேராக்க வெண்ணுஞ் செழுந்தென்றல்—வேரிநறும்
222 போது புனைவதற்கும் பூணாரம் பூண்பதற்கும்
ஆதரவு வைக்கு மளவினாள்—ஆதிமதன்

223 பேறு மடநாணும் பெண்மைப் பெருமிதமும்
வீறுஞ் சிறிதரும்பு மெய்யினாள்—சீறியெரி

224 ஊட்ட மதின்மூன் றழிநிகழ்ந்த வண்ணம்போற்
கூட்டி முடிக்குங் குழலினாள்—வேட்டவர்தம்

225 புந்திகவர் வஞ்சனையும் பொய்யுங் கொலையுமிடம்
வந்துவந்து பார்க்கு மதர்விழியாள்—மைந்தர்

226 உகமை யழகோடே யுள்ளரும்புங் கஞ்ச
முகையின் முகைபோலு முலையாள்—இகுளையர்தம்

227 மீளாத காதல் விழைவுரைக்கும் போததனைக்
கேளா தவர்போலக் கேட்டிருப்பாள்—கேளாய

228 மாதரு மானு மயிலும் பசுங்கிளியும்
ஓதிமமுஞ் சூழ வுடன்போத—மாதவிப்பூம்

229 பந்தரிட்ட நீழற் பளிக்குச் சிலாதனத்து
வந்திருப்ப வெற்றி மடமாதர்—உந்திக்

230 குவளை மலரிருகண் கொங்கைக் குறியிட்ட
பவள மலையினையும் பாடித்—தவளநகை

231 அன்னை யறஞ்செய்த வறச்சாலை யும்பாடிக்
கன்னியினி தாடு கழங்கென்னக்—கன்னிதனக்

232 காழி தருமுத்த மாகாதென் றவ்வூரில்
ஏழு நதிமுத்த மினிதெடுத்துச்—சூழ்தேரில்

233 தட்டு நிகரல்குற் சங்கிலிபாற் றூதுதமை
விட்டவர்பாற் பெற்ற விழியொன்றும்—வட்டித்துப்

234 பாத மலர்துதித்த பட்டவா ணன்றனக்குக்
காத லுடனளித்த கையிரண்டும்—பூதத்

235 திகலொழிய நின்று மிருந்துங் கிடந்தும்
முகிலுறையுந் தானங்கண் மூன்றும்—நகிலால்

236 இலங்கு வரிவளையா லிவ்விரண்டாய்த் தம்மேல்
நலங்கொ டழும்பொரு நான்கும்—துலங்க

237 உமக்கமைத்த பொற்கோயி லூழி முதனாள்
அமைத்தன கோணங்க ளைந்தும்—அமைத்தோள்

238 இளைக்கு மருங்கு லிருநாழி நெற்கொண்
டளிக்குஞ் சமயங்க ளாறும்—குளிப்பார்

239 செறியும் பவக்கடலைச் சிந்தித் திரையால்
எறியும் புனிதநதி யேழும்—பிறைநுதலாள்

240 அன்பொடுபா டிக்கழங்கை யாடுகின்ற வெல்லைக்கண்
என்பொருபெண் ணென வெழினகரும்—அன்பனுளம்

241 அன்றொருத்திக் குண்மை யறிவித்துத் தாமகிழ்க்கீழ்ச்
சென்றொளித்து நின்ற திருநகரும்—சென்று

242 முதுககன கோளத்து முற்பட்ட கூத்தின்
பதும மலர்ந்த பதியும்—கதிராழிக்

243 காவித் திருநிறத்தோன் கைகுவித்து நின்றெதிரே
சேவித்து நிற்குந் திருப்பதியும்—தாவுபரி

244 மல்லற்றொடைத்தொண்டை மான்கடவுந் தேரையொரு
முல்லைக் கொடிதடுத்த மூதூரும்—நெல்விலைக்குச்

245 சற்றளந்த நாட்புகலிச் சைவப் புலவனுக்குக்
கொற்றளந்த மாடக் கொடிநகரும்—பெற்றதொரு

246 தாயுமிலை யென்னுந் தமது குறையையொரு
தூய கழைதவிர்த்த தொன்னகரும்—வாய்கலசம்

247 ஆட்டி யினிமை யறிந்தவூ னெச்சிறனை
ஊட்டிய வேட னுறைபதியும்—நாட்டினுள

248 எண்ணி லமணரெலா மேறக் கழுவிலொரு
பெண்ணை யியலறிந்த பேரூரும்—விண்ணவர்தம்

249 சாத லுறைநாளுஞ் சாகாத புள்ளிரண்டும்
தீதகல வாழுந் திருமலையும்—தூதுதமை
250 ஓட்டுந் திருநாவ லூரற் கிரந்திட்டுப்
பாட்டுண்ட வூரும் படைத்துடையோன்—சூட்டு
251 வெருவும் வரியரவும் வெண்டலையு மாறும்
மருவு முடிக்கம்ப வாணன்—ஒருபுத்தன்
252 செங்க லெறிக்குச் சிவலோக மீந்தபிரான்
துங்க மணிமறுகு தோன்றுதலும்—பைங்கொடியும்
253 ஆடுங் கழங்குதவிர்த் தாயத் துடன்கனக
மாட நெடுவீதி வந்தணுகிக்—கூடப்
254 பணிந்து பரவிப் பகுவா யரவம்
அணிந்த திருத்தோ ளழகும்—மணங்கமழும்
255 பொன்னனை மார்பும் புனையும் புரிநூலும்
மன்னனை காதல் வரநோக்கி—மின்னும்
256 திருந்திழையீ ரிந்தத் திருமேனி தன்னில்
இருந்ததழும் பென்னதழும் பென்றாள்—புரிந்தவரும்
257 மின்னே கிளியே விளங்கிழையே யன்னமே
அன்னே யிதனை யறியாயோ—தன்னருளால்
258 பாராட்டி வையம் பதினாலையும்வளர்க்கும்
பேராட்டி மாதவத்தின் பேறுகாண்—வாரிதிசூழ்
259 வைய முழுதறிய வாங்குஞ் சிலைமாரன்
எய்யுங் கணைபடைத்த வேற்றங்காண்—தூயகுழற்
260 பண்பிறந்த சொல்லாய் பலசொல்லி யேனிந்தப்
பெண்பிறந்தார்க் கெல்லாம் பெருமைகாண்—மண்பரவி
261 ஏத்து மிறையா ளிருகொங்கை யால்வளையால்
சாத்திய கோலத் தழும்புகாண்—பார்த்தருளாய்

262 என்னு மளவி லிலங்குமனத் துட்காதல்
பொன்னனைய மெய்யிற் புறம்பொசியக்-கன்னிவெயில்
263 தீண்ட மலர்வதொரு செந்தா மரைமுகைபோற்
காண்டகைய செவ்விக் கவின்படைத்தாள்-மீண்டரனும்
264 கோல மயிலைக் குறிப்பாற் கடைக்கணித்தாற்
போல முறுவலுடன் போயகன்றான்—மாலைமதன்
265 செங்கை வரிசிலையைச் சேரத் தொடைமடக்கி
எங்கள் பெருமானோ டேகினான் — மங்கை

மங்கை.

266 புடையோத ஞாலமெலாம் போர்மதனன் வேதக்
கிடையோது விக்குமொரு கிள்ளை — விடமும்
267 வளருங் கொடுங்கொலையும் வஞ்சனையும் பொய்யும்
களவுங் குடிபுகுதுங் கண்ணாள்—தெளிதேனும்
268 சீல வுகதி யமுதுஞ் செழும்பாகும்
பாலு முதவும் பணிமொழியாள்—மாலுதவும்
269 மிக்க திருவழகின் வெள்ளத் தெழுந்தவிரு
மொக்கு ளனைய முலையினாள்—மைக்குழலிற்
270 பூவின் மிகுபொறையாள் பூணார மென்முலையாள்
நோவ வடியிட்ட நுண்ணிடையாள்—ஆவிபெற
271 ஆர்வ முளதாக வாடவர்தன் மேல்வைத்த
பார்வை யறியும் பருவத்தாள்—சேரச்
272 சுடருற்ற பூவளைக்கைத் தோழியருந் தானும்
நெடுமத்த வாரணத்தி னின்று—விடையோன்பால்
273 அன்னத்தைத் தூதுவிடவங்கையிற்கொண்டனள்போல்
பன்னித் திலநிரைத்த பந்தேந்தி—அன்னதுதான்

274 பாவை யொருபாகன் பாலணுக மாட்டாமற்
போவதுவு மீள்வதுவும் போற்றென்ற—மேவி

275 நெறிந்திருள் கொண்டை நெகிழ்ந்து ததும்ப
நறும்புழு கின்க ணனைந்து—செறிந்து

276 சுரும்பி னினங்கள் சுழன்று சுழன்று
நரம்பென வெங்கு நணுங்க—விரும்பி

277 இடுங்குழை யஞ்ச வெறிந்திரு கண்கள்
நெடுங்குமி ழின்க ணெருங்க—வடங்கொள்

278 மணங்கமழ் குங்கும வண்ட லணிந்து
சுணங்கணி கொங்கை துளங்க — வணங்கி

279 மருங்கு றளர்ந்து வருந்த வருந்த
இருங்கலை கொஞ்சி யிரங்க—நிரம்பி

280 இலங்கு பதங்க ளிடுந்தொறு நின்று
சிலம்பு சதங்கை சிலம்ப—நலந்திகழும்

281 வல்லியினி தாட மடவா ரணைந்துமலர்
வில்லி புரிவித்த மெய்த்தவமே—நல்லமட

282 மானே கலாப மயிலே மலர்பொதியாத்
தேனே திரையளித்த தெய்வமே—கானேயும்

283 கோவை யிதழ்வாய்க் கொடியே நமக்கிந்தப்
பாவியிடை செய்த பகையுண்டோ—மேவியுடன்

284 மன்னுஞ் சிறையன்றின் மன்றிற் பனைமடன்மேல்
இன்னுஞ் சிலநா ளிருந்தாலோ — முன்னமே

285 வென்றே யிருக்கும் விழியுடனே யுள்ளபகை
இன்றே மதன்முடிக்க வெண்ணமோ—வென்றிமதன்

286 சேரும் வளைமலராற் றீண்டப் பெறும்வாழ்விவ்
ஆரமணிப்பந்துக் கமையாதோ—பாருலகில்

287 தாவில் தகைமைத் தபோதனர்தங் காலத்தே
ஆவி யுடனிருந்தா லாகாதோ—பாவாய்
288 அமையு மமையுமென மவ்வளவிற் றேர்மேல்
உமையொரு பாக முடையோன்—சமரமுக
289 வீரனுக்கு மெய்யன்பான் மேவுந் திருநீற்றுச்
சேரனுக்குஞ் சோழனுக்குந் தென்னனுக்கும்—ஊரனுக்கும்
290 ஆரணற்கும் வாசவற்கு மல்லாத தேவர்க்கும்
நாரணற்கு மேனோர்க்கு நாதனார்—போர்முகத்தில்
291 ஆமநாட் கொண்டதலை யாட்டுத் தலைபாக
மாமனார்க் கீந்த மருகனார்—தாமாக
292 இங்கெமையாட்கொள்ளவெழுந்தருளப்பெற்றோமென்
றங்குள மின்னார்கண் டகமகிழச்—செங்கேழ்
293 வயங்கு மணிமாட மாமறுகிற் றோன்ற
வியந்தமணிப் பந்தாடல் விட்டு—நயந்தணுகித்
294 திண்டோளு மார்புந் திருநீல கண்டமும்
கண்டோரை வாழ்விக்குங்கண்மலருங்-கண்டிறைஞ்சித்
295 தூய பவளந் துவளுற்று டோழியரும்
தாயரு நிற்கத் தலைப்பட்டாள் -- தீய
296 எறியும் மழுவுடையா ரிம்மாதின் காதல்
சிறிது முணரார்போற் செல்லக்—குறைவில்
297 மறைபுகலும் பூசை மனுவா லயத்தில்
உறைதிருவே கம்ப முடையீர்—செறியிருளிற்
298 பந்தணுகுஞ் செங்கைப் பாவைபாற் சங்கிலிபால்
வந்தணுகுந் தூது மறந்தீரோ—நொந்தொசியும்
299 சிற்றிடை புல்லத் திருமார் பகங்குழைந்தீர்
நெற்றி விழியுடையீர் நீரன்றோ—ஒற்றியூர்ப்

300 பெண்ணே வறிவார்தம் பேரின்று தொட்டுமக்கு
விண்ணோர் பெருமானே வேண்டாவோ—வண்ணம்

301 அமைந்தாரார் காதலினு லார்தலையிற் பெண்ணைச்
சுமந்தாரார் மற்றுமைப்போற் சொல்லீர்—அமைந்து

302 துகைத்து மதுகரத்தாற் றேடுழுதார் தந்து
நகைத்து முகம்பார்த்து நடவீர்—முகத்திலிவை

303 கண்ணன்றே வெப்படியுங் காதலித்தா டானுமொரு
பெண்ணன்றே கச்சிப் பெருமானே—எண்ணில்

304 இருக்கிலறஞ் சொன்னீ ரெனுமாதை விட்டுத்
திருக்கடைக்கண் வைத்தவர்போற் செல்ல-ஒருக்காலும்

305 ஏவுண் டறிகிலளென் றெண்ணாதே யேவுண்டால்
ஆவி படுவ தறியாதே—பாவி

306 விறல்வேள் சிலையம்பு விட்டான்றன் னம்பின்
மறல்வேல் விழியாண் மனத்தே—பிறைமுடியார்

307 பாதி கருகப் படுபஞ்ச பாணமதிங்
கேது படுத்தா திளையாளைக்—காதலுக்குச்

308 சங்கம் விழுமென்றுந் தாழ்கலைநில் லாதென்றும்
அங்கம் பசலைநிற மாமென்றும்—திங்களிலா

309 ஈரஞ் சுடுமென்று மேழிசைவேய் தீயென்றும்
ஆரஞ் சுடுமென்று மன்றறிந்தாள்—சோர்வுற்

310 றடங்கு மறிவினளா யன்னையர்தந் தோண்மேல்
தடங்கண் மயிறளர்ந்து சாய்ந்தாள்—மடந்தை

மடந்தை.

311 இளையார் மனம்வளைய வெய்யுமதன் செங்கோல்
வளையா வகைபசையும் வல்லி—அளகநறை

312 தேங்கு கருமுகிலுஞ் செவ்வாய் முருக்குமொளி
தாங்குபுரு வத்திந்த்ர சாபமும்—ஆங்கழையும்
313 வாய்ந்த மொழிக்குயிலு மைக்கட் கருவிளையும்
பூந்தரளஞ் சேர்கழுத்துப் பூங்கமுகும்—ஏய்ந்தநகை
314 முல்லை நகையு முலைக்கோங்குங் கைக்காந்தள்
மல்லன் மலரும் வரிச்சுணங்காம்—அல்லிமலர்
315 வேங்கையுஞ் சாயன் மயிலும் வியனழகும்
தாங்கு திருநிறத்த சண்பகமும்—வாங்குமிடை
316 மின்னும் பதச்சூத மென்குழையுங் கொண்டொன்றாய்
மன்னியகார் வேனிலுடன் வந்ததென—மின்னுசுதை
317 பக்க நிலவெறிக்கப் பத்மரா கத்துவெய்யில்
மிக்க வரங்கத்து மேனின்று—முக்கணனைத்
318 தேவர் நெருங்குந் திருமயா னம்பார்த்துத்
தாவி றிருமேற் றளிபார்த்து—மேவி
319 அரன்விடா தானு மனேகதங்கா பார்த்துப்
பரவுங்கா ரைக்காடு பார்த்துப்—பெரிதிறைஞ்சிக்
320 கங்கைகொண்டான் மண்டபமுங் கண்டு மனமகிழ்ந்து
மங்கைகொண்டான் வாழு மனைபார்த்துத்—திங்கள்
321 முடித்த முடிக்கு முடிகொடுத்த சம்பன்
படைத்ததுலா மண்டபமும் பார்த்து—விடைக்கொடியோன்
322 கச்சாலை யும்பார்த்துக் கம்பர்தம் பாடியெனும்
பொற்சாலை யும்பார்த்துப் பூவைமொழிப்—பச்சைநிறச்
323 சைவ முதல்வி தவஞ்செய்யப் பெற்றதொரு
தெய்வவுல காணித் திருக்குளமும்—துய்ய
224 அறச்சாலை யும்பார்த் தறுசமயம் வாழும்
புறச்சாலை யும்பார்த்துப் பூவை—சிறப்புடைய

325 இந்நகர்போ லெந்நகரு மில்லையிமை யோர்பதியும்
உன்ன வரிதிதனுக் கொப்பென்ன—அன்னநடை

326 மானே யிதன்பெருமை வல்லவரார் சொல்லுகைக்குத
தானே யுவமை தனக்கல்லால்—மானார்கட்

327 பொற்றொடியாள் கண்ணுதலைப் பூசித் தறஞ்செய்யப்
பெற்ற திதுபோற் பிறிதுண்டோ—மற்றிவளுக்

328 கந்தமுத லில்லாத வாதிபொரு மாவடிக்கீழ்
வந்துவெளிப் பட்டநகர் மற்றுண்டோ—நந்தா

329 மருக்காவின் மூன்று மணிவிளக்கு மன்னி
ஒருக்காலு நீங்கா துறையும்—திருக்காமக்

330 கோட்டமெனி லிங்கே குலவுங் கனகமழை
ஈட்ட முகில்பொழிந்த திவ்விடத்தே—கூட்டியபே

331 ராசையுடன் மால்பத் தவதாரந் தம்மினும்வந்
தீசனைப் பூசித்த திவ்விடத்தே—பேசுநலம்

332 ஒன்று புரிந்த தொருகோடி யாகுமிதில்
என்று மொழிகின்ற வெல்லைக்கண்—மன்றல்

333 திருக்கொன்றை மாலையளி செவ்விமண முண்டு
தருக்கிய நாதந் ததும்ப—எருக்கமலர்

334 பாயுஞ் சடாடவிமேற் பாகீ ரதிமுகங்கள்
ஆயிரமும் வீசி யலையெடுப்ப—ஓயா

335 தருகி லிருபானு மருமறைக ணான்கும்
பரிகலமு மாலையுடன் பாட—ஒருதன்

336 திருக்கைத் தமருகத்துத் தெய்வச் சுருதி
பெருக்கத் திசைமுகத்திற் பெய்ய—விருப்பொடரி

337 தேடுந் திருவடியிற் செம்பொற் சிலம்போசை
ஊடுங் கனகத் துலாய்நிமிர—நீடு

338 நடஞ்செய் தருள்காக்கு நாயகரும் வானம்
தொடும்பொன் மணித்தேருந் தோன்றக்—கொடுங்குழையாள்
339 கோதை யசையக் குழலசையக் கோல்வளைக்கை
மாதர் பலருடனே வந்திறைஞ்சிச்—சோதி
340 மிகக்கருணை யெப்போதும் வீற்றிருந்த செவ்வி
முகத்தழகைக் கண்ணான் முகந்தாள்—நிகர்ப்பில்
341 தவளத் திருநீறுஞ் சந்தனமுந் தோய்ந்த
பவளத் திருத்தோள்கள் பார்த்தாள்—இவளும்
342 மலர்மார்பி லாசையெலாம் வைத்தாண்மைக் கண்ணீர்
புலராம னெஞ்சம் புலர்ந்தாள்—உலகுண்ட
343 திண்பால் விடையீர் திருத்தோ ளலங்கண்ட
பெண்பாவி பாவி பெறுமாறு—கண்பாரீர்
344 என்றபொழு திற்கச்சி யேகம்ப ரேகுதலும்
மன்றன் மலர்சொரிய மாரவேள்—நின்றயர்ந்த
345 தத்தை மொழிக்குயிலைத் தாய ரெடுத்தணைத்துச்
சித்ரமணி மண்டபத்திற் சேர்வித்து—முத்தினொரு
346 பந்தரு மிட்டார் பனிநீரை யுஞ்சொரிந்தார்
செந்தளிரின் பாயலின்மேற் சேர்த்தினார்—சந்தனமும்
347 பூசினார் கொண்டமயல் போமோவென் றுயிரமும்
பேசினார் தாயார் பெரிதிருந்து—கூசாதே
348 தண்ணென் கழுநீருஞ் சாத்தினார் பார்த்தயலார்
எண்ண முமக்கொன்று மில்லையோ—ஒண்ணுதலீர்
349 முத்தினொரு பந்தன் முழுநிலா வீசுநிழல்
நித்தருறை தேமா நிழலாமோ—பித்துளதோ
350 வாசப் பனிநீர் மணலை யவராகப்
பூசித்த வாற்றின் புனலாமோ—பாசிழைக்குப்

351 பாயல் குளிரி படுத்தாலப் பாப்பிடையோன்
கோயிலிள மாவின் கொழுந்தாமோ—நேயமுள

352 பொற்றொடி நல்லீர் புனைசந் தனச்சேறு
நெற்றி விழியவர்தம் நீறாமோ—கற்றறிவின்

353 நூற்று யிரநீர் நொடித்தா லவையிவளுக்
கேற்றார் திருவஞ் செழுத்தாமோ—மேற்றான்

354 பிணைந்த வணிகழுநீர் பெய்வளைக்குக் கம்பர்
அணிந்த திருக்கொன்றை யாமோ—அணங்கனையீர்

355 என்று மொழிய விவையவை யாயினபோல்
நின்ற திவளாவி நீங்காமல்—அன்றே

356 தெரியவே யாவர்க்குஞ் சிந்தா குலமும்
உரையுந் தெளிவுதர லுற்றாள்—அரிவை

அரிவை.

357 கமல மலர்சுமந்தாள் கட்டழகு மேனாள்
அமுதமுடன் வந்தா ளழகுஞ்—சிமயமிசைக்

358 கூசி மழைதவழுங் கொல்லிக் கிரிபடைத்தாள்
பேச வரியதொரு பேரழகும்—வீசுமிளந்

359 தென்றலும் வென்றிச் சிலைமார னைங்கணையும்
மன்றலுமொன் றான வடிவினாள்—பொன்றமொரு

360 காலமும் பார்த்துக் கயிறும் பிடித்தொருவன்
சூலமு மேந்திச் சுழலாமன்—மால்செய்

361 துலவா நகையா வொசியா வசையா
குலவா வுயிருண்ணுங் கூற்று—தலைவிக்கைங்

362 கோணம் பெறவகுத்த கோயில்போ லியாவரையுங்
காணுந் தொறுமயக்குங் காட்சியாள்—பேணி

363 மகிழ்வுற்ற வாயமுடன் வண்டாள மாலை
திகழ்சித்ர மண்டபத்திற் சேர்ந்து—மகர
364 விடந்தோய் விழியங் கெழுதியவை யெல்லாம்
நெடும்போது பார்த்தகலா நிற்ப—அடைந்தெவரும்
365 இன்ன திதுவிதுவென் றெங்களுக்குக் காட்டியருள்
அன்ன நடையா யடைவிலென—மின்னிடையீர்
366 வெள்ளி மலைநீங்கி விண்ணோரு மண்ணோரும்
உள்ளும் பிரானை யுமையாள்போய்—உள்ளமிகத்
367 தாங்காத பூசைக்குத் தக்கவிட மீதென்று
நீங்காது நின்ற நிலைபாரீர்—தேங்கமழும்
368 காவி புடைசூழ்ந்த கம்பா நதிப்புனலிற்
பாவை படியும் படிபாரீர்—கோவையிதழ்
369 ஓசை யளிக ளுலவம்பி காவனத்தில்
வாசமலர் கொய்யும் வகைபாரீர்—பேசரிய
370 ஆதி யமர ரறியா வவராக
மாது குவித்த மணல்பாரீர்—கோதை
371 அணியு மிருளோதி யன்பொடு பூசித்துப்
பணியும் வழிபாடு பாரீர்—விரிந்தபுனல்
372 மாகம் புதைய வரப்பண்ணித் தம்மையொளித்
தேகம்பர் நின்ற விடம்பாரீர்—தோகை
373 அரும்புனல்கண் டஞ்சியவ ராகமுறச் சென்று
பரிந்து தழுவியது பாரீர்—புரிந்து
374 மலைக்கு மகடன் வழிபா டுவந்து
பலித்த பெறும்பேறு பாரீர்—கலப்பொன்
375 தெரிவை யுடனிருந்தத் தேமா நிழலிற்
பரம னிருந்தவிடம் பாரீர்—பொருவில்

376 திருக்கைவளை யான்முலையாற் றிண்டோளு மார்பும்
பரித்த திருத்தழும்பு பாரீர்—விரித்தசடை

377 அண்ணல் வெளிப்பட் டருள்வரங்கள் பாரீரென்
றெண்ணும் புதுமை யிவையெல்லாம்—ஒண்ணுதலாள்

378 காட்ட வவருங் களிகூர் பொழுதிலொரு
தேட்ட முளதாய சிந்தையளாய்க்—கூட்டில்

379 இருந்த கிளியை [யெழிற்] கரத் தேந்தி
வருந்திவினை யேன்பெற்ற வாழ்வே—அருந்தவமே

380 தேமென் குதலைதருந் தெள்ளமுதே கம்பரணி
தாமந் தருவாய் தவிருவாய்—யாமெல்லாம்

381 சூழு நிலவிற் சுதைநிலா முன்றிலின்யான்
வாழும் படிநினைக்க மாட்டாயோ—வேழந்

382 திகழும் வரிசிலையான் சேவகங்கள் காட்டும்
பகழிநறும் பூவாகப் பண்ணாய்—இகழ்வார்முன்

383 என்னன்னை யேது மிரங்கா ளிரவுபகல்
உன்னன்னை யுன்னை யொறுக்குமோ—தென்னன்

384 பொருப்பிற் பிறந்து புகையாக வீசும்
நெருப்புக் குளிர நினையாய்—நிரைத்தரளத்

385 தாருங் கழுநீருஞ் சந்தனமுந் தோய்ந்தபனி
நீருங் குளிர நினைந்திடாய்—பேரரவச்

386 சேவின் மணிவருத்தந் தீர்த்தருளா யென்றிரந்து
பூவை யினிதுரைக்கும் போதின்கண்—தேவருய்ய

387 ஆல மினிய வமுதாக வுண்டபிரான்
கோல மறுகு குறுகுதலும்—நீலவிழி

388 தூதுவிடக் கிள்ளைக்குச் சொல்லுவதெல் லாமறந்து
காதலுடன் வந்தவனைக் கைதொழுது—நீதிபுரி

389 இந்தமலைப் பாவை யிடப்பாகங் கொண்டுமக்குத்
தந்தவலப் பாகந் தரலாமோ—எந்தைபிரான்

390 கங்கைத் திருமுடிமேற் கண்ணியலால் வெண்ணீறு
தங்குபுயக் கொன்றை தரலாமோ—சங்கரா

391 எம்பாக நீரணிந்தா லிவ்வுடம்பிற் பச்சென்று
செம்பாகம் வந்து சிவக்குமோ—நம்பாநின்

392 சோதி மணிமுடிமேற் சோமப் பனிக்கொழுந்தை
மோது முதுதரங்க மோதாதோ—ஓதாவென்

393 றுதியுடன் சொல்ல வறம்வளர்க்கு மூருடையான்
ஏது முரையா னெழுந்தருள—மாதர்

394 அரிந்து மகவை யளித்தவர்க ளாக்கிச்
சொரிந்த கறியமுதுஞ் சோறும்—அருந்த

395 விருப்பினொடு செங்காட்டில் வேண்டும் பொழுதோ
திருப்பவளச் செவ்வாய் திறப்பீர்—விருப்பால்

396 வளைந்த திரிபுரத்தை மாள்விக்கும் போதோ
குளிர்ந்த திருமுறுவல் கொள்வீர்—துளங்குநிலா

397 முத்த வரிசிலையான் மொய்ப்பூங் கணைபுகுந்து
தைத்தபொழு தோதிருக்கண் சாத்துவீர்—மெய்த்த

398 கொடிய விடஞ்சுரரைக் கொல்லும் பொழுதோ
அடைய வருளுடையீ ராவீர்—மடமாதர்

399 உற்றதுயர் கேட்பதற்கொன் றோதாது போகின்றீர்
கற்றதிது வோகள்ளக் கம்பரே—பெற்றவர்தாள்

400 வீசுமழு வாற்றுணிய வெட்டுமவர்க் கல்லாது
வாசமலர்க் கொன்றை வழங்கீரோ—பூசித்து

401 வல்லபங்கள் செய்து வழிபடுவார்க் கல்லாது
புல்ல வொருவர் பொருந்தீரோ—சொல்லீர்
402 ஒருவா சகமென்ன வோராது போலப்
பொருமா ரனைநிறுத்திப் போனார்—தெரிவை

தெரிவை.

403 ஒருத்தி தவக்குறும்பை யோட்டியுல கெல்லாந்
திருத்தி மதனடத்துஞ் செங்கோல்—நிருத்தனார்
404 தூதுவிடச் சங்கிலிபாற் றோழனுக்குத் தாமுழன்ற
போதிதுவென் றெண்ணும் புரிகுழலாள்—ஆதிரையான்
405 வெண்டிரைநீர் வேணிக்கு வேறுமொரு திங்கணமக்
குண்டெனவென்றெண்ணுமொளிநுதலாள்-துண்டமதி
406 வேணி யுடையோன் மிடற்றி லடக்குதற்கும்
பாணி மிசையசைப் பண்ணுதற்கும்—பாணந்
407 தொடுப்பதற்கும் பார்ப்பதற்குஞ் சூழ்கழற்கா லன்மேல்
விடுப்பதற்கு மெண்ணும் விழியாள்-விடைக்கொடியோர்
408 ஆய பிறப்பை யணுகா தவருடைய
தூய பிறப்புணர்த்துந் தோளினாள் — நாயனார்
409 சேமச் சிலையுஞ் சிலையு மிவையென்று
தாமுட் குறிக்குந் தனத்தினாள்—மாமழுவோன்
410 தென்றல் படக்குழைந்த தேமாவின் கொம்பரிது
என்றுதிரு வுள்ளத் தினிதெண்ண—ஒன்றாகத்
411 துய்யவளைக் கையுந் துவர்வாயுஞ் சோதிதிகழ்
மெய்யு நிறமும் விளங்குவாள்—மொய்யமரில்
412 தாவும் விடையுடையான் றன்மேன் மலர்வாளி
ஏவு மதனை யெரித்தநாள்—மேவுற்

413 றெழும்புகையும் வானமு மென்ன வுரோம
ஒழுங்கு மிடையு முடையாள்—தொழுஞ்சுரரைக்
414 காக்கு மிடற்றூர்க்குக் கச்சாதல் காப்பாதல்
ஆக்க நினையுமக லல்குலாள்—நோக்கரிய
415 தூவி மயிலனையார் சூழ வொருகமல
வாவி பருகு மகிழ்ந்திருப்ப—மேவியயில்
416 உண்கண் விறலி பொருத்தி செழுங்களபக்
கொங்கை யிணைபடைத்த கூற்றமே—எங்குமளி
417 நின்றே விடுகின்ற நீள்வனசக் கோயிறனக்
கின்றே குடிபுகுத விட்டநாள்—ஒன்றாக
418 விஞ்ச வழகுடையார் வீற்றிருப்ப தல்லாது
கஞ்ச மலரொருத்தி காணியோ—அஞ்சாதே
419 இந்த வழகல்லா லேந்துமோ கஞ்சமலர்
தந்த வழகு தனையென்று—செந்திருமுன்
420 சென்று பணியத் திருவால வாயுமணி
மன்று மொருகடவுண் மாநிழலும்—என்றும்
421 விரும்பி யுறைமழுவாள் வீரன் றசாங்கம்
இருந்து விறலிபா டென்னத்—தெரிந்தபெரும
422 பாகு பலவுடையான் பாட்டுக் கொருவடிவான்
தியாக முதவுப் திருமலையு—மாகம்
423 பெருக்கு மறுகும் பிறைக்கொழுந்தும் பாம்பும்
எருக்கு முடித்தமண வியாறும்—விருப்பொடரன்
424 அந்தண் பெருந்துறையி லாளுடையா ரம்மணலில்
வந்து சிறந்த வளநாடும்—சந்தும்
425 வடங்கொ ளிளமுலையால் வானோ ரறியா
உடம்பு குறிபெற்ற வூரும்—தொடர்ந்தவரி

426 நீலம்போற் கண்ணார் நிறமெல்லாந் தன்னுடைய
கோலம்போ லாக்குங் குளிர்தாரும்—ஆலிலையிற்

427 சேக்கைப் புயலின் றிருநாபி யிற்பனவன்
வாக்கிற் பிறந்த வயப்பரியும்—நோக்கித்

428 திரண்டா யிரங்கயிலை செல்வதெனத் தோன்றும்
இரண்டா யிரங்கோட் டிபமும்—நெருங்கு

429 கடிக்கற் பகவனத்தைக் காசினிமே லாயர்
கொடிக்குக் கொடுத்த கொடியும்—துடிக்கண்

430 தழங்கு சதியுடையான் தாண்டவத்துக் கேற்ப
முழங்கு திருக்கை முரசும்—தொழும்பால்

431 அடுத்த சுரர்பரவ வண்டாண்ட மெல்லாம்
படுத்ததிரு வாணையுமே பாடத்—துடிக்கவிதழ்

432 நெஞ்சு தளர்ந்து நெறிமயங்கி நீடுயிர்த்து
வஞ்சி யறிவழிந்து மாலாகி—அஞ்சாதே

433 ஆகம் பிரியா வவளை யறியாமல்
ஏகம்பர் தாமேவந் தெய்திலே—மோகங்கொண்

434 டார மருவி ய்சன்மார்பி லென்னையவர்
சேர வரவணைக்கத் தேடிலேம்—பாரடையத்

435 தாவும் விடையுடையோன் றன்மேற் றனத்தழும்பு
மேவுங் கலவி விளைக்கிலேம்—பூவினறும்

436 பாய லணுகிநலம் பாராட்டி யென்னையவர்
ஆய புலவி யகற்றிலேம்—நேயமுடன்

437 போக வுததியினிற் புக்கழுந்தி நெக்குருகி
ஆக மிருவருமொன் றாகிலேம்—ஆகத்

438 தணைத்த தழிய வவரணிந்த நீறென்
பணைத்த முலைமேற் படிலே—மணிக்களத்தோர்

439 இன்று மணந்தபடிக் கென்னுடம்பு சான்றாகக்
கொன்றை மணநாறக் கூடிலேம்—என்றிருந்து
440 வாழும் படிதன் மனத்திற் பிறந்ததெல்லாம்
தோழி யுடனிருந்து சொல்லுங்கால்—சூழும்
441 நெருக்கார மாலை நெடுநிலா வீசுந்
திருக்கா வணநிழலிற் சேயும்—திருத்தாள்சேர்
442 சீலம் படைத்துத் திருநீ றிடவயிற்றிற்
சூலை கொடுத்தாண்ட தொண்டனும்—ஓலையுடன்
443 சென்று தடுத்துத் திருவெண்ணெய் நல்லூரில்
அன்று படைத்த வடிவானும்—கொன்றைநறுந்
444 தேன்பாய் முடிமேற் றிருச்சேய்ஞ லூர்தன்னில்
ஆன்பால் சொரிந்தாட்டு மந்தணனும்—தேன்போலத்
445 தித்திக்கு மாறு திருவா சகஞ்சொன்ன
பத்திப் பெரும்பெருக்குப் பாவலனும்—எத்திசையும்
446 செல்ல வரிய சிவதத் துவமல்லா
தில்லை யெனவெழுதி விட்டோனும்—நல்லதவம்
447 சூழ்வாருஞ் சூழ்ந்துவரச் சூதத் திருநிழலின்
வாழ்வோன் மணிமறுகில் வந்தணுகத்—தாழ்குழலும்
448 முற்ற நினைந்தவெல்லா முன்வந்து கைப்புகுதப்
பெற்றவர்போல் வந்து பெரிதிறைஞ்சிப்—பொற்றொடியாள்
449 துய்ய புரிநூலுந் தோளுந் திருமார்பும்
மையல் பெருக வரநோக்கித்—தையலாள்
450 ஈசன்றன் மார்புநல் லெண்டோளு நீங்காத
வாச நறுங்கொன்றை மாலையே—பாசறையில்
451 வீசு பனிநீரு மிக்கவகிற் சந்தனமும்
பூச வுனக்குப் பொறாக்குமே—வீசிவரும்

452 போதாருந் தென்றல் புகுதுகைக்கு மாளிகையின்
வாதா யணந்திறந்து வைப்பையே—நாதம்

453 அளவே யளவேயென் றுயரிரா வூதும்
தூளேவே யுனக்குச் சுடாதே—குளிர

454 அடுத்த செழுங்கழுநீ ராலே படுத்த
படுக்கை சருகு படாதே—கடக்கவரி

455 தாயவரி கங்குலடன் மாமத னன்சொரியும்
சாயகங்க ளும்மீது தையாவே—மாயவிரா

456 எண்ணிலா வூழி யெறித்தாலு மிங்குனக்குத்
தண்ணிலா வேதுந் தழலாதே—நண்ணுமயல்

457 ஐய விடையாரு மன்னேயருந் தாமொறுக்கும்
வெய்ய வுரைகேட்க வேண்டாவே—பையவரும்

458 சேவின் மணியிசைக்குந் தீரா வலைகடற்கும்
கூவுங் குயிலுக்குங் கூசாயே—மேவிபகின்

459 முன்றி லுயர்பனேயின் மூரி மடற்குடம்பை
அன்றி லரிக்குரற்கு மஞ்சாயே—என்றாலும்

460 வெய்ய பசலை விளைவானேன் மேனியெங்கும்
துய்யமலர்க் கண்ணீர் சொரிவானேன்—செய்யவங்கை

461 வண்டு விழுவானேன் மற்றெனக்குச் சொல்லென்று
கெண்டை விழிமாது கேட்பளவில்— திண்டிறல்வேள்

462 காவி யொழிந்த கணேசொரிந்தா னவ்வளவில்
தேவர்க ளுதன் தெருவகன்றான்—பாவைமேல்

463 ஆர வடமு மணிந்தார் குளிர்ந்தபனி
நீரு மடவார் நிரப்பினார்—பேரிளம்பெண்

பேரிளம்பெண்.

464 திண்மை மதனன் செலுத்துகின்ற பேராண்மை
பெண்மை யழகின் பெரும்பெருக்குத்—தண்மலரோன்

465 நாவு மளவிறந்த ஞானத்தாற் பேரழகாற்
பூவு மரசாளப் போதுவாள்—தேவர்

466 அரச னிமையாத வாயிரங்கண் சூழத்
தருநிழலில் வாழத் தருவாள்—விரவி

467 இனிய கலைநல மெல்லா மதனன்
மனைவியையுங் கற்பிக்க வல்லாள்—கனைகடல்சூழ்

468 பாரைப் பெரிதுழைக்கப் பண்ணிப் பழையசுரர்
ஊரைப் பெரிதுழைக்க வொட்டாமல்—வாரிட்டுக்

469 கட்டுண் டனமென்று நாணிக் கவிழ்ந்துதலை
இட்டனபோற் சாய்ந்த விளமுலையாள்—கிட்டரிய

470 சைவப் பெருமை தமிழ்நா டறிவித்த
தெய்வப் புலவன் திருமுறையும்—வெவ்வமணர்

471 ஈருமத யானைக் கிடும்போது மஞ்செழுத்தைத்
தேரு மரசன் திருமுறையும்—சேரனுடன்

472 அன்று கயிலைக் கதிமதவெள் ளானையின்மேல்
சென்ற பெருமான் றிருமுறையும்—தென்றிசையின்

473 மாடப் பெருந்துறையில் வந்த வருட்கோலம்
தேடித் திரிந்தோன் திருமுறையும்—கூடவினி

474 தோதி யவர்கடிரு வுள்ளக் கருத்தினுள
கோதி னிலைமையெல்லாங் கும்பிட்டுச்—சோதிதிகழ்

475 அஞ்செழுத்து மேகம்ப ராடுந் திருக்கூத்தும்
நெஞ்சழுத்தி வைக்கு நிலைமையாள்—மஞ்சு

476 பொருந்துமணி மாளிகையிற் பூங்கவரி வீச
விரும்புமணி யாசனத்தின் மீதே—இருந்தெவரும்
477 பேச வரிய பிரானார் திருவார்த்தை
ஆசையுடன் கேட்புழிவந் தாங்கொருத்தி-வாசலின்கண்
478 நின்றா ளொருமறையோ னீறணிந்த கோலமுடன்
என்றாள் வரவிடுவை யென்றுரைத்துச்—சென்றெதிர்கொண்
479 டங்கை குவித்தோ ரரியா சனத்தினில்வைத்
தெங்கடவம் வந்தவா றென்றுரைசெய்—தங்கமுடன்
480 முன்னை மறைநூன் முதலாய வெக்கலையும்
நின்னி லறிவார் நிலத்தில்லை—மின்னுசடை
481 ஈச னிலைமைக்கு மேனையிமை யோர்நிலைக்கும்
வாசி யுரைதெளியும் வாறென்னப்—பூசுரனும்
482 என்னிலைமை சோதிக்க வென்றோ விதுசொன்னாய்
நன்னுதலே யென்றா நகைசெய்யா—உன்னி
483 இதனை யிதனுடனே யெண்ணலா மென்னும்
அதனை வினவுதலே யன்றி—மதியதனில்
484 எண்ணமிலா தார்போல வெல்லா மினிதுணர்ந்த
பெண்ணமுதே கேட்கப் பெறுதியோ—மண்ணுலகில்
485 குன்றி தனையொருபொற் குன்ற முடனிகரும்
என்று திரிவாரை யென்செயலாம்—துன்றிருள்போம்
486 விஞ்சு சுடருடைத்தாய் மின்மினியே வந்துதிக்கும்
செஞ்சுடரி னென்பாரைச் செய்யுமதென்-தஞ்சமெனக்
487 கல்லா னிழலிருந்த கண்ணுதலார் தம்முடனே
எல்லா ரையுந்தேவ ரென்றுரைத்தல்—நல்லாயொப்
488 பேது நிகரா விரும்பினையும் பொன்னினையும்
தாது வெனவுரைக்குந் தன்மைகாண்—மீதுலவும்

489 நீடுசுட ராழி நிலத்தேரி லீரிரண்டு
பாடு சுருதிப் பரிபூட்டித்—தோடார்
490 நளினத்துப் பாக னடத்த வெரிவாய்த்
துளவப் பகழி தொடுத்துக்—கொளுவியநாண்
491 மூரி யரவாக மூதண்ட முந்தாங்கும்
மேரு வெனுஞ்சயிலம் வில்லாக—ஆர்வமுள
492 மூவ ருயிர்வாழ முப்புரமு நீறாக
யாவர் பொருதா ரிமையோரில்—தேவர்
493 பழித்தபெரு வேள்வி பழுதாக வாள்விட்
டழித்த விமையவர்வே றார்தான்—இழைத்து
494 வதைப்பான் வருங்கூற்றை மார்க்கண்டற் காக
உதைத்தா ரிவரல்லா துண்டோ—எதிர்த்த
495 கழற்கான் மதன்மாளக் கண்மலரால் வெய்ய
அழற்றானை பேவினா ரார்தான்—நிழற்பொற்
496 கலையா னிடந்திட்ட கண்ணுக்கோ ராழி
விலையாக நல்கினார் வேறார்—நிலையாகத்
497 துன்னு மொருசிலந்தி சோணாடுங் காவிரியும்
மன்னி யரசாள வைத்தவரார்—பன்னெடுநாள்
498 தேடி யிருவர் திரியத் தெரியாமல்
நீடு சுடர்வடிவாய் நின்றவரார்—ஆடலென
499 உங்காரஞ் செய்தே யுலகுண்ட மாலயனைச்
சங்காரஞ் செய்துபின்னுந் தந்தவரார்—பங்கயன்மால்
500 வீந்த சுடலை விபூதி தரித்திருவர்
ஆர்ந்ததலை மாலை யணிந்தவரார்—மாய்ந்திடவே
501 நாரா யணருடனு நானுமுக னருடனும்
கூராய சூலமிசைக் கொண்டவரார்—சேர

502 எரிந்த பிறைபெயிற்றி னீரைந்து வாயும்
பரந்து செழுங்குருதி பாய—நெரிந்தொருவன்
503 மான்று கிடக்க மலைபான் மகளுடனே
ஊன்று விரலொன் றுடையவரார்—தோன்றியடல்
504 ஓத விடமுண் டுபயமிறத் தாமரைமேற்
கோதையர்க்குத் தாலி கொடுத்தவரார்—மாதவனைக்
505 கூடி யயனைக் கொடுத்தவரார் மோகினிபால்
நாடுமெழிற் சாத்தனையு னல்கினரார்—பாடார்ந்த
506 புத்தேளி ரன்னைப் புணர்ந்தவரா ரல்லினுமை
கைத்தாளங் கொட்டநடங் காண்பவரார்—மத்தமுறும்
507 ஆதிநெடு மாலுதிர மத்தனையுங் கைக்கலத்திற்
பாதிதனி லேநிறையப் பண்ணினரார்—வேதமுடன்
508 துண்ணெனவே யாழிபுகுஞ் சோமுகனைச் செற்றிடுமீன்
கண்ணை யுகிராற் களைந்தவரார்—கண்ணார்
509 ஆமைவடி வந்தனிலு மாதிவரா கந்தனிலும்
மாமுதுகோட் டைக்கரத்தால்வாங்கினரார்-தூமறையும்
510 பேசரிய சிம்புளாய்ப் பேரா டகனையடுங்
கேசரியை வள்ளுகிராற் கீண்டவரார்— கூசா
511 தடருஞ் சலந்தரனை யன்றாழி சூட்டி
உடலம் பிளந்தவர்வே றுண்டோ—படிவிண்
512 முழுதளந்த மாயன் முதுகெலும்பைச் செந்நீர்
ஒழுகவே வாங்கினர்வே றுண்டோ—பழுதெண்
513 தடமலரோ னுச்சித் தலையை யுகிரால்
உடனே குறைத்தவர்வே றுண்டோ—நெடுவிசும்பு

514 முற்றும் புதைத்தலையான் மோதுஞ் சுரநதியைச்
சுற்றுஞ் சடையிற் சுவறுவித்து—மற்றும்

515 பகீரதனின் றாழிநாட் பாதமலர் போற்ற
மகிதலத்தே போதுவித்தார் மற்றோர்—புகழைச்

516 செலுத்தச் சிறுத்தொண்டர் தேவியறுத் தாக்கிக்
கலத்திற் படைத்த கறியைத்—தலைகிட்ட

517 சுட்டியு மாலைச் சுரிகுஞ் சியுமுத்துங்
கட்டிளை நல்குங் கனிவாயும்—இட்டதொரு

518 வாளியுங் காது மருங்கு மணிவடமும்
தாளிணையுஞ் செம்பொற் சதங்கையுமாய்—மீளப்

519 பிறப்பித் தவர்தம் பெரும்பிறப்பை யெல்லாம்
அறுப்பிக்க வல்லவர்தா மற்றோர்—நறைக்கொன்றை

520 ஆதி தனையொழிய வாறாறு தத்துவத்தின்
மீது மகிழ்ந்திருக்கும் விண்ணவரார்—மாதிற்

521 பொருந்தி விடையாகப் பூந்துழாய் மாலை
விரும்பி நடத்தினார் வேறோர்—அரன்பெருமை

522 இன்னம் பலகோடி யில்லைபோ யாமிருந்து
சொன்ன பொழுதே தொலையுமோ—உன்னரிய

523 மூவா முதலா முதல்வனையு மூவுலகிற்
சாவார் பிறப்பார்க டங்களையும்—தேவாக

524 ஒக்க நினைவாருக் கல்லவோ வோரேழு
மிக்க நரகம் விதித்ததுகாண்—மைக்கண்

525 மருவார் குழலியென மற்றவளு மந்தப்
பெருவாழ் வுடைய பிரானைப்—பரவியவர்

526 தெய்வ வெழுத்தைந்து மோதித் திருநீறு
மெய்யி லணிய விதியற்று—மையறும்

527 எட்டெழுத்தை யோதி யிடுவார்மண் ணெப்பொழுதும்
கட்டுரைக்க வென்னக் கவுதமனார்—இட்டபெருஞ்

528 சாபத் தியல்பு தருமா மறையோர்செய்
பாபக் கலிகாலப் பண்புகாண்—கோபவிதழ்

529 மின்னே யெனச்சிறந்தும் வேதியரா கிப்பிறந்தும்
என்னே பெருமை யிருந்தவா—முன்னே

530 மறையி னெழுத்தைந்தும் வாயார வோதி
நிறைய வணிந்துதிரு நீறும்—பிறவியெல்லாம்

531 வாட்ட வறியாமல் வாளாப் பிறவிதனை
ஈட்டுவதே பாவ மெனவுரைத்து—வேட்டவெலாம்

532 ஒண்டொடியும் வேதியனுக் குள்ள மகிழ்ந்தளித்து
வண்டணையும் பூவணைமேல் வந்திருப்பப்—பண்டுவிடம்

533 உண்டபிரான் பாகத் தொருத்தி முலைத்தழும்பு
கொண்டபிரா னைக் குழுவெல்லாம்—தண்டகமா

534 நன்னாட்டுத் தேவர்க ளையகனார் சோணாட்டின்
முன்னாட்டு மன்றின் முதலியார்—தென்னாட்டில்

535 சூடு மபிடேகச் சொக்கனார் துங்கமணி
மாட நெடுவீதி வந்தணுக—ஆடகப்பூஞ்

536 சோதிச் சிலம்புக்குஞ் சூழ்பா டகத்துக்கும்
பாதத் தழகைப் பகிராதே—மாதிளநீர்

537 ஆன முலைபழகை யாரவிள வண்டலுக்கும்
நானநறுந் தொப்பலுக்கு நல்காதே—வானநிலா

538 ஆர மணித்தோ ளழகைக் கரும்புக்கும்
ஈரமிலா வல்லிக்கு மீயாதே—தாரைப்

539 பலவுயிரைத் தன்னதொடைப் பாளைக் களகம்
குலவு மழகைக் கொடாதே—கலவிநலம்

540 கொண்டதிரு மார்புங் குளிர்ந்த திருச்சாந்தும்
வண்டணியுங் கொன்றை மலர்த்தாரும்-தொண்டருள

541 அந்தா மரைமலரை யானந்த தாண்டவஞ்செய்
செந்தா மரையுந் திருச்சிலம்பும்—சிந்தை

542 மகிழ மகிழ வணங்கிவளை யெல்லாம்
நெகிழ நெகிழவெதிர் நின்று—சகமேற்

543 பிறவாம லெண்ணிறந்த பேரண்ட மாய்ந்தும்
இறவாத மேனி யிறைவா—உறவாய்ச்

544 சிரித்துமுகம் பார்த்துத் திருக்கொன்றை மாலை
தரித்ததிருத் தோளழகைத் தாரீர்—ஒருத்திகுறி

545 ஆக மிசையில்லை யாமாகி லிப்பொழுதே
ஏக வுமைவிட் டிருப்பேனோ—ஆகிலுநான்

546 கட்டி யிறுகக் கலந்துருகி யொன்றாகி
இட்ட குறியழித்தா லியார்தவிர்ப்பார்—பட்டதுபண்

547 டாவல்கெடப் புல்லி யகலாம லியான்வளைத்தால்
ஏவரெனைத் தள்ளியுமை பேசுவிப்பார்—மேவியெனைப்

548 புல்லி யொருக்காலும் போகா வகைபிணித்து
வல்லபடி காண மாட்டேனோ—நல்லமட

549 நாண்கொண்ட தாருவன நங்கையரைப் போலமனம்
வீண்கொண்டு போக விடுவேனோ—மாண்கொண்டு

550 பூத்ததிரு நீறும் புயமுந் திருமார்பும்
ஏத்து மவர்க்கருளீ ரென்னென்று—வாய்த்தசொலால்
551 ஆவதெல்லாம் பார்த்தா ளவளுந் தழுவுகைக்கங்
காவதெல்லாம் பார்த்தா லவைவருமோ—ஆவி
552 உருகும் வகைகாத லுண்டாக நோக்கி
விரவுநகை கொண்டேகி விட்டார்—தரளம்
553 இடையு நகைபா ரிவரெழுவ ரிங்ஙன்
கொடிய பெருங்காதல் கொள்ள—முடிமேல்
554 நிலாவுடையான் றேமா நிழலுடையான் சேரன்
உலாவுடையான் போந்தா னுலா.

இரட்டைப்புலவர் அருளிய
ஏகாம்பரநாதருலா முற்றிற்று.

"துணைத்தா மரையடி யும்பவ ளத்திர ணன்குறங்கும்
பணைத்தோ ளகலமுங் கண்டத்து நீலமு மண்டத்துமின்
பணைத்தா லனசடை யுந்திரு முக்கணும் பெண்ணோர்பக்கத்
தணைத்தா ரெழிற்கம்ப ரெங்கள் பிரானார்க் கழகியவே."

பட்டினத்துப்பிள்ளையார்.

திருச்சிற்றம்பலம்.

"பண்ணி லோசை பழத்தினி லின்சுவை
பெண்ணொ டாணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி வடிவுவே றாயவன்
கண்ணி லுண்மணி கச்சியே கம்பனே."

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுசுவாமிகள்.

அம்மானையுட் சில.

சித்தம்பூர்வாழுஞ்சிவனளித்தபிள்ளையார்
மெத்தப்பெருவயிறுவீங்கினர்காணம்மானை
மெத்தப்பெருவயிறுவீங்கினரேயாமாயின்
இத்தரையின்மீதவருக்கேச்சலவோவம்மானை
இரவுபகல்குட்டுணிக்கிங்கேச்சுண்டோவம்மானை.

ஆதாரமாங்குடந்தையாதிகும்பேச்சுரனார்
கோதாடுமன்மதனைக்கொன்றெரித்தாரம்மானை
கோதாடுமன்மதனைக்கொன்றெரித்தாராமாயின்
மாதாபிதாக்கள்பழிவாங்காரோவம்மானை
வாங்குதற்குமுன்வாயின்மண்விழுந்ததம்மானை.

மட்டுவார்கூந்தலுமையாண்மனமகிழக்
கட்டுமாவொன்றுளதுகச்சியிலேயம்மானை
கட்டுமாவொன்றுளதுகச்சியிலேயாமாயின்
இட்டமாய்நற்கனிகாயில்லையோவம்மானை
இல்லாமற்கல்லாலெறிவாரோவம்மானை.

பூங்காவனஞ்சூழும்புள்ளிருக்குவேளூரான்
பாங்கானதென்மதுரைப்பாணன்காணம்மானை
பாங்கானதென்மதுரைப்பாணனேயாமாயின்
தாங்காதிழைபெடுத்துத்தைப்பனோவம்மானை
தையலுக்குநல்லசமர்த்தன்காணம்மானை.

வில்வந்திருச்சடிலமேவுமயிலேச்சுரனார்
செல்வந்தழைந்தநிறைசெல்வர்காணம்மானை
செல்வந்தழைந்தநிறைசெல்வரேயாமாயின்
இல்லங்கடோறுமிரப்பதேனம்மானை
இரந்தார்விதிதலைவந்தேறலாலம்மானை.

எண்ணரியகாஞ்சியில்வாழேகாம்பரநாத
அண்ணறிருமேனியெங்குமாகாசமம்மானை
அண்ணறிருமேனியெங்குமாகாசமாமாயின்
வண்ணமுலைமார்பின்வடுப்படுமோவம்மானை
மாவடியில்வாழ்பவர்க்குவடுவரிதோவம்மானை.

அடர்ந்துவாழுங்குடந்தைபாராவமுதர்
மடந்தைபாகற்கேறுமாடுகாணம்மானை
மடந்தைபாகற்கேறுமாடுதானாமாயின்
கடந்தபாதம்பிரண்டுங்காணாரோவம்மானை
கண்ணிரண்டும்பூவானாற்காண்பரோவம்மானை.

தெண்டிரைசூழ்தில்லைச்சிவகாமித்தாயார்க்குக்
கண்டமெல்லாஞானக்கரும்பதுகாணம்மானை
கண்டமெல்லாஞானக்கரும்பதுவேயாமாயின்
அண்டர்பிரானலைதனிலாடானோவம்மானை
ஆடிப்புலியூரமர்ந்தனன்காணம்மானை.

விரிந்தபுகழ்புள்ளிருக்குவேளூர்வயித்தியனார்
பரிந்துவினைதீர்க்கவல்லபண்டிதர்காணம்மானை
பரிந்துவினைதீர்க்கவல்லபண்டிதரேயாமாயின்
மருந்துவிலைக்கைக்கூலிவாங்காரோவம்மானை
வாயிலேமண்போட்டுவாங்குவர்காணம்மானை.

பாட்டுவரிச்சுரும்பர்பாடுஞ்சிதம்பரனார்
மாட்டிடையன்றேடமன்றிலாடெடுத்தாரம்மானை
மாட்டிடையன்றேடமன்றிலாடெடுத்தாராமாயின்
ஆட்டுக்காரன்றன்னையறிந்ததெவரம்மானை
அறிந்தனகாண்காற்புலியுமரைப்பாம்புமம்மானை.

மாலறியாக்கள் ளனவன்வந் துமன் றுளேபுகுந்து
கோலமுட னெடுத்துக்குன் றெளித்தானம்மானை
கோலமுட னெடுத்துக்குன் றெளித்தா னுமாயின்
கா னுதலைதோலெ லும்புகண்ட துண்டோவம்மானை
கண்டலவோவிருகழுகுகாத் திருப்பதம்மானை.

ஒற்றியூர்த்தியாகேசரொருபெண்பாற்சுந்தரரை
உற்றுநீசத்தியம்பண்ணென் றெளித்தாரம்மானை
உற்றுநீசத்தியம்பண்ணென் றெளித்தாராமாயின்
குற்றமுண்டோவன்பர்மேற் கோபமோவம்மானை
கோபமேதோமகிழ்வாய்க்கொண்டிருந்தாரம்மானை.

நாணென் றுனஞ்சிருக்குநற்சாபங்கற்சாபம்
பாணந்தான்மண்டின்றபாணங்காணம்மானை
பாணந்தான்மண்டின்றபாணமேயாமாயின்
சேணூர்புரமெரித்தசேவகமேதம்மானை
சேவகத்தைச்சொல்லச்சிரிப்பலவோவம்மானை.

உ

எண்ண மெலாந்த னிணையடி யேறவைத் தானியம்பும்
வண்ண மெலாந்தன் பெயராக வைத்தனன் வாருடலிற்
பண்ண வெலாந்தன் பணியாக வைத்தனன் பண்ணவர்சூழ்
அண்ணல்பஞ் சாக்கர வேந்த லருளுமி தற்புதமே.

தேசிக நாதன் சிவஞான தேவன்செங் கைத்தலமுன்
வீசினின் றுடிய வம்பல வாணன் வியனுலகம்
பேசிய பஞ்சாக் கரவன் பிறங்கருட் டாண்மலரைக்
கூசினின் றேத்திய மாதவத் தார்க்கென் குறையுளதே.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

ஆதீன வெளியீடுகள்.

1. முத்திபஞ்சாக்கர மாலை—பதவுரையுடன். 2-ம் பதிப்பு.
பஞ்சாக்கர தேசிகர்மாலை— " "
2. ஞானபூசாவிதி—பழையவுரையுடன். "
3. நல்லூர் மாசிமகோற்சவ வைபவம். "
4. மண்ணிப்படிக்கரை ஸ்தலமகாத்மியம்.
5. காருண்யாமிர்த தீர்த்தமகிமை. "
6. இராமாயணதாற்பரியசங்கிரகம் உரையுடன்.
7. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள்மீது
தோத்திரப்பா உரையுடன் (முதற்பாகம்)
8. சிவஞானபோதம்—சூத்திரமூலமும்உரையும்.
9. சித்தாந்தமரபு, சித்தாந்தமரபுகண்டனம்,
சித்தாந்தமரபுகண்டனகண்டனம் குறிப்புடன்.
10. ஸ்ரீ நமச்சிவாயமூர்த்தி மும்மணிக்கோவை.
11. திருநெல்வேலித்தேவாரப்பதிகம் உரையுடன்.
12. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள்மீது
தோத்திரப்பா உரையுடன் (2-ம் பாகம்)
13. சைவசமயம்.
14. பஞ்சாக்கரதேசிகர் அந்தாதி—உரையுடன்.
15. சித்தாந்தப் பிரகாசிகை—குறிப்புடன்

16. சுதந்திரத்திருநாள்.
17. கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டுவிடுதூது
—உரையுடன்.
டாக்டர், ஸ்ரீமத் உ. வே. சா.

18. திருச்செந்தூர்—கடற்கரை முருகர்கோயில் (ஆங்கிலம்)
19. ஞான சூடாமணி.
20. சிவஞானபோதம் (அச்சில்)
ஸ்ரீமாதவச் சிவஞானசுவாமிகள் சிற்றுரை.
21. சுவாமிநாத தேசிகர் பிரபந்தத்திரட்டு (அச்சில்)

---

22. பூப்பிள்ளையட்டவணை முதலியன.
23. சதமணிக்கோவை பொழிப்புரை.
24. திருவள்ளுவரும் பெரியபுராணமும்.
25. சமயம்.
26. திருச்சிற்றம்பலதேசிகர்கலம்பகம் உரையுடன்.
27. அத்துவிதவாக்கியத்தெளிவுரை.
28. சிவஞானபோதச்சூத்திரம் உரை.
29. திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ் உரையுடன்.
30. சிவஞானசித்தியார் ஆராய்ச்சி (வேறுபதிப்பு)
31. திருப்பள்ளியெழுச்சி (வேறுபதிப்பு)
32. முத்திபஞ்சாக்கரமாலை முதலியன.
33. ஸ்ரீமாதவச்சிவஞானசுவாமிகள் பிரபந்தங்கள் 1
34, 35. துண்டுப்பிரசுரங்கள்.
36. திருவாவடுதுறையாதீனவரலாறு.

37. பாரததாற்பரியசங்கிரகம்உரையுடன்.
38. உலகுடையநாயனார்கழிநெடில்.
39. கலைசைப்பதிற்றுப்பத்தந்தாதி (மாதவ).
40. அம்பலவாணதேசிகர்நினைவுமலர்.
41. சந்தானாசாரியபுராணசங்கிரகம்.
42. சந்தானகுரவர்நான்மணிமாலை.
43. விநாயகரகவல்உரை.
44. திருவுந்தியார்உரை (மெய்கண்—1)
45. திருக்களிற்றுப்படியார்உரை (மெய்கண்—2)
46. கயிலைபாதிகாளத்திபாதியந்தாதியுரை.
47. நமச்சிவாயமூர்த்தி ஆற்றுப்படை (வேறுபதிப்பு)
48. சைவப்பேரரசு.
49. திருவஞ்சைக்களம்தேவாரம் உரை.
50. திருமந்திர சிந்தனை (நவாக்கரி).
51. வடதிருமுல்லைவாயிலந்தாதியுரை (மாதவ).
52. போலிவினாமறுப்பு.
53. சோமேசர்முதுமொழிவெண்பா மூலம்.
54. சிவஞானபோதம் பழையவுரை (மெய்கண்ட— 3)
55. திருக்கோகரணம் தேவாரம்உரை.
56. திருஞானசாகரம்.
57. இருபாஇருபது உரை (மெய்கண்ட—5)
58. துகளறுபோதம் பொழிப்புரை.
59. கந்தபுராணதத்துவம்.
60. சகலகலாவல்லிமாலை உரை.

61. திருவெம்பாவை பதவுரை—பொழிப்புரைகள்

62. திருப்பருப்பதம் தேவாரம்உரை.

63. திருவெம்பாவைக்கருத்துமுதலியன.

64. சிவபூசைத்திரட்டு.

65. சிவப்பிரகாசம் உரை (மெய்கண்ட—7)

66. திருஞானசம்பந்தர்பிள்ளைத்தமிழ் ஆராய்ச்சி

67. இரட்டையர் பிரபந்தங்கள் :—
தில்லைக்கலம்பகம், திருவாமாத்தூர்க்கலம்பகம்,
ஏகாம்பரநாதருலா முதலியன.

68. அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் (மாதவ)

69. செம்பியன்மாதேவியார்

70. தொட்டிக்கலை—மதுரகவி—ஸ்ரீ சுப்பிரமணிய
முனிவர் பிரபந்தங்கள் (முதற்றொகுதி)

71. கவிராக்ஷஸ—ஸ்ரீ கச்சியப்பமுனிவர்
பிரபந்தங்கள் (முதற்றொகுதி)

72. ஸ்ரீ காசிகாண்டம் முழுவதும் மூலம்.

கரத்தாற் றெழுதிடினும் கண்டிறைஞ்சி னாலும்
சிரத்தால் வணக்கஞ் செயினும் — உரைத்திடினும்
தில்லைக்கப் பானின்று சேவித்தா லுஞ்சனனம்
எல்லைக்கப் பானிற்கு மே.